வாய்ப்புகள் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்டு வணிகத்தில் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. ஆகவே, நடைமுறைசார்ந்த கூறுகளில், ''வணிக நிறுவனம் ஒன்றினால் புலனாகக் கூடிய ஒரு பொருள் அல்லது சேவையாக மாற்றப்படும் நிலையில், நிதிசார்ந்த இலாபத்தை அளிக்கக்கூடிய ஒரு வணிகப் பொதுக்கருத்தே வாய்ப்பு ஆகும்'' என வாய்ப்பு என்ற சொல் வரையறுக்கப்படலாம். இந்நிலையில் வணிகத்தில் வாய்ப்பானது கொண்டிருக்கக்கூடிய உண்மையான பொருள் என்ன என்ற கேள்வி எழலாம். அவை வணிகக் கருத்துக்களினின்றும் மாறுபட்டனவா? - நமக்குத் தெரிந்தவரை, வணிகக் கருத்துக்களும் வணிக வாய்ப்புக்களும் பெரும்பாலும் ஒன்றிற்கு மாற்றாக மற்றொன்று பயன்படுத்தப்பட்டே வருகின்றன. வாய்ப்பு என்பது தொழில்முனைவோரானவர் பல்வேறு கருத்துக்களிலிருந்தும் தமது சொந்த ஆற்றல்களுக்குப் பொருந்தக்கூடியதை தேர்ந்தெடுக்கும் நடைமுறை சாத்தியமுடைய ஒரு வணிகக் கருத்தாகக் கருதப்படுகின்றது. அவ்வித வாய்ப்பை தொழில்முனைவோரானவர் சிறந்த முதலீட்டுத் திட்டமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்.

### 1. வாய்ப்புகள் மதிப்புருவாக்கத்துடன் தொடர்புடையன Opportunities Relate to the Creation of Value

தொழில்முனைவோரானவர் பொருளின் மதிப்பை தெரியப்படுத்த வேண்டும். இவர் பொருளை குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. இவர் பொருளை சரியான மதிப்பில் வெளியிட வேண்டும். மதிப்புக் குறைப்பானது சில சமயங்களில் பொருளின் தோல்விக்கு வழிவகுத்து விடலாம். விலை பொருளின் மதிப்பிற்கு ஏற்றதாக இருந்தால் மட்டுமே மக்கள் செலுத்துவர்.. ஆகவே பொருளுக்குரிய சரியான விலை நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

### 2. வாய்ப்புகள் அனைவருக்கும் ஒத்தன அல்ல Opportunities are not Similar to All

அனைவருக்கும் வாய்ப்புக்கள் ஒன்றாக இருப்பதில்லை. இதன் காரணம் மிகவும் வெளிப்படையானதாகும். நாம் ஒவ்வொருவரும் வாய்ப்பு ஒன்றினை துரத்திப்பிடிப்பதில் சரிசமமான அளவில் தேர்ச்சி பெற்றிருக்க மாட்டோம். ஒவ்வொரு தனிநபர் அல்லது குழு கொண்டுள்ள முன் அனுபவமானது வாய்ப்புக் களைத் தேடிப்பிடிப்பதில் அவர்களைக் கூடுதல் அல்லது குறைவான ஆற்றலுடன் செயல்பட வைக்கிறது. தவிரவும் ஒவ்வொரு தனிநபரின் புரிந்துகொள்ளும் திறனும் மாறுபட்டதே. அதாவது ஒருவரால் வாய்ப்பு எனக் கருதப்படும் ஒன்று மற்றவரால் அவ்வாறு கருதப்படாமல் இருக்கலாம். இது ஒருவர் அதனை நடைமுறைப்படுத்தும் ஆற்றல் உடையவரா அல்லது இல்லையா என்பதைப் பொறுத்து அமைகிறது. கருத்து ஒன்றினை செயல்படுத்துவதற்கான திறன் தனிநபர்களிடையில் மாறுபடுவதால், வாய்ப்புகளும் தனிநபர்களிடையில் மாறுபட்டனவாகவே தோன்றுகின்றன.

### 3. சிலர் மட்டுமே வாய்ப்புகளைத் தேடித் துரத்திப் பிடிக்கின்றனர் Only Some Pursues Opportunities.

வாய்ப்புகள் வெளிப்படையாகக் காணப்பட்டாலும், சிலர் மட்டுமே அவற்றைத் துரத்திப் பிடிக்கின்றனரே அன்றி அனைவரும் அவ்வாறு செய்வ தில்லை. வணிக வாய்ப்பு ஒன்றை எண்ணிப்பார்ப்பவர்களை விட யார் ஒருவர் தாமே முயற்சித்து வாய்ப்புக்களை உண்மையில் துரத்திப் பிடிக்கின்றாரோ அவருக்கே இலாபம் கிடைக்கின்றது. புதியதை உருவாக்கும் எண்ணம் அற்புதமானது. ஆனால் அது செயல்வடிவம் பெறவில்லை ஆனால் அது வெறும் ஆற்றலின் செலவழிப்பே ஆகும். இதுவரையுள்ள தன்னுடைய நிலையில் திருப்தியடையாதவர்களே பெரும்பாலும் வாய்ப்பைத் துரத்திப்பிடிக்கின்றனர். வாய்ப்புக்களைத் துரத்திப்பிடிக்க உண்மையான முயற்சியை ஒருவர் எடுத்தல் அவசியமானதாகும்.

**4. சிக்கலான வாய்ப்புகள் இயங்காது Complex Opportunities do not Work**



சில வாய்ப்புக்களை நடைமுறையில் வணிகமயமாக்கும் பொழுது அவற்றின் இயக்கத்திற்கு என பெருமளவில் நபர்கள் தேவையாக இருக்கின்றனர் பல்வேறு கட்டங்களும் பாகங்களும் ஒருங்கிணைக்கப்பட வேண்டியதாகவும் இருக்கின்றது. இவை சிக்கலான வாய்ப்புக்கள் என குறிப்பிடப்படுகின்றன. வாய்ப்பு ஒன்று அதிகளவில் சிக்கலானதாக இருக்கும் நிலையில் அதனை அடைவதும் சாத்தியமற்றதாகவே இருக்கும். சில தொழில்முனைவோரிடம் கருத்துக்கள் இருக்கும். ஆனால் அதனை பயன்படுத்த முயற்சிக்கும் பொழுதுதான் அவர்கள் அதற்கு அதிக எண்ணிக்கையில் நபர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதை உணர்வர். அவ்வித சிக்கலான வாய்ப்புகள் சாதாரணமாக இயங்குவதில்லை. ஆகவே அவை முறிந்து விடும்.

**5. நன்கு வளர்ச்சியுற்ற சந்தைகளில் வாய்ப்புகள் அரிதாகவே காணப்படுகின்றன Opportunities Found Rarely in Well Grown Markets**

நன்கு வளர்ச்சியுற்ற சந்தைகளில் எப்பொழுதும் வாய்ப்புக்கள் காணப் படுவதில்லை. சந்தை ஒன்று நன்கு வளரத் தொடங்கியவுடன் அங்குள்ள முதலீட்டு வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு என தொழில்முனைவோர் அதிக எண்ணிக்கையில் அவ்வித சந்தைகளுக்குள் நுழைவர். அப்படியென்றாலும் கூட, ஒரு சிலரே அங்கு நீடித்திருப்பர். ஏனெனில், அளிப்பு மற்றும் தேவையின் சமனற்ற நிலையினால் அவர்கள் வெளியேற்றப்படலாம்.

**6. வாய்ப்புகள் தொழில்முனைவோரது கண்டுபிடிப்புகளின் வெளிப்பாடாக இருக்க வேண்டிய அவசியமில்லை Opportunities**

**Need not Necessarily the Outcome of Inventions made by the Entrepreneur**



தொழில்முனைவோர் கண்டுபிடிப்பாளராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் பல ஷதொழில்முனைவோர் சில வகையான தொழில்நுட்பம் சார்ந்த கண்டுபிடிப்புகளின் அடிப்படையிலான வாய்ப்புகளைத் தேடி தமது காலம் மற்றும் முயற்சியினை செலவிடுகின்றனர். இது ஆச்சர்யப்படத்தக்கதாகவும் ஏன் விரும்பத்தக்கதாகவும் கூட இருக்கிறது. இருப்பினும் இது அவசியமில்லை

கருத்துருவாக்கம் என்பது ஒரு செயலை பற்றியும் உரு பொருளை பற்றிய ஒருவரின் தனிப்பட்ட எண்ணங்களை கருத்து உருவாக்கம் எனப்படும்

ஒருவா் ஒரு தொழிலினை பற்ற தான் கொண்டு உள்ள எண்ணங்களை கருத்துருவாக்கம் எனப்படும்.

ஒருவரை பற்றிய உயா்ந்த எண்ணங்கள் கூட தவறான அபிப்ராயங்கள் ஆகலாம் என்று மேரி கவுல்டா் என்பவா் குறிப்பிடுகின்றாா்.

நாம் பலரை பற்றி உயா்ந்த எண்ணங்கள் கொண்டு அவரை போற்றுதல் செய்யலாம். ஆனால் உண்மையில் அது சரியானதாக இருக்காது.

## 3.4 வாய்ப்பு ஆய்விலுள்ள கட்டங்கள்

## Steps in Opportunity Analysis

வாய்ப்பு ஆய்வில் மூன்று கட்டங்கள் அடங்கியுள்ளன:

1. வணிகச் சுற்றுச்சூழலைக் கண்ணோட்டம் விடுதல் (Scanning the Environment of Business).
2. வாய்ப்புகளை வடிகட்டுதல் (Shortlisting the Opportunities).
3. பொருளை முடிவு செய்தல் (Finalising the Product).

குறிப்பு

**1. வணிகச் சுற்றுச்சூழலைக் கண்ணோட்டம் விடுதல் Scanning the Environment of Business**

வாய்ப்பு ஆய்வின் முதல் கட்டமானது சுற்றுச்சூழலை கண்ணோட்டம் விடுதலாகும். இது கருத்துக்களின் உருவாக்கத்தை ஏதுவாக்குகிறது. வணிகம் சார்ந்த முறையில் சாத்தியமாகக்கூடிய கருத்துக்களை (எவ்வளவு முடியுமோ அவ்வளவு) முயற்சித்து உருவாக்குவது வளமிக்க தொழில்முனைவோரது பணியாகும். சுற்றுச்சூழலைக் கண்ணோட்டம் விடுதலானது பின்வரும் வழிகளில் கருத்துக்களை உருவாக்க உதவுகிறது:

1. நண்பர்கள், உறவினர்கள், வணிகர்கள், தொழிலதிபர்கள் மற்றும்வணிகம், வணிகவியல் மற்றும் தொழில்களோடு தொடர்புடைய நபர்களுடன் கலந்துரையாடுதல்.
2. மாவட்ட தொழில் மையங்கள் (DICs), சிறு தொழில்கள் சேவை நிறுவனங்கள் (SISIs), தொழில்முனைவு வளர்ச்சி நிறுவனங்கள், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தொழில் மற்றும் வணிகவியல் கழகம், தொழில் கழகங்கள் போன்ற வளர்ச்சி முகவாண்மைகளுடன் தொடர்பு கொள்தல்.
3. வணிக வங்கிகள் மற்றும் பேரளவுத் தொழிலகங்களின் விற்பனை வளர்ச்சி மையங்களின் தொழில்நுட்ப கலந்தாய்வு மையங்களை அணுகுதல்.
4. சமூகத்தால் விரும்பப்படுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளைக் கண்டுணர்தல்.
5. இணையத்தைப் பார்வையிடுதல் (Internet Browsing).

**2. வாய்ப்புகளை வடிகட்டுதல் Shortlisting the Opportunities**

சுற்றுச்சூழலில் வாய்ப்புகள் வரையறையில்லாமல் இருக்கின்றன. ஆகவே வளமிக்க தொழில்முனைவோர் பல கருத்துக்களை உருவாக்குகின்றனர். ஆகவே இவற்றுள் இரண்டு

குறிப்பு

அல்லது மூன்றைக் கூர்ந்தாராய்வதற்கு என தேர்ந்தெடுத்தல் அவசியமாகிறது. இந்த ஆய்வானது, ஞறுமுவு ஆய்வின் அடிப்படையில் செய்யப் படலாம். இது இறுதிப் பொருளை முடிவு செய்ய தொழில்முனைவோர்க்கு உதவுகிறது. இவர்களின் பலத்திற்குள் அடங்குவன- கல்விசார்ந்த அல்லது தொழில் நுட்பம்சார்ந்த கல்வித் தகுதி, ஆற்றல்கள், வியாபாரம்சார்ந்த அறிவு, குடும்பத் தொடர்புகள் போன்றன. இதன் பலவீனங்களுள், தொழில்முனைவோர் இயல்பு, நிதிசார்ந்த பின்னணி, சந்தையின்மை போன்றன அடங்குகின்றன. மேலும், நிலைத்தன்மை, வளர்ச்சி, சந்தையிடக்கூடிய ஆற்றல், தயாரிப்பதற்கு தேவைப்படும் காலம் போன்ற பொருள் தொடர்பான குறிப்பிட்ட காரணிகளும் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். எதிர்காலம் அவ்வளவாக நிலையானதாக இல்லாத ஒரு பொருளைத் தயாரிப்பது மிகவும் அபாயகரமான ஒரு திட்டமாகவே இருக்கும். அவ்விதப் பொருளை தயாரிக்கக்கூடிய கருத்தை அல்லது வாய்ப்பை கைவிடுதல் வேண்டும்.

வாய்ப்புகளை முடிவு செய்தவுடன் தொழில்முனைவோரானவர் கருத்துக்கள் தொடர்பாகவும், அவற்றின் தொழில்நுட்ப பொருளாதார சாத்தியத்தன்மை தொடர்பான சாதக பாதகங்களையும் நிதி நிறுவனங்கள் போன்றவற்றுடன் கலந்துரையாட வேண்டும். அவைகளது குறிப்புரைகளும் நோக்குகளும் எதிர்மறையானதாக இருப்பின், தொழில்முனைவோர் அவ்விதப் பொருட்களைக் கைவிட்டு விட்டு புதிய வாய்ப்புக்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்க வேண்டும். இதன் காரணம் என்னவென்றால், நிதி நிறுவனங்களின் ஆதரவற்ற திட்டங்களுக்கு அவற்றிடமிருந்து நிதியைப் பெறுவது கடினமாகி விடும். நிதி நிறுவனங்களின் ஆதரவு கிடைத்துவிட்ட நிலையில், அவ்வித வாய்ப்புக்களை பயன்படுத்தி நிறுவனத்தை அமைக்க தொழில்முனைவோர் தயங்கக் கூடாது.

குறிப்பு

### 3. பொருளை முடிவு செய்தல் Finalisation of the Product

அடுத்த கட்டம் பொருளை முடிவு செய்தலாகும். மேலே கட்டம் எண் 2-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு அல்லது மூன்று கருத்துக்களுள் ஏதேனும் ஒன்றை இறுதியாக முடிவு செய்வதற்கு என ஏதேனும் சில அளவுகோல்கள் வேண்டும். அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு:

1. திட்டத்திற்குத் தேவைப்படும் மொத்த முதலீடு.
2. திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் முதலீடு மீதான மீள்வருகை.
3. சாதாரணப் பங்கு முதல் மீதான மீள்வருகை.
4. எதிர்பார்க்கப்படுகின்ற விற்பனை அளவு.
5. இலாபங்கள் மற்றும் இலாபத் தன்மை.

தொழில்முனைவோரானவர், வடிகட்டிய இரண்டு அல்லது மூன்று கருத்துக்களுள் திட்டம் ஒன்றினை மேற்கொள்வதற்கு மிகவும் சாத்தியமாக உள்ளதாக அவர் கருதும் கருத்து ஒன்றினைத் தேர்ந்தெடுக்கிறார். கருத்தினை உருவாக்கிய பிறகும் கூட தொழில்முனைவோரானவர் அத்திட்டத்தின் வெற்றி வாய்ப்புமிக்க அமைப்பு மற்றும் இலாபகரமான மேலாண்மைக்கு என கீழே தந்துள்ளவாறு பல இரகத்திலான தகவல்களையும் சேகரிக்க வேண்டும்.

1. தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களில் செய்யப்பட வேண்டிய மொத்த முதலீடு.
2. மூலப் பொருட்களின் ஆதாரங்கள்.
3. கட்டமைப்பு வசதிகள்.
4. திட்டத்தின் அளவு.
5. ஆற்றல்மிக்க மற்றும் ஆற்றலற்ற மனித சக்தியின் கிடைக்கும் தன்மையும் தேவையும்.
6. மொத்த நிதித் தேவை.
7. அரசின் கொள்கை

குறிப்பு

8. நிறுவனம் ஒன்றைத் தொடங்க அரசால் பின்பற்றப்படும் நடைமுறை.
9. அரசால் அளிக்கப்படும் ஏதேனும் வெகுமதிகள், உதவித் தொகைகள்,விலக்குகள் போன்றன.

மேற்கண்ட அம்சங்களைக் கருத்தில் கொண்டு, தொழில்முனைவோரானவர் வணிகவியல்சார்ந்த மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த சாத்தியத்தன்மையைக் கொண்டுள்ள வாய்ப்பைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும், வாய்ப்பானது தொடர்ச்சியாக நீண்டதொரு காலத்திற்கு போதுமான மீள்வருகையை தரவல்லதாகவும், மாறுகின்ற காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப பரவலாக்கப்படக் கூடிய தன்மை பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

## 3.5 வணிக கருத்தரங்கம்

ஒருவா் ஒரு வணிகத்தின் மீது தான் கொணடுள்ள மொத்த அபிப்ராயங்களை வணிக கருத்துருவாக்கம் எனப்படும். மேலும் வணிகமானது தொடா்ந்து நல்லமுறையில் செயல்பட்டு கொண்டு இருத்தல் அது நல்ல வணிகம் என்று வணிகத்திற்கு வெளியே உள்ள நபருக்கு தோன்றலாம். ஆனால் உண்மையாக வணிகத்தினை நடத்துவோரிடம் இருந்து ஆலோசனைகள் பெற்றால் தான் அது உண்மையான வணிக கருத்து உருவாக்கம் எனப்படும்.

வணிகத்தினை நடத்த தன் கொண்டுஉள்ள எண்ணத்திகை வணிக கருத்துருவாக்கம் எனப்படும்.

வணிக கருத்துருவாக்கம் முறைகள்

- ✓ சுற்று புற சூழல்நிலை
- ✓ புதுமை புனைதலும் புதுமையும்
- ✓ மூளை தூண்டல்
- ✓ நோக்க குழுக்கள்
- ✓

குறிப்பு

**1.சுற்றுசூழல்**

வணிகத்தின் கருத்து உருவாக்கதில் சுற்றுசூழல் பெரும் பங்கு வகிக்கின்றது. வணிகமானது பிற செயல்களை அல்லது பிறரின் தூண்டுதல், ஆர்வம் நம்பிக்கை ஆகியவற்றின் தாக்தினால் புதிய தொழில்முனைவோர்கள் உருவாகின்றனர். இதன்மூலம் புறச்சுழல் தாக்கதில் பெரும்பாலான வணிகர்கள் உருவாகின்றன எனலாம். கருத்துக்களை உருவாக்க தொழில்முனைவோர் பயன்படுத்தக்கூடிய ஒரு நுட்பம் சுற்றுச்சூழல்சார்ந்த கண்ணோட்டம் விடுதலாகும். இதன் பொருள் உருவாகின்ற போக்குகளை கண்டுணர்வதற்கு என சுற்றுச்சூழலை கண்ணோட்டம் விட்டு, முடிந்தவரையில் தகவல்களைத் திரட்டி, அதிலிருந்து தேவையானவற்றை வடிகட்டி எடுத்துக் கொள்தலாகும். நம்மைச் சுற்றியுள்ள உலகை கண்ணோட்டம் விட்டு தனது சொந்தக் கருத்துருவாக்கத்தை தூண்டக்கூடிய சில முக்கியமான கருத்துக்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது:

1. முக்கியமான உனது உள்ளூர் மற்றும் பெருநகர செய்தித்தாள்களைப்படி
2. வணிகப் பதிப்புகளைப் படி
3. பிரசித்தி பெற்ற நுகர்வோர் மற்றும் செய்தி சஞ்சிகைகளைப் படி
4. சிறந்த விற்பவர் பட்டியல்களை சீராய்வு செய்.
5. அரசு மற்றும் நுகர்வோர் பதிப்புகளை சீராய்வு செய்.
6. உரிய வியாபாரப் பதிப்புகளை வாங்கு.
7. வணிக விஷயங்களில் கவனம் செலுத்து.
8. உயர்ந்த முக்கியமான நேரங்களில் ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து சீராய்வு செய்.
9. புத்தக நிலையம் ஒன்றின் சஞ்சிகைகளின் பிரிவை சுற்றிப்பார்.

10. உள்ளூர்க் கடை வீதிகளில் சுற்றித்திரிந்து அங்கு கடைகளில் எந்த விதமான பொருட்கள் விற்பனைக்கு வாங்கி வைத்துள்ளனர் என்று பார்.



சுற்றுச்சூழலை கண்ணோட்டம் விடுவதன் மூலம், ஒருவரால் வேண்டிய அளவு தகவல்களைப் பெறமுடியும். அது உலகில் என்ன நடக்கிறது, மக்கள் என்ன நினைக்கிறார்கள், மக்கள் என்ன செய்கிறார்கள் என்பதை நீ எப்படி அறியப் போகிறாய் போன்ற விஷயங்களில் உன்னை எச்சரிக்கையாக இருக்கத் தூண்டும். இவ்விதமான அணுகுமுறைக்கு பேரளவில் முயற்சிகளை எடுக்க வேண்டும். செயலில் வெற்றிகரமான தொழில்முனைவோராக இருப்பதில் அவர் ஆர்வம் உடையவராகவும் ஊக்கமிக்கவராகவும் இருத்தல் வேண்டும்.

**2.புதுமை புனைதல்**

புதிது புனைதல் என்பது ‘‘இணையற்ற ஒரு வழியில் கருத்துக்களை இணைக்கும்’’ அல்லது ‘‘கருத்துக்களுக்கு இடையில் இயல்பற்ற உறவுகளை உருவாக்கும்’’ ஆற்றலாகும். (பழமையான வழியில் எண்ணுதலானது இணையான இரயில், சாலைப் பாதைகள் போன்றதாகும்). இது எப்பொழுதுமே ஒன்றோடு ஒன்று இணையாது. அதாவது, இது எக்காலத்திலும் ஒன்றையொன்று நேருக்கு நேர் சந்திக்காததாகும். ஆனால் புதிது புனைதல் என்பது புதிய கருத்துக்களை இயல்பற்ற வழிகளில் தொடர்புபடுத்துதலாகும். அதாவது, இது புதிய கோணங்கள், புதிய இணைப்புகள் மற்றும் புதிய அணுகுமுறைகளில் பார்ப்பதன் மூலம் நேருக்கு நேர் எண்ணுதலைக் குறிக்கிறது. இதன் மூலம் கருத்துக்களை நாம் எளிதில் உருவாக்க முடியும். இதற்கு என பல்வேறு அணுகுமுறைகள் பயன்படுத்தப்படலாம். உதாரணமாக, சோதனைப் பட்டியல் முறையைப் பயன் படுத்தலாம். இம்முறையில் ஒரு பொருள் அல்லது ஒரு சேவையின் நேர்படியான மற்றும்

எதிர்மறையான இயல்புகளை கவனித்து, புதிய கருத்து ஒன்றை அவர் உருவாக்குகிறார். இவ்விதமாக நன்கு வடிவமைக்கப்பட்ட புதிது புனையும் தன்மை பெற்ற பிரச்சனையை தீர்க்கும் அணுகுமுறைகளுள் ஏதேனும் ஒன்றினைப் பயன் படுத்துதலானது ஷபுதிது புனையும் தன்மையைப் பயன்படுத்தவும் வளமிக்க தொழில்முனைவு சார்ந்த கருத்துக்களை உருவாக்கவும் உதவும். புதுமை புனைதல் என்பது நேர் எதிரானது சுற்றுசூழல் எதிரானது ஆகும். இதில் தொழில்முனைவோர் தன்னிடம் உள்ள புதுமையான எண்ணங்கள், செயல்கள் கருத்துகள் ஆகியவற்றை கொண்டு தானே புதிய நுட்பமான திட்டத்துடன் ஒரு தொழிலினை தோ்ந்தெடுக்கின்றனா். இதில் தொழில்முனைவோா் பெரிய எண்ணங்கள் மூலம் மிக சிறப்பான கருத்துகளை உருவாக்கி சமுகத்தில் பிறரிடம் கருத்து வேறுபாடு புதிய தொழிலினை உருவாக்குகின்றனா்.

**3.மூளை தூண்டல்**

மூளை தூண்டல் என்று பிறா் ஒருவரை இத்தொழில் செய்து இதில் என்ன நன்மைகள் உள்ளது. என அவரின் எண்ணத்தினை தூண்டுதல் செய்து புதிய சிந்தனை உருவாகி தொழில் உருவாகின்றது. மூளை தூண்டலில் ஏற்கெனவே ஒருவரிடம் உள்ள எண்ணங்கள் தூண்டுதல் செய்து புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கருத்துக்களை உருவாக்குவதற்கான மிகவும் பிரசித்தி பெற்ற மற்றும் பரவலாகப் பயன்படுத்தப்படும் அணுகுமுறைகளுள் ஒன்றே சிந்தனைத் திறன் தாக்கம் ஆகும். சிந்தனைத் திறன் தாக்கம் என்பது புதிது புனையும் தீர்வுகளை உருவாக்குவதற்கான கருத்து உருவாக்க நடைமுறையாகும். இது மிகவும் எளிமை யான ஒரு நுட்பமாகும். இது நண்பர்கள் அல்லது உடன் பணியாற்றுபவர்கள் அடங்கிய ஒரு குழுவின் உதவியுடன் நடத்தப்படுகின்றது. சிந்தனைத் திறன் தாக்க வகுப்பு ஒன்றில், நபர்களின் ஒரு குழுவானது மிகவும் ஓய்வான சுற்றுச்சூழலில் ஒன்று

குறிப்பு

சேர்ந்து அமர்ந்து தமது மனதையும் எண்ண ஓட்டங்களையும் இயல்புக்கு மீறிய அளவில் தடையேதுமின்றி முடுக்கி விடுகின்றது. குழுத் தலைவர் ஒருவர் கலந்துரையாடப் போகின்ற அல்லது கவனம் செலுத்தப்பட வேண்டிய பிரச்சனையைப் பற்றி விவரிக்கிறார். இவர் அப்பிரச்சனையை பங்கேற்பாளர்கள் அனைவரும் முழுமையாகப் புரிந்து கொண்டு விட்டதை உறுதி செய்து கொள்கிறார். உறுப்பினர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் வாய்மொழியாக அவர் களால் முடிந்த அளவுக்கு கருத்துக்களை முன்வைக்கின்றனர். பங்கேற்பாளர்கள் எவ்வளவு கருத்துக்களை வெளியிட முடியுமோ அவ்வளவு கருத்துக்களையும் வெளியிடுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர் ஒருவர் மற்றொருவர் கருத்தை வளர்க்கவும் ஊக்குவிக்கப்படுகின்றனர். சிந்தனைத் திறன் தாக்க வகுப்புகளில், பொதுவாக பேச்சு பெரும்பாலும் தொடர்ச்சியானதாக இருக்கிறது. ஏனெனில் இங்கு பங்கேற்பாளர்கள் தொடர்ந்து அவரவரது கருத்துக்களைப் பரிந்துரைத்த வண்ணம் இருப்பர். இவ்வித வகுப்புகளில் பொதுவாக குறை கூறுதல் அனுமதிக்கப்படுவதில்லை. மாறாக, அனைத்துக் கருத்துக்களும், பின்னர் ஆய்வும் கலந்தாய்வும் செய்யப்படுவதற்கு என பதிவு செய்யப்படுகின்றன. சிந்தனைத் திறன் தாக்கத்தின் நோக்கமானது முடிந்தவரை மாறுபட்ட வழிகளில் கருத்துக்களைப் பெறுதலாகும். ஏனெனில் இங்கு ஒருவரின் குறிப்புரை மற்றவர்களை ஊக்குவிக்கும். அவ்விதமான ஊக்குவிப்பானது கருத்துக்களின் பிரதிபலிப்பு. சங்கிலி ஒன்று உருவாக வகை செய்கின்றது. இவ்வாறு பல்வேறு மாற்று வழிகளையும் உருவாக்கும் ஒரு கருத்து உருவாக்க நடைமுறையாக சிந்தனைத் திறன் தாக்க நடைமுறை அமைந்துள்ளது எனலாம்.

**4.ஆர்வகுழுக்கள் (அல்லது) நோக்ககுழுக்கள்**

ஒருவர் தான் கொண்டு உள்ள எண்ணங்களை ஒருவரை முன்மாதிரியாக எடுத்து செயல்படுகின்றனர். அவரின்

குறிப்பு

நடைமுறையினை அப்படியே பின்பற்ற படுகின்றனா். பொதுவாக பிரபலமான தொழில் அதிபர்கள், தொழில்முனைவோா், வெற்றி பெற்றோா் சாதனை படைத்தவா் இவா்களின் கருத்துக்கள் அப்படியே ஒரு இளந்தொழில்முனைவோா் பின்பற்றுவதல் ஆா்வகுழு எனப்படும். கவன ஈர்ப்புக் குழுக்கள் என்பன கருத்துக்களை உருவாக்கவல்ல இறுதியான ஒரு அணுகுமுறை ஆகும். இக்குழுக்கள் கட்டமைக்கப்பட்ட ஒரு அமைப்பில் எதிர் காலத்தில் தயாரிக்கப்படவுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பான தகவலை அளிக்கின்றன. சாதாரணமாக கவன ஈர்ப்புக் குழு ஒன்றில், நடுநிலையாளர் ஒருவர், ஆய்வு செய்யப்பட வேண்டிய விஷயத்தின் மீது குழுக் கலந்துரையாடலை தொடங்கி வைக்கிறார். குழுவானது முன்வைக்கப்பட்ட பொருட்கள் மீது கவனம் செலுத்தி நடுநிலையாளர் கேட்கும் குறிப்பிட்ட கேள்விகளுக்கு மறுமொழி அளிக்க வேண்டும். சில நிலைகளில் கவன ஈர்ப்புக் குழுவானது மிகவும் பொதுவான ஒரு அம்சம் மீது கலந்துரையாடலை மேற்கொள்ளலாம். இச்சமயங்களில், நடு நிலையாளரானவர் குழுவின் கருத்துக் களின் அடிப்படையில் கலந்துரையாடலை வழிநடத்தி மட்டும் செல்வார். எவ் வழியில் செயல்பட்டாலும், இவை புதிய கருத்துக்களை உருவாக்குவதற்கும், முன் வைக்கப்பட்ட கருத்துக்களையும் பொதுக் கருத்துக்களையும் வடிகட்டுவதற்கும், மிகவும் சிறந்த வழி முறையைத் தரவல்லது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை

.

**வாய்ப்புகளை அங்கீகாரம் செய்தல்**

தன்முன் உள்ள வணிகத்தின் வாய்ப்புகளை ஒரு தொழில்முனைவோா் சிறப்பாக பயன்படுத்தி தொழில் துவங்குதலை குறிக்கின்றது. வாய்ப்புகளை சரியாக பயன்படுத்தும் தொழில்முனைவோா் வெற்றி பெறுகின்றனா். சிறந்த வாய்ப்புகளை தேர்ந்தெடுத்து சிறப்பாக பணியாற்றி வெற்றி காணலாம். தொழில்முனைவோருக்கு வாய்ப்புகளை அடையாளம் காண சிறந்த

பயிற்சி பெற்று இருத்தல் அவசியமாகும். மேலும் வாய்ப்புகளில் உள்ள நன்மை குறைபாடுகளை அறிந்து தேர்ந்தெடுத்தல் அவசியமாகின்றது.



### கருத்துக்களை மதிப்பிடும் முறை Method of Evaluating Ideas

தொழில்முனைவு சார்ந்த கருத்துக்களை மதிப்பிடுதலானது தனிநபரது சொந்தக் காரணிகளையும், பொருட்கள் சந்தையிடப்படும் இடம்சார்ந்த காரணி களையும் சுற்றியே அமைகின்றது. இவ்விதமான மதிப்பிடுதலானது தொழில் முனைவோர்க்கு கருத்தின் வளம் சார்பான முக்கியமான தகவலைத் தர வல்லதாகும்.

தொழில்முனைவுசார்ந்த திட்டம் ஒன்றில் தொழில்முனைவோரே மையப் பகுதியில் இருந்து அனைத்து முடிவுகளையும் எடுக்கிறார், செயல்களையும் புரிகிறார். ஆகவே, வளமிக்க கருத்துக்களை மதிப்பிடும் பொழுது, இவற்றை தொழில்முனைவோரது சொந்தக் கருத்துக்களின் அடிப்படையில் அளவிடுவது சிறந்தது. இது தொடர்பாக பின்வரும் அம்சங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும்:

1. தொழில்முனைவோரின் ஆற்றல்.
2. தொழில்முனைவோராக இருப்பதில் விருப்பம்.
3. கட்டுக்கடங்கா உணர்ச்சி.
4. அறைகூவல்களைச் சந்திக்கத் தயார் நிலை.
5. தவறுதல்களைச் சந்திக்கத் தயார் நிலை.
6. கடுமையாக உழைக்கத் தயாராக இருத்தல்.
7. திட்டத்தினுடைய வாய்ப்பை பற்றிய உண்மையான நிலையை அறிதல்.
8. தொடர்ச்சியான ஆய்வை மேற்கொள்வதிலுள்ள விருப்பம்.
9. நிதிசார்ந்த பிரச்சனை பற்றி நன்கு அறிதல்.

தொழில்முனைவோரது சொந்தக் கருத்துக்களுக்கு ஏற்ப கருத்துக்களை மதிப்பிடுவது எந்த அளவுக்கு முக்கியமோ அந்த அளவுக்கு அதனை சந்தையிடும் இடம்சார்ந்த அம்சங்களின்படி

குறிப்பு

மதிப்பிடுவதும் முக்கியத்துவம் வாய்ந்ததே ஆகும். தொழில்முனைவோரது கருத்தானது போட்டிசார்ந்த மற்றும் நெகிழ்வான சந்தையில் நடைமுறை சாத்தியம் பெற்றதாக இருத்தல் வேண்டும். ஆகவே, கருத்து ஒன்று தேர்ந்தெடுக்கப்படும் நிலையில் சந்தை தொடர்பான ஆய்வும் அவசியமாகிறது. திட்டமானது சந்தைக்கு அதிக அளவு ஏற்றதாக இருப்பின் அதன் வெற்றியும் பேரளவினதாக இருக்கும். சந்தை வளத்தை மதிப்பிடுவதற்கு என உள்ள பொதுவான சில அம்சங்கள் பின்வருமாறு:

1. உனது கருத்துக்கான வளமிக்க வாடிக்கையாளரை அடையாளம் காணுதல்.
2. தற்பொழுது சந்தையில் கிடைக்கக்கூடிய ஏதேனும் பொருளில் உள்ள ஏதேனும் இயல்பு உன்னுடைய பொருளில் உள்ளதா எனப் பார்த்தல்.
3. வாடிக்கையாளர் உன்னுடைய பொருளை வாங்கும் முறை மற்றும் இடம்.
4. விலை நிர்ணயம் மற்றும் இலாப நட்டமற்ற புள்ளி (Break-even Point).
5. உனது திட்டத்திற்கான விற்பனைப் பெருக்கம் மற்றும் விளம்பரத்திற்கான தேவை.

இவ்வகையான ஆய்வானது நீ தொடங்க உள்ள தொழில்முனைவு திட்டத்தின் நடைமுறை சாத்தியத்தைப் பற்றி உன்னை எண்ண வைக்கும் என்பது உறுதி யானது. கருத்து காகித அளவில் மிகவும் உயர்ந்ததாக காணப்பட்டாலும், சந்தையில் அதற்கு வரவேற்பில்லை எனில், வெற்றிக்குரிய வாய்ப்பு பூஜ்யமாகவே இருக்கும்.

### மதிப்பீடு Evaluation

தொழில்முனைவோர் அவரது திட்டத்தினை கீழ்க்கண்ட இரண்டு நுட்பங்களின் உதவி கொண்டு மதிப்பிடலாம்.

1. நான்கு கேள்விகளின் அணுகுமுறை (Four-questions Approach), மற்றும்

2. சாத்தியத்தன்மை ஆய்வு (Feasibility Study).

நான்கு கேள்விகளின் அணுகுமுறையானது, தொழில்முனைவுசார்ந்த கருத்துக்களின் மதிப்பீடு நான்கு அடிப்படைக் கேள்விகளைச் சார்ந்துள்ளது என்று கூறுகிறது. அவை பின்வருமாறு:

நீ வணிகத்தை விரும்புகிறாயா?

1. நீ வணிகத்தில் ஆற்றலுடையவனாக இருக்கிறாயா?
2. உனக்கு வணிகத்தில் முன் அனுபவம் உள்ளதா?
3. வணிகம் வெறும் ஒரு ஆர்வமா அல்லது இயல்பா?

இந்த ஒவ்வொரு வினாவும் வளமிக்க தொழில்முனைவோரை கனவு காண்பதிலிருந்து ஒரு படி மேலே செல்லவும் குறிப்பிட்ட பிரச்சனைகள் மீது கவனம் செலுத்தவும் வலியுறுத்துகின்றது. இவ்வகையான எளிமையான, எண்ணத்தை உலுக்குகின்ற கேள்விகளுக்கு விடை அளிப்பதன் மூலம், தொழில் முனைவோர் ஆனவர் விருப்பம், ஆற்றல், திறமை போன்ற சொந்த இயல்பு களையும் ஆர்வம், போக்கு அல்லது தேவை போன்ற சந்தையிடப்படும் இடம் சார்ந்த காரணிகளையும் தனக்கு சாதகமாகக் கொண்டுள்ளாரர் அல்லது இல்லையா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

மற்றொரு மதிப்பீட்டு நுட்பமானது சாத்தியத்தன்மை ஆய்வாகும். இது திட்டம் ஒன்றின் இயங்கக்கூடிய தன்மையை நிர்ணயிக்கும் வகையில் திட்டத்தின் பல்வேறு அம்சங்களையும் முறைப்படியாக ஒழுங்கோடு ஆய்வு செய்யும் வகையில் வடிவமைக்கப்படக்கூடிய ஒரு ஆய்வாகும். குறிப்பிட்ட ஒரு தொழில்முனைவு திட்டமானது வெற்றிகரமான வாய்ப்பைக் கொண்டுள்ளதா என்பதை நிர்ணயிக்கும் ஆற்றல்மிக்க ஒரு கருவியாக நன்கு தயாரிக்கப்பட்ட சாத்தியத்தன்மை ஆய்வு

அமையக்கூடியதாகும். இது வணிகத் திட்டத்திற்கும் ஒரு அடிப்படையைத் தரவல்லதாகும்.

**குறிப்பு**

இது தொழில்முனைவுசார்ந்த திட்டத்தின் மிக முக்கியமான கூறுகளின் விவரங்களையும் இக்கூறுகளின் சாத்தியத்தன்மை தொடர்பான தொழில்முனை வோரின் ஆய்வையும் தருகின்றது. பொதுவாக இது எட்டுப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை- 1. அறிமுகப் பிரிவு, 2. வளமிக்க பலம் மற்றும் பலவீனங்கள், மற்றும் ஏனைய முக்கியமான தகவல்கள், 3. கணக்குவைப்புக் காரணி கள், 4. மேலாண்மைக் காரணிகள், 5. சந்தையிடுகைக் காரணிகள், 6. நிதிசார்ந்த காரணிகள், 7. சட்டம்சார்ந்த காரணிகள், மற்றும் 8. வரிக் காரணிகள் ஆகியன வாகும். இவற்றுடன், பிற்சேர்க்கைகளும் தரப்பட்டிருக்கும். இதில் அட்டவணை, வரைபடங்கள் போன்றன இருக்கும்.

ஆகவே சாத்தியத்தன்மை ஆய்வானது பல பகுதிகளைக் கொண்டுள்ளது. இந்த ஆய்வினைத் தயாரிக்க பேரளவில் காலம், முயற்சி போன்றன தேவையாக இருக்கிறது. ஆயினும், இது ஆற்றலுடன் செய்யப்பட்டால், வணிகத் திட்டத்தின் மற்ற பணிகள் அனைத்தும் எளிதாக மேற்கொள்ளப்பட்டு விடலாம்.

# அலகு – 4

குறிப்பு

## வணிக திட்டம்

4.1 தொழில் திட்டமிடல் அல்லது வணிக திட்டமிடல்
4.2 தொழில் திட்டமிடல் என்பதன் பொருள்
4.3 வணிக திட்டமிடல் முக்கியத்துவம்
4.4 தொழில் திட்டமிடல் நோக்கங்கள்
4.5 தொழில் திட்டமிடல் முக்கிய பண்புகள்
4.6 தொழில் திட்டமிடலின் உட்கூறுகள்
4.7 தொழில் அகசூழல் மற்றும் புற சூழல்கள்

## வணிக திட்டம்

### 4.1 தொழில் திட்டமிடல் அல்லது வணிக திட்டமிடல்

பொதுவாக திட்டமிடல் என்பது செய்கின்ற செயலை வரிசைகிரமமாக அல்லது நேர்த்தியாக அல்லது முறையாக செய்வதினையே திட்டமிடல் எனப்படும்.

### 4.2 தொழில் திட்டமிடல் என்பதன் பொருள்

முறையாக ஒரு தொழிலினை தேர்ந்தெடுத்து அதனை முறையாகவும் படிபடியாகவும் செய்யும் செயல் அறிக்கை அச்சு வடிவத்தில் உள்ளனவற்றையே தொழில் திட்டமிடல் எனப்படும்.

தொழில் திட்டமிடல், அனுமானம், மதிப்புகள், காரணி கொண்ட எழுதப்பட்ட அறிக்கையினை குறிக்கும்.

ஒரு தொழில் திட்டமிடல் பின்வரும் கேள்விகளை கொண்டு இருக்கும்.

1. எதை செய்ய வேண்டும்
2. எப்படி செய்ய வேண்டும்
3. யார் செய்ய வேண்டும்
4. ஏன் செய்ய வேண்டும்

என்ற நான்கு வினாக்களுக்கு பதில் கூறும் அறிக்கையினை தொழில் திட்டமிடல் எனப்படும். அனைத்து வகையான ஆலோசனைகளை கலந்த பின்னர் இறுதி அறிக்கையினை ஒன்றை தயாரிப்பது வணிக திட்டமிடல் எனப்படும்.


**சாத்தியத்தன்மை ஆய்வு Feasibility Study**

முன்வைக்கப்பட்ட தொழில்முனைவுசார்ந்த திட்டத்தின் இயங்கக்கூடிய தன்மையை நிர்ணயிப்பதற்கு என அதன் பல்வேறு அம்சங்களின் அமைக்கப்பட்ட மற்றும் முறைப்படியான ஆய்வைக் குறிப்பதே சாத்தியத்தன்மை ஆய்வாகும். நன்கு வடிவமைக்கப்பட்ட சாத்தியத்தன்மை ஆய்வானது, குறிப்பிட்ட தொழில் முறைசார்ந்த கருத்து ஒன்று வெற்றிவாய்ப்பு வளமிக்க ஒரு திட்டமா என்பதை நிர்ணயிப்பதற்கான ஆற்றல்மிக்க ஒரு மதிப்பீட்டுக் கருவி ஆகும். இது வணிகத் திட்டத்திற்கு ஒரு அடிப்படையாகவும் செயலாற்ற வல்லதாகும்.

திட்ட உருவாக்க நடைமுறையின் முதற்கட்டமே சாத்தியத்தன்மை ஆய்வு ஆகும். இது உட்புற மற்றும் வெளிப்புறத் தடைகளின் வரையறைகளுக்கு உட் பட்டு திட்டம் ஒன்றினை மதிப்பிடுதலாகும். இது முதலீடு ஒன்றைச் செய்வதற்கு உள்ள ஆர்வத்தினை நிர்ணயிப்பதற்கு என நடத்தப்படுகின்றது. இந்த ஆய்வு வரைபடம் 7.1 -ல் தரப்பட்டுள்ளதைப் போல மூன்று மாறுபட்ட வழிகளைத் தரலாம். அவை கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

1. கருத்தை மறுத்தல் (Rejection of the Idea) : ஆய்வானது சாத்தியத் தன்மை திட்டக் கருத்தினை மறுத்தொழிக்கும்படியும் பரிந்துரைக்கலாம். அவ் விதச் சூழ்நிலையில், கருத்தானது

சாத்தியத்தன்மையற்று இருப்பதால், மேலும் அதனைப் புலனாய்வு செய்ய வேண்டியது அவசியமற்றதாகின்றது.




வரைபடம் 7.1 - சாத்தியத்தன்மை ஆய்வின் மாறுபட்ட வழிகள் (Alternatives of Feasibility Study)

2. கருத்தை ஏற்றல் (Accepting the Idea) : திட்டக் கருத்தானது சாதகமான தாகவும் சாத்தியத்தன்மை உடையதாகவும் இருக்கும் பொழுது, அது ஏற்கப்படு கிறது. இந்நிலையில், திட்டக்கருத்தானது பல்வேறு கோணங்களிலிருந்தும் மேலும் ஆய்வு செய்யப்படுதல் வேண்டும்.

3. முடிவெடுப்பதற்குப் போதுமான தகவலின்மை (Inadequate Data to take Decision) : சில சமயங்களில், கிடைத்திருக்கக்கூடிய தகவலானது, முடிவு ஒன்றை எடுக்கப் போதுமானதாக இருக்காது. அந்நிலையில், கூடுதல் தகவலைப் பெறும் பொருட்டு இறுதி முடிவு எடுத்தலானது ஒத்திப் போடப்படுகிறது. சாத்தியத்தன்மை ஆய்வின் கட்டங்கள் Phases of Feasibility Study

திட்டத்தின் சாத்தியத்தன்மை ஆய்வானது மூன்று கட்டங்களைக் கொண்டு உள்ளது. அவை கீழ்க்கண்டவாறு:

1. சாத்தியத்தன்மை ஆய்விற்கு முந்தைய நிலை ஆய்வு (Pre-feasibility Study).
2. சாத்தியத்தன்மை ஆய்வு (Feasibility.Study).
3. திட்ட அறிக்கை ஆய்வு (Project Report Study).

மேற்கண்ட மூன்று கட்டங்களுள், முதல் இரண்டு கட்டங்கள் மட்டும் இங்கே கலந்துரையாடப்பட்டுள்ளன. மூன்றாவது கட்டம் பின்னர் ஒரு அத்தியாயத்தில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பு

### 1. சாத்தியத்தன்மை ஆய்விற்கு முந்தைய ஆய்வு Pre-feasibility Study

சாத்தியத்தன்மை ஆய்விற்கு முந்தைய நிலை ஆய்வானது, சாத்தியத்தன்மை ஆய்வினை செய்யத் தொடங்குவதற்கு முன்பே மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு உண்மையில் அடிப்படைப் பணியே மேற்கொள்ளப்படுகின்றது. இது பின்வருவன வற்றை ஆய்வு செய்வதற்காக மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது:

1. முதலீடு செய்வது மதிப்புடையதா என அறிய.
2. திட்டக் கருத்தானது சந்தை ஆய்வு, பரிசோதனை மற்றும் வணிக உற்பத்திக்கு முந்தைய தொழிற்சாலைச் சோதனை போன்ற விரிவான ஆய்விற்கு உட்படுத்தப் பட வேண்டுமா என அறிய.
3. திட்டக் கருத்தானது செயல்படுத்தக்கூடியதா, இல்லையா என்பதை அறிய.

இந்த ஆய்வு பின்வரும் காரணிகளையும் ஆய்வு செய்கிறது:

1. பொருளின் சந்தை.
2. தொழிற்சாலையின் திறன்.
3. தேவையான உள்ளிடுகைகள்.
4. தொழில்நுட்பம் மற்றும் திட்டப் பொறியியல்.
5. மேற் செலவுகள்.
6. தேவைப்படும் மனித சக்தி மற்றும் பணியாளர்கள்.
7. இலாபத் தன்மை .

இக்காரணிகள் அனைத்தும் முதலில் பரந்த நோக்கிலும் பின்னர் ஆழமாகவும் ஆய்வு செய்யப்படுகின்றன.

### 2. சாத்தியத்தன்மை ஆய்வு Feasibility Study

சாத்தியத்தன்மையின் ஆய்வில், தொழில்முனைவுசார்ந்த திட்டத்தின் மிகவும் முக்கியமான கூறுகளும், இக்கூறுகளின் ஒப்பேறக்கூடிய தன்மையின் தொழில் முனைவுசார்ந்த ஆய்வும் அடங்குகின்றன. இக்கூறுகளுள் பின்வருவன அடங்குகின்றன:

1. சந்தையிடுகைக் காரணிகள் (Marketing Considerations).
2. நிதிசார்ந்த காரணிகள் (Financial Considerations).
3. பொருளாதாரக் காரணிகள் (Economic Considerations).
4. தொழில்நுட்பம்சார்ந்தகாரணிகள் (Technical Considerations).
5. சட்டம்சார்ந்த காரணிகள் (Legal Considerations).
6. மேலாண்மைசார்ந்தகாரணிகள் (Managerial Considerations).
7. இடஅமைவுசார்ந்த காரணிகள் (Locational Considerations).
8. அமைப்புசார்ந்தகாரணிகள் (Organisational Considerations).

மேற்கண்ட அனைத்துக் கோணங்களுள், சந்தையிடுகைக் காரணிகள் இந்த அத்தியாயத்தில் விரிவாக கலந்தாய்வு செய்யப்பட்டுள்ளன. மற்ற கோணங்கள் அனைத்தும் வர இருக்கின்ற அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

### சந்தையிடுகை சாத்தியத்தன்மை MARKETING FEASIBILITY

சந்தையிடுகை சாத்தியத்தன்மை ஆய்வில் வணிகக் கருத்து ஒன்றின் சந்தை யிடுகைசார்ந்த ஒப்பேறக்கூடிய தன்மை தொடர்பான பரிசோதனை ஒன்றை தொழில்முனைவோர் மேற்கொள்ளவேண்டும். இதில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பல்வேறு சந்தையிடுகைக் காரணிகளாவன- விரிவான பொருள் விவரக் குறிப்பு, பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படக் கூடிய சந்தையினை அடையாளம் காணுதல், விலை நிர்ணயம், பெருக்கத் திட்டங்கள் போன்றனவாகும்.

### பொருள் Product

பொருள் என்ற சொல்லின் பொருளையும் அச்சொல்லின் மீது பல்வேறு அறிஞர்களும் வரைந்துள்ள இலக்கணங்களையும் பற்றி தொழில்முனைவோர் அறிந்து கொள்வது அவசியம் என்பதால் அவற்றைப் பற்றி நாம் சுருக்கமாக கீழ்க்கண்டவாறு காணலாம்.

குறிப்பு

∴பிலிப் கோட்லர் கூறும் இலக்கணம் (Definition of Philip Kotler) : "பொருள் என்பது தமது விருப்பம் அல்லது தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நுகர்வோர் பயன்படுத்திக் கொள்ள அல்லது செயல்படுத்திக் கொள்ள வழங்கப் படுவதாகும். கண்ணுக்குப் புலனாகக்கூடிய பொருட்கள், பணிகள், இடங்கள், கருத்துக்கள் ஆகிய அனைத்தும் பொருள் என்றே குறிப்பிடப்படும்". இவ் விளக்கம் நுகர்வோர் பயன்படுத்தக்கூடிய அகநிலைப் பொருட்கள், புறநிலைப் பொருட்கள் ஆகிய அனைத்தையும் பொருள் என்றே கருதவேண்டும் என்று குறிப்பிடுகின்றது. அகநிலைப் பொருட்கள் என்பன மருத்துவர்கள், வக்கீல்கள் ஆகியோர் வாடிக்கையாளர்களுக்குக் கூறும் ஆலோசனைகள், விஞ்ஞான ஆய்வின் அடிப்படையில் எழுந்த கருத்துக்கள் முதலான கண்ணுக்குப் புலனாகாத ஆனால் உணர்ந்து அறியக்கூடிய பயன்பாடு உள்ள பொருட்களாகும். இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் போன்ற பணிகளும் இவ்விலக்கணத்தின்படி பொருட்களேயாகும். இவற்றால் நுகர்வோர்க்குப் பயன் ஏற்படுகின்றது.

வில்லியம் ஜே. ஸ்டாண்ட ன் கூறும் இலக்கணம் (Definition of William J.Stanton) : "பொருள் என்பது நுகர்வோர் தமது தேவையை அல்லது விருப்பத்தை பூர்த்தி செய்ய, வாங்க விரும்பும் அக, புறப் பண்புகளை (வுயபெடிடந யனெ ஐவெயபெடிடந யுவவசடைரவநள) உடையதாகும். இதில் பொருட்களின் நிறம், உற்பத்தியாளர், விற்பனை யாளர் ஆகியோரது மதிப்பு, அவர்களது பணிகள் ஆகிய அனைத்தும் அடங்கும்".

இந்த இலக்கணமும் நுகர்வோர்க்குப் பயன்படும் அனைத்தும் பொருட்களே என்பதை வலியுறுத்துகிறது. நுகர்வோரின் மனநிறைவே பொருளின் நோக்கம் என்பது இதன் பொருளாகும்.

ஆண்ட ர்சன் கூறும் இலக்கணம் (Definition of Anderson) : "பொருள் என்பது பல்வேறு பயன்பாடுகளின் தொகுதி அல்லது

கூட்டு ஆகும். பொருள் களின் சிறப்பம்சங்களும் தொடர்புடைய பணிகளும் இதில் அடங்கும்'' என்று ஆண்டர்சன் என்ற அறிஞர் கூறுகின்றார்.

இம்மூன்று இலக்கணங்களும் ஒவ்வொரு வகையில் சிறப்பானவையாகும். இவற்றை ஒருசேர ஆராய்வதன் மூலமே பொருள் என்பது என்ன? அதன் சிறப்பு இயல்புகள் என்ன என்பதை இக்காலச் சந்தையாளர் அறிந்து கொள்ள இயலும்.

## பொருளின் சந்தையிடுகை சிறப்பம்சங்கள் Characteristics of a Product

இக்காலச் சந்தையிடுகையின் நோக்கில் பொருள் என்பதன் சிறப்பம்சங் களைப் பற்றி தொழில்முனைவோர் அறிந்து கொள்வது அவசியமானது என்பதால் அவற்றை நாம் இங்கே தொகுத்து வரைந்துள்ளோம்:

**1. சரக்கும் பொருட்களும் (Goods and Products)** : நடைமுறையில் சரக்கு, பொருள் ஆகிய இரண்டு சொற்களையும் ஒரே அர்த்தத்தில் பயன்படுத்துகின்றோம். சந்தையியல் அறிஞர்களும் இச்சொற்களை ஒரே பொருளில் பயன்படுத்து கின்றனர். ஆனால் இவ்விரண்டிற்கும் வேறுபாடு உள்ளது. இக்காலச் சந்தையியல் நோக்கில் பொருள் என்பது அக, புறப் பொருட்கள் இரண்டையும் உள்ளடக்கிய பொருளாழம் மிக்க ஒரு சொல்லாகும். அதாவது கண்ணுக்குப் புலனாகக்கூடிய புறநிலைப் பொருட்களும், கண்ணுக்குப் புலனாகாத பணிகள் போன்ற உணர்வு பூர்வமாக அறியக்கூடிய அகநிலைப் பொருட்களும் இதில் அடங்கும். சரக்கு என்ற சொல் புறப் பொருட்களை மட்டுமே குறிப்பிடுகின்றது. எனவே பொருள் என்பதில் சரக்கும் அடங்கும் என்பது விளங்கும்.

**2. வாங்குவோர் உண்மையில் பயன்களையே வாங்குகின்றார்கள் பொருட்களை அல்ல (Buyers buy only the Benefit)** : மேற்குறிப்பிட்ட எல்லா இலக்கணங்களிலும் மிக முக்கியமாக

குறிப்பு

வலியுறுத்தப்படும் அம்சம் பொருட்களின் பயனேயாகும். ஒரு பொருள் குறிப்பிட்ட ஒரு உபயோகத்துக்குப் பயன்படுவதனால் தான் அப்பொருளை நுகர்வோர் வாங்குகின்றனரே தவிர, வேறு காரணம் எதுவும் இல்லை. எனவே அப்பொருள் அந்த உபயோகத்துக்குப் பயன்படாவிட்டால் அவற்றை வாங்குவதில் அர்த்தமில்லை. எனவே நுகர்வோர் உண்மையில் விலை கொடுத்து வாங்குவது பொருட்களை அல்ல. அவற்றின் பயன்களையே என்பது விளங்கும். இவ்விளக்கம் மிக நுட்பமானதாகும். தொழில்முனைவோர் தர்க்க ரீதியாக இதனை நிலை நாட்டலாம்.

**3. பொருள் வேற்றுமை (Each Brand is a separate Product)** : ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் ஒரு சிறிய வேறுபாடு இருந்தாலும் இரண்டையும் வெவ்வேறு பொருட்களாகவே கருதவேண்டும். இப்போது பயன் படுத்தப்பட்டு வரும் பொருளிலேயே ஒரு சிறிய மாற்றத்தைப் புகுத்தினாலும் அப் பொருளை வேறு பொருளாகவே கருத வேண்டும். உதாரணமாக, லக்ஸ் சோப் கம்பெனி வெண்மை நிறத்தில் சோப்பு தயாரித்து வந்தது. பின்னர் வானவில்லின் நான்கு வண்ணங்களில் தயாரிப்பதாகக் கூறிக் கொண்டு நிறத்தை மட்டும் மாற்றி நான்கு நிறங்களில் சோப்புகளைத் தயாரித்து வெளியிட்டது. இக்கோட்பாட்டின் படி இந்நான்கு சோப்புகளும் நான்கு வெவ்வேறு பொருட்கள் என்றாகின்றது.

**4. பொருளோடு இணைந்த பணிகள் (Services Accompanying the Product)** : விற்பனை செய்பவர்களால் நுகர்வோர்க்கு அப்பொருளோடு இணைந்து ஆற்றப்படும் பணிகளும் பொருளாகவே கருதப்படும். அதாவது, விற்பனையாளர் ஒருவர் தம்மிடம் ஒரு பொருளை வாங்குவதன் காரணமாக ஒரு சில பணிகளை அவருக்காக ஆற்றுகின்றார். அப்பணிகளைப் பொருள் என்ற சொல் உள்ளடக்கும் என்பது இதன் அடிப்படையாகும். உதாரணமாக,

குறிப்பு

தொலைக்காட்சிப் பெட்டி போன்றவற்றை வாங்கிப் பயன்படுத்தும் போது அதில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் விற்பனையாளர் கூடுதலாகக் கட்டணம் எதுவும் பெறாமலேயே அதைச் சரி செய்து பழுதுபார்த்துத் தருவது இக்காலத்தில் வழக்கமாக உள்ளது. இதனை விற்பனைக்குப் பின் ஆற்றும் பணிகள் (After Sales Service) என்று குறிப்பிடு கின்றனர். வாடிக்கையாளரைக் கவர்ந்து இழுக்கும் அம்சங்களில் இப்பணியும் ஒன்றாகும். இப்பணிகளும் பொருள் என்பதில் அடங்கும். இதுபோல் வாடிக்கை யாளர்களுக்கு வழங்கும் ஆலோசனைகள், கடன் விற்பனை (Credit Sales) போன்றவையும் இதில் அடங்கும்.

எனவே, பொருள் என்ற சொல் இக்காலச் சந்தையியலாளர்களின் நோக்கில் மிகப் பரவிய பொருள் தரும் சொல் என்பது விளங்கும்.

## பொருட்களின் பாகுபாடு Classification of Goods or Products

பொருட்களின் இயல்புகளும், சிறப்பம்சங்களும் சந்தையிடுகைத் திட்டத்தை முடிவு செய்வதில் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன எனலாம். எனவே, பொருளின் இயல்புக்கு ஏற்றவாறு சந்தையிடுகைத் திட்டத்தை தொழில் முனைவோர் வகுக்க வேண்டும் என்பது நன்கு விளங்கும். தொழில்முனைவோர் தாம் உற்பத்தி செய்யும் பொருள் பற்றி நன்கு அறிந்து இருக்க வேண்டியது அவசியம். பொருளின் இயல்பை அறியாமல் விற்பனைத் திட்டம் தீட்டப் பட்டால், அத்திட்டமானது தோல்வியைத் தழுவ நேரிடும்.

பொருட்களை அவற்றின் பயன் அல்லது இயல்புகளின் அடிப்படையில் இரண்டு வகைகளாகப் பாகுபாடு செய்துள்ளனர். அவையாவன:

1. நுகர்வோர் பொருட்கள் (Consumer Goods).
2. தொழிற்சாலைப் பொருட்கள் (Industrial Goods).

குறிப்பு


எல்லாப் பொருட்களையும் இவ்விரு வகைக்குள் அடக்குவதில் சில சிக்கல்கள் உள்ளன. சில பொருட்கள் நுகர்வோர் பொருட்களாகவும் தொழிற்சாலைப் பொருட்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் வரைபட விளக்கம் ஆனது வரைபடம் 7.2 -ல் தரப்பட்டுள்ளது. இவை பற்றி இனி ஆராய்வோம்.

**1. நுகர்வோர் பொருட்கள் Consumer Goods**

பொருளானது என்ன உபயோகத்துக்காக உருவாக்கப்பட்டதோ அவ் உபயோகத்துக்கே அப்பொருள் இறுதியாக நுகர்வோரால் பயன்படுத்தப்படும் பொழுது நுகர்வோர் பொருட்கள் எனப்படும். தொலைக்காட்சிப் பெட்டி, வானொலிப் பெட்டி, சிகரெட் போன்றவை இதில் அடங்கும். இப்பொருட் களையும் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்

அவையாவன:

1. அடிக்கடி வாங்கப்படும் பொருட்கள் (Convenience Goods).
2. ஒப்பிட்டு வாங்கப்படும் பொருட்கள் (Shopping Goods).
3. சிறப்புப் பொருட்க ள் (Speciality Goods).




வரைபடம் 7.2 - பொருட்களின் வகைப்பாடு
(Classification of Goods)

குறிப்பு

**1. அடிக்கடி வாங்கப்படும் பொருட்கள் (Convenience Goods) :** அதிக முயற்சி அல்லது சிரமம் எடுத்துக்கொள்ளாமல், அடிக்கடி நுகர்வோர் வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் இவ்வகையில் அடங்கும். சிகரெட், தினசரிச் செய்தித் தாள்கள் (Newspapers)> மளிகை சாமான்கள் (Grocery) முதலியவை இவ்வகையுள் அடங்கும். இவை நுகர்வோர் அன்றாடம் வாங்க வேண்டிய பொருட்கள் ஆகையால், நுகர்வோர் வசிக்கும் பகுதிகளுக்கு அருகாமையிலேயே இப் பொருட்கள் கிடைக்க வழி செய்யப்பட வேண்டும்.

2. ஒப்பிட்டு வாங்கப்படும் பொருட்கள் (Shopping Goods) : ஒரே உபயோகத்துக்குப் பயன்படும் பல்வேறு உற்பத்தியாளர்களின் பொருட்களையும் ஒப்பிட்டுப் பார்த்து அவற்றுள் ஒன்றைத் தேர்வு செய்து வாங்கும் பொருள் இவ் வகையுள் அடங்கும். நுகர்வோர் இப்பொருட்களை அடிக்கடி வாங்குவது இல்லை. துணி, பாத்திரங்கள் போன்றவை இவ்வகைக்கு உதாரணங்களாகும். இப்பொருட்களை அவற்றின் தரம், விலை, வடிவமைப்பு ஆகியவற்றை ஒப்பிட்டு வாங்குவர். இவைகள் கடை வீதிக்குச் சென்று வாங்கப்படும் பொருட்களாகும்.

3. சிறப்புப் பொருட்கள் (Speciality Goods) : சில பொருட்களை அவற்றின் வணிகக் குறியீடு (Trade Mark), வணிகப் பெயர் (Brand Name) ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லியே நுகர்வோர் வாங்க வேண்டும். இப்பொருட்கள் ஒவ் வொன்றும் தனக்கென்று சில சிறப்பியல்புகளை உடையனவாகவும் சிறப்பான உபயோகத்துக்குப் பயன்படுவனவாகவும் இருக்கும். இப்பொருட்களை வாங்கு வதற்கு நுகர்வோர் விசேஷ சிரமம் (Special Effort) எடுத்துக் கொள்ள வேண்டும்.

## 2. தொழிற்சாலைப் பொருட்கள் Industrial Goods

நுகர்வோர் நேரடியாகப் பயன்படுத்த இயலாதனவாகவும், தொழிற்சாலை களில் பயன்படுத்தப்படுவனவாகவும் உள்ள

குறிப்பு

பொருட்கள் இவ்வகையுள் அடங்கும். இவற்றையும் நான்கு விதங்களாகப் பிரிக்கலாம். அவை பின்வருமாறு:

1. இயந்திரங்களும் தளவாட சாமான்களும் (Equipment and Physical Facilities)

2. மூலப் பொருட்க ள் (Materials Entering into the Product).

3.உற்பத்தித் துணைநலப் பொருட்கள் (Manufacturingor Service Supplies).

4. மேலாண்மைப் பொருட்கள் (Management Materials).

1. **இயந்திரங்கள் மற்றும் தளவாட சாமான்கள் (Equipment and Physical Facilities)** : இவற்றை உற்பத்திச் சாதனங்கள் என்றும் கூறலாம். உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள், கட்டடம் முதலான மூலதனச் சொத்துக்கள் (Capital Assets) இவ்வகையுள் அடங்கும்.

**2. மூலப் பொருட்க ள் (Materials Entering into the Product)** : பொருடகளை உற்பத்தி செய்யத் தேவையான கச்சாப் பொருட்கள் (Raw Materials), உதிரி பாகங்கள் (Spare Parts), துணை உறுப்புக்கள், இணைக்கப்படும் பாகங்கள் (Fabricating Parts) முதலியன இவ்வ கையுள் அடங்கும்.

**3. உற்பத்தித் துணைநலப் பொருட்கள் (Manufacturing or Service Supplies)** : உற்பத்தி நடைபெற மிக முக்கியமான பொருட்களாகவும் அதே சமயம் உற்பத்தியாகும் பொருளின் ஒரு பகுதியாக இல்லாதனவாகவும் உள்ள பொருட்கள் இதில் அடங்கும். இயந்திரங்களை இயக்கத் தேவையான மின்சக்தி, டீசல், பெட்ரோல், நிலக்கரி முதலியன இவற்றிற்கு உதாரணங்களாகும்.

4. **மேலாண்மைப் பொருட்கள் (Management Materials)** : அலுவலகங் களில் பயன்படுத்தப்படும் சாதனங்கள், எழுது பொருட்கள் போன்ற பொருட்கள் மேலாண்மைப் பொருள்கள்

எனப்படும். தட்டச்சு இயந்திரம், கணிப்பொறி முதலியனவும் இவ்வகையுள் அடங்கும்.

குறிப்பு

## 4.3 வணிக திட்டமிடல் முக்கியத்துவம்

1. தொழில் மதிப்பு பற்றிய ஆலோசனையினை வழங்குகின்றது.
2. நிதிசார் அறிக்கைக்கு முக்கியத்துவம் வழங்குதல்
3. மூலதன கட்டமைப்புகள், கால அளவு ஆகியவற்றை தொழில் திட்டமிடல் தெரிவிக்கின்றது.
4. நிதி சேதாரம் தவிர்க்கப்படுகின்றது.
5. இதனை எளிமையாக தயாரித்து வாய் வழியாகவும் வழங்கலாம்.

## 4.4 தொழில் திட்டமிடல் நோக்கங்கள்

1. தொழில் முனைவோருக்கு பாதையினை காட்டுகின்றது.
2. தகவல் அறிக்கையினை மதிப்பீடு செய்கின்றது.
3. தொழில் முன்னோட்ட அறிக்கை மூலம் பின்னர் ஏற்படும் இடர்கள் குறையும்.
4. கடன் தேவைகளுக்கு வங்கியருக்காக தயாரிக்கப்படுகின்றது.
5. நிதி தேவை, சந்தையின் நிலைப்பாடு போன்றவற்றை முன் அறிவிக்கின்றது.
6. பலம், பலவீனம் பற்றி தொழில் முனைவோர் தெரிந்து கொள்ள உதவுகின்றது.
7. வெளிச்சந்தையின் போட்டி மற்றும் சவால்களை பற்றி எடுத்துரைக்கிறது.

## 4.5 தொழில் திட்டமிடல் முக்கிய பண்புகள்

1. திட்டங்களை ஆலோசனை செய்தல்
2. உணர்ச்சி வசப்பட்ட நிலையினை தவிர்க்கின்றது.

குறிப்பு

3. நுட்பங்களை வரையறை செய்கின்றது.
4. செயல் திட்டம், விற்பனை யுக்திகளை தெளிவாக வரையறுக்கின்றது.
5. தொழில் நிலை தன்மையினை ஆராய்ந்து உரைக்கின்றது.
6. பலம், பலவீனம் பயம் பற்றி விவரிக்கின்றது.
7. பல காரணிகள் இருக்கும் பொழுது ஒரு காரணியினை தேர்ந்தெடுக்க உதவுகின்றது.
8. கையாளும் நுட்பங்களை மேம்படுத்த உதவுகின்றது.
9. ஒரு நோக்கோடு செயல்பட உதவுகின்றது.

## 4.6 தொழில் திட்டமிடலின் உட்கூறுகள்

1. கள முன் ஆய்வு
2. திட்டம் உதித்தல்
3. சூழ்நிலையினை ஆராய்தல்
4. நிலை தன்மையினை சோதித்தல்
5. அறிக்கை தயாரித்தல்
6. மதிப்பீடுகள், கட்டுபாடுகள்
7.

**1.கள முன் ஆய்வு செய்தல்**

தொழில் துவங்க முன்பு அது தொடர்பான முன் ஆய்வினை செய்ய வேண்டும். மேலும் தொடங்கபட இருக்கும் தொழிலினை பற்றி ஏற்கெனவே களத்தில் இருக்கும் தொழில் முனைவோர் தொடங்கிய தொழிலினை பற்றி விரிவான ஆய்வினை நடத்திய பிறகு தொழிலினை துவங்க வேண்டும்.

**2. திட்டம் உருவாதல்**

களமுன் ஆய்வினை முடிக்கும் பொழுது ஒரு தொழில் துவங்குகவருக்கு ஒரு பாதை அமையும் தெளிவாக தெரியும். விலை அளிப்பு தேவை ஆகியவை சந்தையின் பங்களிப்பு

ஆகியவை முன் யோசனைமுடிவில் திட்டம் வருவதற்கு உதவுகின்றது. கடினமான இடர் ஏற்படக்கூடிய திட்டங்கள் தவிர்க்கப்படுகின்றது. திட்டம் வருவதால் தொழில் முனைவோர் நம்பிக்கையுடன் தொழிலினை துவங்கலாம்.

3.சூழல் பற்றி ஆய்வு செய்தல் : சூழல் என்பது தொழில் சூழல்களை குறிக்கின்றது. தொழில் குழலில் பல காரணிகள் உள்ளடக்கம் கொணடது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு சந்தையில் போட்டி பொருட்களை பற்றி ஆய்வு செய்ய வேண்டும். தேவையான பொருட்களை தேவையான சூழ்நிலையில் உருவாக்க வேண்டும். அளிப்பு நிலையினையும், நிலையான செலவு மாறுபடுகின்ற செலவினை நிலை பற்றி ஆய்வு செய்தல் தொழில் முனைவோருக்கு நன்மையினை தருகின்றது.

**3. நிலைதன்மையினை ஆய்வு செய்தல்**

நிலைத்தன்மை என்பது தொழில் நீண்ட காலம் நடத்தி இலாபம் ஈட்டுவதனை குறிக்கின்றது. மேலும் நல்ல நிலையில் உருவாகும் தொழில் எந்த விதமான சிக்கல்களை சந்தித்தாலும் தொடர்ந்து தொழில் நடைபெற்றுக்கொண்டே இருக்கும். நிலைதன்மையில் செலவு மற்றும் வருவாய் இனங்கள் அடிப்படையில் நிலையான மூலதனம் நடைமுறை மூலதனம் கிடைப்பது ஆகியவற்றின் அடிப்படையில் ஆராயப்படுகின்றது.

## 4.7 தொழில் அகசூழல் மற்றும் புற சூழல்கள்

**புறச்சூழல்கள்**

- கலாச்சாரம் சமூக மதிப்பீடுகள்
- தொழில் நுட்பம் மதிப்பில்
- பொருளாதார சூழல் மதிப்பிடல்
- மனித நடத்தை பற்றிய மதிப்பிடல்
- அரசு காரணிகள் மதிப்பீடுகள்

**2.அகச்சூழல்கள்**

குறிப்பு

- மூலப்பொருட்கள்
- சந்தை பகுப்பு
- நிலைத்தன்மை ஆய்வு

**6.அறிக்கை தயாரித்தல்**

மேற்கண்ட காரணிகளை ஆராய்ந்து அறிக்கையினை தயாரிக்க வேண்டும். அறிக்கையானது தெளிவாகவும் புரியும் வண்ணமுடன் இருத்தல் அவசியமாகின்றது. மேற்சொல்லப்பட்ட காரணிகளை பற்றி முழு விபரத்தினை அறிந்த பிறகே அறிக்கை தயாரிக்க வேண்டும்.

- ➢ நிலை தன்மை வகைகள்
- ➢ சந்தை நிலைதன்மை
- ➢ சந்தையின் உட்கூறு நிலைதன்மை
- ➢ சந்தை ஆய்வு
- ➢ தொழில்நுட்ப நிலைதன்மை
- ➢ நிதி நிலை தன்மை
- ➢ வாய்ப்புகள் நிலை தன்மை

# அலகு– 5



## துணிச்சல் முதலீடுகள்

5.1 துணிச்சல் முதலீட்டின் முக்கியத்துவம்

5.1.1 முதலீட்டாளருக்கு நன்மை

5.1.2 தொழில் முனைவோருக்கு நன்மை

5.1.3 பொதுவான பயன்பாடுகள்

5.2 உரிமை பத்திரங்கள்

5.3 உரிமை பத்திர வகைகள்

5.4 கடன் பத்திரங்கள்

5.5 வகைகள்

5.6 கடன் மற்றும் சொத்து இவற்றின் விகிதம்

5.7 கடன் மற்றும் சொத்து விகிதம்

5.8 துணிச்சல் முதலீடுகளும், நிதி நிறுவனங்களும், வணிக வங்கிகளும விளக்கம்

5.10 வங்கிகளால் ஏற்படுத்தப்பட்ட துணிச்சல் முதலீடு அமைப்புகள்

### துணிச்சல் முதலீடுகள்

துணிச்சல் முதலீடு என்பது புதிய தொழில்நிறுவனத்தின் மீது செய்யப்படும் இடர் நிறைந்த நிலையான வருவாய் கொண்ட முதலீடு ஆகும்.

புதிய தொழில் முனைவோர், புதிய முதலீடுகள், புதிய தொழில்நுட்பம் இடர்நிறைந்தது ஆகிய பண்புகளை கொண்டது துணிச்சல் முதலீடு எனப்படும்.

தான் தொடங்கிய புதிய தொழிலினை மற்றவரும் பங்கு பெற செய்து இடரை ஏற்கு செய்து அதற்கு பதிலாக பரிசு மற்றும் பணபலனை பெறுவதே துணிச்சல் முதலீடு எனப்படும்.

## 5.1 துணிச்சல் முதலீட்டின் முக்கியத்துவம்

குறிப்பு

1. முதலீட்டாளருக்கு நன்மை
2. தொழில் முனைவோருக்கு நன்மை
3. பொதுவான நன்மைகள்

### 5.1.1 முதலீட்டாளருக்கு நன்மை

1. சிறந்த முதலீட்டு திட்டத்தினை தேர்ந்தெடுத்தல்
2. சிறு சேமிப்பு சுழற்சி தன்மை
3. தொழில் முனைவோரை ஊக்கப்படுத்துதல்
4. அதிகமான மீள் வரவினை பெறுதல்
5. துணிச்சலான இலாபம்
6. பெருமுதலீட்டு திட்டத்திற்கு உதவுதல்
7. அரசின் திட்டங்களுக்கு வழிகாட்டுதல

### 5.1.2. தொழில் முனைவோருக்கு நன்மை

1. தொழில் முனைவோரை துணிச்சல் முதலீடானது ஊக்கம் செய்து புதிய தொழில் நுட்பங்களை மக்களுக்கு கிடைக்க உதவி செய்கின்றது.
2. பெரிய மற்றும் நீண்டகால முதலீட்டிற்கு அதிகமான நிதி தேவைப்படும். இதனை வங்கிகள் மூலம் பெறப்படும் கடனை போன்றே துணிகர முதலீடுகளும் அதிக அளவில் பயன் தருகின்றது.
3. தொழில் முனைவோரை ஊக்கப்படுத்துவது மூலம் பெரிய அளவில் வேலைவாய்ப்பு உருவாகின்றது.
4. பொருளாதாரத்தில் அதிகமான செலவாணி ஏற்றுமதி இறக்குமதி நடைபெறுவதால் பொருளாதார வளர்ச்சி ஏற்படுகின்றது.

5. சந்தையின் தேவை அதிகரித்து போட்டி அதிகம் ஏற்பட்டு குறைந்த விலையில் பொருட்களை விற்கமுடியும்.
6. கடின நிதி தேவைகளை துணிகர முதலீட்டினை கொண்டு ஈடு செய்யலாம்.
7. தொழில் முனைவோருக்கு ஊக்கம் கொடுக்கின்றது.

குறிப்பு

### 5.1.3.பொதுவான பயன்பாடுகள்

1. புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை வணிகத்தின் ஈடுபடுத்தும் கால அளவினை இது குறைக்கின்றது.
2. புதிய தொழில் நுட்பம் மூலம் புதிய கண்டுபிடிப்புகள் தோன்றுகின்றன.
3. முதலீட்டாளர், வங்கியர், வணிக கடன் பெறுவோர் ஆகியோருக்கு உதவுகின்றது.
4. முதன்மை சந்தையில் புதிய பணமுதலீடுகளை செய்ய துணிச்சல் முதலீடுகள் தேவைப்படுகின்றது.
5. தொழில் பின்தங்கிய பகுதிகளில் புதிய தொழில் முனைவோர் தொழில் துவங்க இந்த துணிச்சல் முதலீடுகள் தேவைப்படுகின்றனர்.
6. சிறு தொழில், நடுத்தர நீண்டகால தொழில் நிதி தேவைகளை துணிச்சல் முதலீடுகள் பூர்த்தி செய்கின்றது.
7. தொழில் முனைவோரையும் முதலீட்டாளரையும் துணிச்சல் முதலீடுகள் இணைக்கின்றது.
8. தனியார் துறை முதலீடுகளை ஊக்குவிக்கின்றது
9. நிதி சுழற்ச்சியினை ஏற்படுத்துகின்றது.
10. அரசின் வரிவருவாய் உதவுகின்றது.

## 5.2 உரிமை பத்திரங்கள்

1. சாதாரண பங்குகள்
2. முன்னுரிமை பங்குகள்

## 5.3 உரிமை பத்திரங்கள்

குறிப்பு

உரிமை பத்திரங்கள் என்பது முதலீடுகள் செய்யும் முதலீட்டாளர்கள் அந்த முதலீட்டு நிறுவனத்தின் மீது கொண்ட உரிமையினை குறிக்கின்றது. இவ்வகை பத்திரங்களானது நிறுவனத்தின் இலாபம் அல்லது நட்டத்தில் பங்கேற்கின்றனர். உண்மையான உரிமையாளர் என்பதுவே இந்த சாதாரண மூலதன பத்திரங்களை வைத்து இருப்பவர் ஆவார். பொதுவாக இதனை இரண்டு வகையிலான உரிமை பத்திரங்கள் உள்ளன. 1. சாதாரண பங்குகள் மற்றும் முன்னுரிமை பங்குகள் என இருவகையாக பிரிக்கலாம். துணிச்சல் முதலீட்டின் மூலம் ஒரு முதலீட்டாளர் ஒரு பெரிய தொகையில் சிறிய தொகையினை முதலீடுகள் செய்து நிறுவனத்தின் பங்குதாராக மாறுகின்றனர். மேலும் உரிமையினை சாதாரண பங்குகள் வைத்து இருப்பவர் முன்னுரிமை பங்குகள் வைத்து இருப்பவரை காட்டிலும் அதிகம் பெறுகின்றனர். நிறுவனம் கலைக்கப்படும் வரை உண்மையான உரிமையாளராக சாதாரண பங்குகள் வைத்து இருப்பவர் செயல்படுவார்.

## 5.4 உரிமை பத்திர வகைகள்

### 1.சாதாரண பங்குகள்

சாதாரண பங்குகள் என்பது ஒரு நிறுவனம் பொதுமக்களிடம் தனது நிறுவன பங்குகளை வெளியிட்டு முதலீட்டினை பெறுவது என்பதாகும். இதனை பொது வெளியிடுகள் என அழைக்கப்படும். சாதாரண பங்குகள் வைத்து இருப்பவர் நிறுவனத்தின் உரிமையாளராக கருதலாம். முடிவெடுக்கும் சமயத்தில் சாதாரண பங்குதாரரை கலந்து ஆலோசிக்காமல் முடிவெடுக்க முடியாது. மேலும் சாதாரண பங்குகளை வைத்து இருப்பவர் இறுதியான இலாபத்தினை பெறுகின்றார். மேலும் நிறுவனம் கலைக்க பெற்ற பிறகும் இவரின் சட்ட உரிமைகள் தொடர்கின்றன.

குறிப்பு

2.முன்னுரிமை பங்குகள் என்பதும் நிறுவனத்தின் உரிமையில் பங்கு பெறுகின்ற முதலீட்டாளர்கள் முன்னுரிமை இலாபத்தினை பெறுகின்றார். இவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை மட்டும் இலாபத்தில் கொடுக்கப்படும் நிறுவனம் பெறும் இலாபம் அல்லது நட்டம் இவரை பாதிப்பது இல்லை.

3. உரிமை வெளியீடுகள் : ஏற்கெனவே சாதாரண பங்குகளை வைத்திருப்பவருக்கு மட்டுமே உரிமை வெளியீடுகள் கொடுக்கமுடியும். தனது நிதிபெருக்கத்தின் தேவைக்கு ஏற்றவகையில் உரிமை வெளியீடுகள் அமைத்து இருக்கும்.

## 5.5 கடன் பத்திரங்கள்

**வகைகள்**

- பத்திரங்கள்
- நிறும பத்திரங்கள்
- கடனீட்டு பத்திரங்கள்
- வணிக உண்டியல்கள்
- கருவுல உண்டியல்கள்
- பங்குகள் உரிமைபத்திரம்

### 1.பத்திரங்கள் ( Bonds)

பத்திரங்கள் என்பது கடன் பெறுபவர் தான் கடன் பெற்றமைக்காக கொடுக்கும் ஒரு ஆவணம் பத்திரங்கள் ஆகும் அல்லது சொத்தினை பெற்றுக் கொண்டு அதன் உரிமையினை அடுத்தவர்க்கு மாற்றி கொடுக்கும் ஆவணம் பத்திரங்கள் ஆகும்.

### 2.நிறும பத்திரங்கள்

நிறும பத்திரங்கள் என்பது நிறுவனம் தனது நிதிதேவைக்காக பொது மக்கள் மற்றும் வணிக வங்கிகள், நிறுவனங்களிடம் இருந்து கடன் பெற்றுக்கொண்டு இதற்கு பதிலாக நிறுவனம் தனது அடையாளத்துடன் ஒரு ஒப்புகை ஆவணத்தை வழங்குகின்றது.

இதில் கடன் அளவு அதன் தன்மை திருப்பி செலுத்தும் கால அளவு வட்டி விகிதம் ஆகியவற்றை கொண்டு இருக்கும்.

குறிப்பு

**3.கடனீட்டு பத்திரங்கள்**

கடனீட்டு பத்திரம் என்பது கடனை பெறும் பொழுது நிறுவனத்தால் அளிக்கப்படும் பத்திரம் ஆகும். இது கடனீட்டு பத்திரம் ஆகும். இது குறிப்பிட்ட கால அளவு கொண்ட நிலையான வட்டிவிகிதம் கொண்ட ஒரு பத்திரம் ஆகும்.

**4.வணிக உண்டியல்கள் :**

பெரும் நிதி தேவையை பூர்த்தி செய்ய நிறுவனங்களால் இது வெளியிடப்படுகின்றன. ஆனால் இதன் கால அளவு ஏழு ஆண்டுகள் ஆகும். வட்டி விகிதம் அதிகமாக கொண்டது. வணிக வங்கிகள் இப்பத்திரங்களில் முதலீடுகள் செய்கின்றன. பொதுநிறுவனங்களும் முதலீடு செய்கின்றன.

**5.கருவூல உண்டியல்கள் :**

இதன் கால அளவு அதிக பட்சம் ஒரு மாதம் ஆகும். இதனை குறுகிய கால பத்திரம் எனப்படுவர். இதனை அரசினால் வெளியிடப்படுகின்றது. அரசின் குறுகிய கால நிதி தேவைகளை இது பூர்த்தி செய்கின்றது. குறைந்த இடாட அதிகமான வட்டி விகிதம் கொண்டதாகும்.

**6. பங்குகளின் உரிமை பத்திரம்**

இதனை ளாயசந றயசசயவெ என அழைப்பர். பங்கு உரிமை பத்திரம் என்பது ஒரு சாதாரண பங்கின் மீது உள்ள உரிமையினை குறிக்கின்றது. யார் இந்த பங்குகளின் உரிமை பத்திரத்தினை வைத்து உள்ளனரோ அவரே பங்குகளின் உரிமையாளராக கருதப்படுவர். மேலும் இவருக்கே முழு உரிமையானது நிறுவனத்தில் உண்டு.

## 5.6 கடன் மற்றும் சொத்து இவற்றின் விகிதம்

ஒரு நிறுவனத்தின் கடனுக்கும் அது ஈட்டும் இலாபத்திற்கும் பெற்ற கடனுக்கும் தொடர்பினை கடன் ஈட்டுவிகிதம் குறிக்கின்றது. இதன் மறுபெயர் வெளியார் கடன் ஈட்டும் விகிதம் என்றும் குறிப்பிடலாம். உரிமையாளர் மற்றும் கடன் கொடுத்தோருக்கும் உள்ள பணமதிப்பிலான உறவினை குறிக்கின்றது. மேலும் நிறுவன சொத்திற்கும் கடனுக்கும் உள்ள விகிதத்தினையும் இது குறிக்கின்றது.

## 5.7 கடன் மற்றும் சொத்து விகிதம்

1. $\dfrac{\text{வெளியார் நிதி கடன்கள்}}{\text{பங்குதாரர் நிதி சொத்துகள்}}$

2. $\dfrac{\text{புற கடன்கள்}}{\text{அக கடன்கள்}}$

வெளியார் கடன்கள் என்பது நிறுவனம் செலுத்தும் நீண்ட கால சொத்துகள், குறுகிய கால சொத்துகள் என்ற அனைத்தினையும் குறிக்கின்றது. பங்குதாரர்கள் நிதி என்பது சாதாரண பங்குகள், முன்னுரிமை பங்குகள், வருவாய் காப்புகள், மூலதன காப்புகள் ஆகியவற்றை குறிக்கின்றது. மேலும் உபரி வருமானங்கள், இலாபம் நட்டம் இவற்றையும் அக கடன்களில் அடங்குகின்றது. அதிகமாக விகிதங்களின் வித்தியாசம் என்பது நிறுவனத்தின் செயல்திறனை குறிக்கின்றது.

## 5.8 துணிச்சல் முதலீடுகளும், நிதி நிறுவனங்களும், வணிகவங்கிகளும் விளக்கம்

பல வணிக வங்கிகள் நிதி நிறுவனங்கள் ஆகியவை துணிச்சல் முதலீட்டில் ஈடுபடுகின்றன. அதன் முதலில் இந்திய தொழில் வங்கியானது (IDBI) 1986 ஆம் ஆண்டு துணிச்சல்

முதலீட்டினை ஆரம்பித்தது. இந்திய நிதி கழகம் (IFCI) என்ற நிறுவனம் தனது துணை நிறுவனமான இடர் முதலீடுகள் தொழில்நுட்ப நிறுவனம் (RCTC) என்ற பெயரில் துணிச்சல் முதலீட்டினை துவங்கியது. மேலும் (UTI) என்ற நிறுவனம் இந்திய பொறுப்பு கழகம்) மற்றும் (ICICI) இந்திய தொழில்கடன் முதலீட்டு கழகம் என்ற அமைப்புடன் இணைந்து (TDIC) என்ற நிறுவனத்தினை 1988 ஆம் ஆண்டு துணிச்சல் முதலீட்டினை துவங்கியது. மேலும் பலதரப்பட்ட பங்கு மாற்றாக மாநில தொழில் வளர்ச்சி வங்கி மாநில நிதி கழகம் ஆகியவை துணிச்சல் முதலீட்டினை துவங்கியுள்ளது. தனியார் துறையில் முதலீட்டினை அதிகமாகவும் இந்த துணிச்சல் முதலீடுகள் உதவுகின்றன.

## 5.8 வங்கிகளால் ஏற்படுத்தப்பட்ட துணிச்சல் முதலீடு அமைப்புகள்

1. (GUC) குஜராத் இடர் துணிச்சல் முதலீடுகள்
2. (APIDCI) ஆந்திர பிரதேச தொழில் வளர்ச்சி வாரிய துணிச்சல் முதலீடுகள்
3. (RCTC) இந்திய நிதி கழகத்தினால் ஏற்படுத்தப்பட்ட துணிச்சல் முதலீடுகள்
4. (SBI CAP) பாரத வங்கியில் உருவாக்கப்பட்ட துணிச்சல் முதலீடுகள்

# அலகு – 6

குறிப்பு

## புதிய துணிச்சல் முதலீடுகள் ஆரம்பித்தல்

6.1 புதிய துணிச்சல் முதலீடுகள் ஆரம்பித்தல்
6.2 புதிய துணிச்சல் முதலீட்டின் வளர்ச்சி மற்றும் சட்டமுறை வடிவம்
6.3 அறிவு சார் சொத்துரிமை
6.4 அறிவு சார் சொத்து உரிமையின் வடிவங்கள்
6.5 காப்புரிமையின் வகைகள்
6.6 வணிக சின்னங்கள்
6.7 வணிக சின்னங்களின் வகைகள்
6.8 பதிப்புரிமை
6.9 துணிச்சல் முதலீடுகளும் அதனை சந்தை படுத்துதலும்

## 6.1 புதிய துணிச்சல் முதலீடுகள் ஆரம்பித்தல்

ஒரு முதலீட்டாளர் புதிய துணிச்சல் முதலீட்டினை செய்யும் பொழுது பலவிதமான அது தொடர்பான செய்திகளை அறிந்து முதலீடுகள் செய்யலாம். மேலும் முதலீடுகள் பாதுகாப்பானது என்று உறுதி செய்த பின்பு முதலீடுகள் செய்யலாம். பல விதமான துணிச்சல் முதலீட்டினை தேர்ந்தெடுக்கும் முன்பு இடர் பற்றிய ஆய்வு செய்த பின்பு முதலீடுகள் செய்யலாம். முதலீடுகள் செய்தால் உண்டான மீள்வரவினை பற்றிய முன்கள ஆய்வினை செய்தபின்பு முதலீடுகள் செய்யலாம்.

## 6.2 புதிய துணிச்சல் முதலீட்டின் வளர்ச்சி மற்றும் சட்டமுறை வடிவம்

**1. மூலதன லாபம் :**

பொதுவான முலதனத்தின் மீது இலாபம் 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு பிறகு கிடைக்கின்றது. துணிச்சல் முதலீட்டில் இடர்

**குறிப்பு**

அதிகம். அது போல் புதிய தொழில்நுட்பமானது புதிய இலாபம் உச்சநிலையினை அடையலாம். துணிச்சல் முதலீடுகளை அதிகமாக புதிய தொழில்முனைவோரின் அறிவு சார் உரிமைகளை மூலதனமாக கொண்டு இதனை தொடங்குகின்றனர். எல்லா வகையான முதலீடுகளை ஆராய்ச்சி செய்து முதலீடுகளின் நீண்டகால தன்மை குறைந்த இடர் ஆகியவற்றை முதலீடுகள் பாதுகாப்பனதாக இருக்கும்.

**2. பங்குசந்தை அறிதல்**

பெரிய முதலீட்டாளர்கள் அல்லது முதலீட்டாளர்கள் முதலில் பங்கு சந்தையின் நடப்பு நிகிழ்வுகளை ஆராய்ந்து அதன் அடிப்படையில் முதலீடுகள் செய்யலாம். இதனால் பத்திரங்களில் முதலீடு செய்யுமுன் பலவகையான நிறுவன திட்டங்களை மற்றும் அமைப்பு முறையேடுகள் ஆகியவற்றை ஆராய்ந்து முதலீடுகள் செய்யலாம்.

**3.நிதிசார் முறைகள்**

நிதி சார் முறை என்பது நிதியினை முதலீடுகள் செய்த பின்பு அதற்கு பிறகு அதனால் பெறப்படும் சலுகைகள் ஆகும். மேலும் செயல்திறன் மிக்க துணிச்சல் முதலீடுகள் என்பது அதிகமான நிதிசார் சலுகைகளை பெறமுடியும். மேலும் புதிய தொழில்முனைவோர் ஊக்கப்படுத்தல் இதன் மூலம் கிடைக்கின்றது.

**4.தனியார் துறை பங்களிப்பு**

தனியார் துறை முதலீடுகள் என்பது புதிய துணிச்சல் முதலீட்டினை செய்ய விரும்புவோர் தான். முதலீடு செய்யும் நிறுவனம் தனியார் துறை என்றாலும் புதிய தொழில் நுட்பம் எனில் அதன் மூலம் புதிய சந்தை வாய்ப்புகளை அதிகமாக பெற்று இலாபத்தின் நிகழ்வு கிடைக்கின்றது. மேலும் முதலீட்டாளர் தனியார் துறையும் ஊக்கப்படுத்தப்படும்.

குறிப்பு

**5.பாதுகாப்பு முதலீடுகள்**

பங்கு சந்தையில் முதலீடுகள் செய்யும் முன்பு முதலீட்டாளர்கள் தனது முதலீட்டின் தன்மை செயல்பாடு மின்வரவு ஆகியவற்றை ஆராய்ந்து முதலிடுகளை செய்யலாம். பண வரவு அதிகம் உள்ள முதலீட்டினையும் முதலீடுகள் மீட்பிற்கு பிறகும் கிடைக்கும் இலாபத்தினை அடிப்படையாக கொண்டு முதலீடுகள் செய்சது பாதுகாப்பனதாக இருக்கும்.

## 6.3 அறிவு சார் சொத்துரிமை

அறிவு சார் சொத்துரிமை என்பது ஒரு புதிய கண்டுபிடிப்பாளர் தான் அறிவின் மூலம் உருவாக்கிய புதிய கண்டுபிடிப்புகள், பொருட்கள், வணிக சின்னங்கள், பிம்பங்கள், கட்டமைப்புகளை பிறர் பயன்படுத்த முடியாமல் தனது சொந்த உரிமைக்காக காப்பு செய்வது அறிவு சார் சொத்துரிமை எனப்படும்.

அறிவு சார் சொத்து உரிமையானது ஒரு நிறுவனம் அல்லது ஒரு நபருக்கு மட்டுமே சொந்தமானதாக கருதப்படும் வேறு யாரும் இதனை பயன்னடுத்தினால் அவர்மீது சட்டபடி வழக்கு தொடர முடியும்.

## 6.4 அறிவு சார் சொத்து உரிமையின் வடிவங்கள்

1. பதிப்புரிமை ( copy rights)
2. வணிக முத்திரைகள் ( Trade Mark)
3. காப்புரிமை ( Pattern )

காப்புரிமை என்பது எழுத்து சார்ந்த படங்கள் கருத்துக்கள் ஆகியவற்றை தயாரிக்கும் நிறுவனம் அல்லது தனிநபர் தான் தயாரித்த கதை, நாவல், புத்தகம் ஆகியவற்றை பிறர் பயன்படுத்தல் இந்த பதிப்புரிமையின் மீது பாதுகாப்பு அறிவு சார்

சட்டத்தின் மூலம் பெறுகின்றனர். எல்லா வகையான பதிப்புரிமையும் பிறகு மாற்றி கொடுத்து அதன் மூலம் பதிப்புரிமை பெற்றவர் இலாபம் அடைகின்றார். இதன் மூலம் புதிய செயல் சிந்தனை வடிவங்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

## 6.5 காப்புரிமையின் வகைகள்

1. பயன்பாட்டு பதிப்புரிமை
2. வடிவமைப்பு பதிப்புரிமை
3. இடம் தொடர்பான பதிப்புரிமை

## 6.6 வணிக சின்னங்கள்

பல நிறுவனங்கள் தங்கள் பெயரில் நிறுவனம் பெயர் தாங்கிய ஒரு தனியான லோகோ ஒன்றை உருவாக்கி அதனை அறிவு சார் சொத்து உரிமை சட்டத்தின் மூலம் பதிவு செய்யலாம். வணிக நிறுவனங்கள் மக்கள் தங்கள் பொருளை எளிதில் பயன்படுகின்றது. வணிக சின்னங்கள் ஒரு நற்பெயரை உருவாக்குகின்றன. பிறகு வணிக சின்னங்கள் தரத்தின் அடையாளமாகவும் கருதப்படுகின்றது.

## 6.7 வணிக சின்னங்களின் வகைகள்

1. சுழற்சி சின்னம்
2. மொழி தொடர்பான சின்னம்
3. ஆலோசனை சின்னம்
4. விவரித்தல் சின்னம்

## 6.8 பதிப்புரிமை :

இது உண்மையான உரிமையாளருக்கு சொந்தமான உரு பொருளை இச்சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்படுகின்றது.

பதிப்புரிமை கால அளவு 50 ஆண்டுகள் ஆகும் பதிப்புரிமை சட்டம் 1957 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. புகைப்படம் தொடர்பான உரிமையானது 25 ஆண்டுகளுக்கு பாதுகாப்பு பெறுகின்றது. இது ஒரு தனிமனிதனின் சிந்தனையில் உருவாகும் கருத்துகளை உருவாக்கின்றது.

## 6.9 துணிச்சல் முதலீடுகளும் அதனை சந்தை படுத்துதல்

பொதுவாக புதிய கண்டுபிடிப்புகள் நுட்பங்கள் செயல் திட்டங்கள், கருத்துக்கள் ஆகியவற்றை பாதுகாப்பதற்கு அறிவு சார் சொத்துரிமை சட்டம் இயற்றப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது. இதன்மூலம் ஒரு செயல் வடிவத்தினை அடுத்தவர் பயன்படுத்தி வணிகம் செய்யாமல் தவிர்க்க முடிகின்றது.

அறிவு சார் சொத்துரிமையில் துணிச்சல் முதலீடுகள் பெரிய பங்கு வகிக்கின்றன. தனியார் துறையினர் தனது சிந்தனையில் உருவான புதிய கண்டுபிடிப்புகளை மேம்படுத்த முதலீடுகள் தேவைப்படுகின்றது. அதற்கு துணிச்சல் முதலீடுகள் எனப்படும். ஏனெனில் இது நற்பலனை கொடுக்கும் என்று கூற இயலாது. புதிய கண்டுபிடிப்புகளில் முதலீடுகள் செய்வதால் புதிய பண்டங்கள் சந்தையில் நுழைந்து மக்களிடையே வரவேற்பு பெருகின்றன. ஆனால் போட்டி பண்டங்கள் இல்லையெனில் நிறுவனம் சந்தையில் அதிகமான இடத்தினை பிடித்து இலாபத்தை பெறமுடியும். அறிவு சார் சொத்துரிமை துணிச்சல் முதலீட்டாளர்களை பாதுகாக்கின்றது எனலாம் ஏனெனில் நிறுவனம் உருவாக்கிய புதிய கண்டுபிடிப்புகளை பிற போலி நிறுவனங்கள் பயன்படுத்த முடியாமல் அறிவு சார் சொத்துரிமை சட்டம் பாதுகாக்கின்றது. துணிச்சல் முதலீடுகள் அதிகமாக செய்யப்பட்டு புதிய தொழில் முனைவோர் உருவாகி வேலைவாய்ப்பு பெருகின்றது.

# அலகு – 7

குறிப்பு

## துணிச்சலான முதலீடுகள்

7.1 புதிய முதலீடுகள் உள்ள முக்கிய கூறுகள்

7.2 புதிய துணிச்சல் முதலீட்டில் அதிகமான வளர்ச்சிக்கான குணங்கள்

7.3 புதிய முதலீட்டின் படி நிலைகள்

7.4 புதிய துணிச்சல் முதலீட்டின் வளர்ச்சி மற்றும் நுட்பங்கள்

## துணிச்சலான முதலீடுகள்

மூலதன சந்தையில் புதிய பொருளை கண்டு பிடிப்பதற்காக அல்லது புதிய தொழில் ஆரம்பிக்கும் தொழில்முனைவோரின் மூலதனத்தின் மீது முதலீடுகள் செய்வது துணிச்சல் முதலீடு எனப்படும்.

துணிச்சலான முதலீடுகள் என்பது புதிய இடர் நிறைந்த முதலீடுகள் எனப்படும். மேலும் இதில் நிறைந்த இலாபம் அல்லது அதிகமான நட்டத்தினை சந்திக்கும் போது இது துணிச்சல் முதலீடுகள் எனப்படும்

இந்தியாவில் UTI மற்றும் ICICI ஆகிய அமைப்புகள் துணிச்சல் முதலீடு எனப்படும். முதலில் துணிச்சல் முதலீடுகளட 1988 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது துணிச்சல் முதலீடுகளை 12 கம்பெனிகள் முதலீட்டில் ஈடுபட்டு வருகின்றன.

அதிகமான நிதி தேவைப்படும் புதிய தொழில் நிறுவனங்களுக்கு இந்த துணிச்சல் முதலீடுகள் எனப்படும் இம்முதலீடுகள் நீண்ட கால தன்மை கொண்டது. மேலும் இது

புதிய தொழில்முனைவோரை உருவாக்கி வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துகின்றது.

**குறிப்பு**

## 7.1 புதிய முதலீடுகள் உள்ள முக்கிய கூறுகள்

- அடிப்படை அனுபவம்
- பண்டங்களின் தேவை
- முதலீட்டின் அடக்கவிலை
- நிதி தேவை திட்டங்கள்
- போட்டி சூழ்நிலை
- அமைப்பு
- சட்டமுறை தேவை
- மீள்வரவுகள்
- மனிதவளம்
- தொழிநுடபத்தின் மேம்பாடு

## 7.2 புதிய துணிச்சல் முதலீட்டில் அதிகமான வளர்ச்சிக்கான குணங்கள்

**1.தொழில்நுட்ப அறிவு**

ஒரு புதிய தொழில்முனைவோர் தான் அறிமுகம் செய்யும் புதிய பொருட்களுக்கு சந்தையில் நல்ல வரவேற்பு இருக்க வேண்டும். அப்போது அத்தொழில் முதலீடுகள் செய்யும் பொழுது அதிகமான வரவுகள் இருக்கும் அது போன்ற தொழில்முதலீடுகள் செய்வது நல்லது.

**2.சட்டமுறை தன்மை**

ஒருதுணிச்சலான முதலீடுகள் செய்யும் பொழுது அத்தொழில் சட்டத்தினால் அனுமதி பெற்று இருக்க வேண்டும்.

அவ்வாறு இல்லையெனில் முதலீடுகள் நட்டத்தினை சந்திக்கும் நிலை ஏற்படும்.

குறிப்பு

**3.சந்தையின் நிலை**

சந்தையின் தன்மையினை ஆராய்ந்த முதலீடுகள் செய்வது நல்லது. மேலும் புதிய பொருட்களை சந்தையில் அறிமுகம் செய்யும் பொழுது அதன்மீது முதலீடுகள் செய்தால் நல்ல ஈட்டுவரவு ஏற்படும்.

**4.நல்ல செயல்திட்டம்**

செயல்திட்டம் என்பது நல்லமுறையில் தயாரித்தால் அதன்மீது முதலீடுகள் செய்வது நன்று. துணிச்சல் முதலீடுகள் நல்ல செயல்திட்டத்தினை அடிப்படையாக கொண்டது.

**5.நிதிதேவைகள்**

அதிக காலம் கொண்ட முதலீடுகள் அதிகமான இலாபம் நீண்ட காலத்தில் பெறப்படும் குறுகிய கால முதலீடுகள் என்பது குறைந்த இலாபம் கிடைக்கின்றது. இதன் மூலம் ஒரு துணிச்சல் முதலீடுகள் என்பது குறுகிய காலம் மற்றும் நீண்டகாலம் கொண்டதாக அமையலாம்.

**6.மீள்வரவு :**

துணிக முதலீடுகள் என்பதில் மீள்வரவின் அடிப்படையில் அமையலாம். மீள் வரவு சீராக அதிகமான காலம் கொண்டதாக அமையலாம். இடர்குறைந்த அதிகமான மீள்வரவு கொண்ட செயல்திட்டத்தில் துணிகர முதலீடுகள் இருப்பது நன்மை பயக்கும்.

**7.தனிப்பட்ட அணுகுமுறை**

முதலீடுகள் பெறப்படும் நிறுவனங்களின் அவற்றின் மீது முதலீடுகள் பெறுபவரை அடிப்படையாக இந்த முதலீடுகள் அமையலாம்.

**குறிப்பு**

**அதிகமான வரவு கொண்ட துணிகர முதலீட்டின் காரணிகள்**

- புதிய நுட்பம்
- மிக பெரிய சந்தை வாய்ப்பு
- தேவைகள் அதிகமான பண்டங்கள்
- சட்டமுறை இடர்குறைவான முதலீடுகள்
- அதிக காலம் கொண்ட செயல்திட்டம்
- நிதி முதலீடுகள் குறைவான தேவைகள்
- சந்தை ஆராய்ச்சி

## 7.3 புதிய முதலீட்டின் படி நிலைகள்

**1.சூழ்நிலைகளை முழுமையான ஆராய்ச்சி செய்தல்.**

தற்பொழுது நிலவும் சமூகம்,பொருளாதார நிலையினை கருத்தில் கொண்டு முதலீடுகள் செய்வது நல்லது. முதலீட்டாளர்கள் சூழ்நிலையினை ஆராயமல் முதலீடுகள் செய்தால் அதற்கு இடர் அல்லது நட்டமானது விலையாக அமையும்.

**2.வணிகத்தின் வாய்ப்புகள்**

சந்தையில் பொருளின் தன்மையினையும் அதற்கு வாடிக்கையாளரிடம் உள்ள வரவேற்பு ஆகியவை மிகவும் முக்கியமானதாக அமையும். வாய்ப்புகள் என்பது குறுகிய நிதி தேவைகள் கொண்ட முதலீடுகள் சரியான இலாபத்தினை தரும் எனலாம்.

**3.வாய்ப்புகளை உண்மையான மாற்றுதல்**

தொழில் வாய்ப்புகளை முதலீடுகளாக மாற்றுவது மிக முக்கியமான ஒன்றாகும். வாய்ப்புகளை சரியான முறையில் பயன்படுத்தி முதலீட்டு திட்டங்களை தேர்ந்தெடுத்து முதலீடு செய்யலாம்.

குறிப்பு

**முதலீடுகள் செய்வதன் வாய்ப்புகள் படிநிலைகள்**

1. பிரச்சனைகள்
2. மாற்றம்
3. இடைவெளி
4. போட்டி நிலை

**4.சந்தை ஆராய்ச்சி**

வணிகத்திற்கு சந்தையின் வாய்ப்புகளை அறிந்து முதலீடுகள் செய்வது மிக சிறப்பான ஒன்றாகும்.

**5.வணிக திட்டம் மேம்பாடு**

செயல்திட்டத் சரியான முறையில் வகுக்கப்பட்டால் முதலீடுகள் செய்வதற்கு சரியாக திட்டமிடலாம்.

**6.நிகழ்வு தன்மை ஆய்வு**

தொழில் முதலீடுகள் வருமானம் அல்லது மீள்வரவினை அடிப்படையாக அமையும். அதன் அடிப்படையில் முதலீடுகள் அமையலாம்.

**7.அறிக்கை தயாரித்தல்**

நல்லமுறையில் வகுக்கப்பட்ட செயல்திட்டமானது நல்ல முதலீட்டு திட்டங்களை தேர்ந்தெடுத்லுக்கு அடிப்படையாக அமைகின்றது.

## 7.4 புதிய துணிச்சல் முதலீட்டின் வளர்ச்சி மற்றும் நுட்பங்கள்

புதிய துணிகர முதலீடுகள் என்பது தனியார் பங்களிப்புடன் செய்யப்பட்ட இடர்நிறைந்த சாதாரண மூலதனம் ஆகும். புதிய தொழில் முதலீட்டில் கவனிக்க வேண்டிய நுட்பங்கள் யாதெனில் நிறுவனம் முதலீட்டின் தன்மையும் அதன் பின்பற்றப்படும் தொழில்நுட்பங்கள், நிறுவனத்தின் சந்தை வாய்ப்புகள் தேவைகள், போட்டிகள் மீள்வரவு ஆகியவற்றை முழுமையாக ஆராய்ந்து முதலீடுகள் செய்வது நீண்டகால ஆதாயத்திற்கு வழி செய்யும்.

தெடர்ந்து முதலீட்டின் மீது வருவாய் மீண்டும் பிற தொழிலில் முதலீகள் செய்ய ஊக்குவிக்கும்



**துணிச்சல் முதலீட்டினை உருவாக்குதல்**

பல வங்கிகள் மற்றும் அமைப்புகள் தொழில் முதலீட்டினை செய்கின்றன. பொதுவாக பொது மக்களிடம் சிறு வைப்புகளாக பெற்று அதனை இந்த துணிகர முதலீட்டினை முதலீடு செய்கின்றன. எல்லாவகையான துணிச்சல் முதலீட்டினை UTI மற்றும் LIC செய்கின்றன. இந்தியாவில் பல தொழில் முதலீட்டு கழகங்கள் உள்ளன. முதன்முதலில் ஆந்திரா தொழில் முதலீட்டு கழகங்கள் மற்றும் குஜராத் தொழில் முதலீட்டு கழகங்கள் ஆகியவை இப்பணியை செய்கின்றன.

# அலகு – 8

குறிப்பு

## வணிக ஆலோசனை திட்டமிடல்

8.1 வணிகத்தில் நல்ல திட்டத்தினை கண்டறிதல், விதியினை வகுத்தல் உருவாக்குதல்
8.2 வணிக திட்டமிடல் மேலாண்மை
8.3 வணிக திட்டமிடல் அடையாளம் காணல்
8.4 வணிக திட்டமிடல் அடையாளம் காணல் கருவிகள்
8.5 தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார அடிப்படையில் ஆய்வு
8.6 நிதி நிறுவனம் தொடர்பான ஆய்வு
8.7 பிரிவுகள் அடிப்படையில் திட்டமிடல்
8.8 செயல் திட்டம் மதிப்பிடல் முறைகள்
8.9 திட்டம் நிகழ்வு தன்மை மதிப்பிடல்
8.10 திருப்பி செலுத்தும் முறை
8.11 முதலீடுகள் மீதான மீள்வருகை முறையின் வகைகள்
8.12 தள்ளுபடி ரொக்க சட்டமுறை வகைகள்
8.13 திட்டம் மதிப்பிடல் வடிவமைப்பு ஆய்வு

## வணிக ஆலோசனை திட்டமிடல்

தொழில்முனைவோர் தொழில் திட்டமிடல் மற்றும் முன் ஆலாசனை செய்தல் என்பது மிகமுக்கியமான ஒன்றாகும். ஒரு நல்ல வணிக திட்டமிடல் நல்ல பயனை தருகின்றது. ஆலோசனை செய்தல் அல்லது எண்ணத்தில் உதிக்கும் திட்டம் பல படி நிலைகளை கடந்து செயல்பாட்டிக்கு வருகின்றது. சிறந்தொரு திட்டம் தேர்ந்தெடுத்தல் என்பது அனுபவம் உள்ள தொழில் முனைவோரை கொண்டு நல்ல முடிவு எடுக்கப்படுகின்றது.

## 8.1 வணிகத்தில் நல்ல திட்டத்தினை கண்டறிதல், விதியினை வகுத்தல் / உருவாக்குதல்

குறிப்பு

வணிக திட்டமிடல் இலக்கணம்

**Projects are described as the cutting edge of development or as building block of development by Ernesto Fransco**

## 8.2 வணிக திட்டமிடல் மேலாண்மை

வணிக திட்டமிடல் மேலாண்மை என்பது அறிவு, திறன்கள், கருவிகள், தொழில்நுட்பம் ஆகியவற்றை கொண்டு ஒரு திட்டம் செயல்படுத்தல் என்பதாகும்.

**வணிக திட்டமிடல் அடையாளம் காணல்**

பல தரப்பட்ட திட்டத்தில் அதிக முன்னுரிமை தரக்கக்கூடிய ஒரு திட்டத்தினை அடையாளம் காணலே வணிக திட்டமிடலே அடையாளம் காணல் எனப்படும்.

**வணிக திட்டமிடல் அடையாளம் காணல் கருவிகள்**

1. சூழ்நிலை பகுபாய்வு
2. SWOT பகுப்பாய்வு
3. பிரச்சனைகள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காணல்
4. வளங்களை பகுப்பாய்வு செய்தல்

**1. சூழ்நிலை பகுப்பாய்வு**

சூழ்நிலை பகுப்பாய்வில் சந்தையின் வாய்ப்புகள் ஆய்வு செய்வது என்பதாகும்.

- சந்தை தன்மை ஆய்வு
- நிலைபோக்கு ஆய்வு
- வாடிக்கையாளர் பகுப்பு
- வளங்கள் வழிகள்

குறிப்பு

**2.SWOT பகுப்பாய்வு**

- பலம் (S)
- பலவீனம் (W)
- வாய்ப்புகள் (O)
- பயங்கள் (T)

பிரச்சனைகளட மற்றும் வாய்ப்புகள் அடையாளம் காணுதல்

1. சமூக கலாச்சார ஆய்வு
2. தொழில்நுட்ப ஆய்வு
3. பொருளாதார ஆய்வு
4. இயற்கை ஆய்வு
5. அரசியல் ஆய்வு
6. அரசு திட்டங்கள்
7. சூழ்நிலை ஆய்வு

**4.வளங்கள் ஆய்வு**

- ✓ நிலை சொத்து ஆய்வு
- ✓ புலனாக சொத்து ஆய்வு
- ✓ போட்டி பற்றிய ஆய்வு
- ✓ வாய்ப்புகள்

**திட்டங்களை வகைப்படுத்துதல்**

1. திட்டங்களின் அளவு அடிப்படையில்
2. தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார அடிப்படையில்
3. நிதிநிறுவனம் தொடர்பான ஆய்வு அடிப்படையில்
4. பிரிவுகள் அடிப்படையில்

**திட்டங்கள் அளவு அடிப்படையில் வகைப்படுத்துதல்**

**1.அளவு திட்டம்**

1. மின் உற்பத்தி
2. சுரங்கங்கள்

**அளவின் அடிப்படையில் திட்டம்**

1. உடல்நலம்
2. கல்வி

3. பாதுகாப்பு

**2.தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார அடிப்படையில் ஆய்வு**

தொழில் நுட்பம் ஆய்வு என்பது தொழிலினை துவங்கும் முன்பு அதன் தொழில் நுணுக்கங்களை ஆய்வு செய்ய வேண்டும். நல்ல தொழிலில் நுட்பமானது தொழிலினை எளிதில் வெற்றி பெற வைக்கமுடியும். கடினமான சூழ்நிலையில் வெற்றி பெற இவ்வகை நுட்பங்கள் உதவிகரமாக இருக்கும். பெரிய தொழில்திட்டம் தேர்வு செய்தலில் நுட்பங்கள் ஆய்வு செய்தவதில் மிக முக்கியம் ஆகும்.

**பொருளாதார அடிப்படையில் ஆய்வு**

பொருளாதார அடிப்படையில் ஆய்வு என்பது பணவீக்கம், பணவாட்டம், போட்டி, தேவை, அளிப்பு, விலை ஆகியவற்றை ஆய்வு செய்தல் பொருளாதார ஆய்வு எனப்படும். மேலும் பொருளாதார ஆய்வில் தொழில் லாபத்தினை ஆய்வு செய்வது இதன் நோக்கமாகும்.

**3.நிதி நிறுவனம் தொடர்பான ஆய்வு**

இதில் நிதி பெறுவது ஆய்வு நோக்கமாகும். இதில் நிலை சொத்து சாதாரண சொத்து பற்றி ஆய்வு செய்கின்றது. மேலும் ரொக்கம் பெறுதல், ரொக்கம் செலுத்துதல் ஆகியவை ஆய்வு செய்கின்றது. கடன் கிடைப்பதை ஆய்வு செய்கின்றது.

- ✓ வயது
- ✓ புது திட்டம்
- ✓ விரிவாக்கத்திட்டம்
- ✓ நவீனமயமான திட்டம்
- ✓ வேறுபடுத்தப்பட்ட திட்டம்
- ✓ நல திட்டம்
- ✓ சேவை திட்டம்
- ✓ மேம்பாட்டு திட்டம்

**4.பிரிவுகள் அடிப்படையில் திட்டமிடல்**

1. விவசாயம்
2. பாசன வசதி

குறிப்பு

3. தொழிற்சாலை
4. போக்குவரத்து
5. சமூக சேவை
6. பல சேவை திட்டங்கள்

**செயல் திட்டம் மதிப்பிடல் முறைகள்**

- பொருளாதார பகுப்பாய்வு
- நிதிநிலை பகுப்பாய்வு
- தொழில்நுணுக்க பகுப்பாய்வு
- சந்தை பகுப்பாய்வு
- மேலாண்மை பகுப்பாய்வு

**திட்டம் நிகழ்வு தன்மை மதிப்பிடல்**

திட்டம் நிகழ்வு தன்மை மதிப்பிடல் என்பது ஒரு திட்டமானது எந்தமுறையில் இலாபத்தினை ஈட்டுகின்றது ஒரு திட்டத்திற்கும், மற்றொரு திட்டத்திற்கும் என்ன வகையான வேறுபாடு உள்ளது திட்டம் பயன்படுகின்ற காலம், திட்டத்தின் மீள்வரவு ஆகியவற்றை திட்ட நிகழ்வு மதிப்பீடுகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. ஒரு நிறுவனம் முதலீடுகள் செய்யும் போது மேற்கண்ட எல்லாவகையான சாத்திய கூறுகளை அறிந்து முதலீடுகள் செய்யப்படுகின்றது.

திட்டங்களை முன்மதிப்பீடு முறைகள்

1. நிதி சார்ந்த அளவைகள்
2. நிதி சாராத அளவைகள்

**1. நிதி சார்ந்த அளவைகள்**

- திருப்பி செலுத்தும் முறை
- முதலீடு மீதான மீள் வருகை
- தள்ளுபடி ரொக்க சட்டமுறை

பொது மேலாண்மை செய்வோர் நிதி சம்பந்தமான முதலீடுகள் செய்கின்றனர். ரொக்கம் அதிகமாக சுழல்கின்ற முதலீடுகள் நிதிசார்ந்த முதலீடுகள்.



**திருப்பி செலுத்தும் முறை**

திருப்பி செலுத்தும் முறை என்பது முதலீடுகள் செய்து அந்த முதலீடுகள் எப்பொழுது மீள்வரவாக செய்கின்றதோ அதனை திருப்பி செலுத்தும் முறை எனப்படும். முதலீடுகளின் தொகை மீள்வரவாக பெறப்பட்ட பிறகு வருகின்ற தொகையினை இலாபம் எனப்படும். ஆனால் பொதுவாக மீள்வரவானது ஒரு குறிப்பிட்ட முறையில் மீள்வரவு நின்றது எனில் அதனை மீள்வரவு நட்டம் எனப்படும்

**2.முதலீடு மீதான மீள்வருகை முறை**

இம்முறையானது இலாப விகிதம் என்பது தொடக்க மூலதனம், இலாபத்திற்கும் இடையே உள்ள விகிதம் முறையினை குறிக்கின்றது. மூலதனம் பெறப்படும் ரொக்கத்துடன் ஒப்பிட்டு திட்டம் ஏற்றல் மற்றும் மறுத்தல் நடைபெறுகின்றது.

**முதலீடுகள் மீதான மீள்வருகை முறையின் வகைகள்**

மொத்த வருமான முறை

முதலீடு மீதான சராசரி வருகை வீதம்

முதலீடுகள் மீதான இலாபமுறை

**3.தள்ளுபடி ரொக்க முறை**

இம்முறையானது காலத்தின் அளவுகளையும் திருப்பி செலுத்தி மீள்வரவினை இரண்டின் தன்மைகளையும் எடுத்துக்கொள்வது இல்லை. ரொக்கமானது கால கணக்கில் பணவீக்கம் பணவாட்டம் இரண்டின் தன்மையினை பொருத்து இது அமைகின்றது. ருபாயின் மதிப்பும் ஏற்ற இறக்கத்தின் வசப்பட்டது. தள்ளுபடி ரொக்க சட்டமுறையானது முதலீடுகளும் சாதாரணமாக பெறப்படுகின்ற வட்டியினையும் இது எதிர்பார்க்கின்றது ஆகும்.

**தள்ளுபடி ரொக்க சட்டமுறை வகைகள்**

- அகவருகை விகிதமுறை

- நிகழ்கால மதிப்பு முறை
- நிகழ்வு தகவு முன்மதிப்பு முறை

குறிப்பு

**2.நிதிசாராத அளவைகள்**

நிறுவனத்தில் முதலீடுகள் செய்யும் பொழுது பல்வேறு சிறப்பு காரணிகளை மதிப்பிட வேண்டும். மேலும் நிதிசாராத அளவைகள் என்பது போட்டி, அளிப்பு, தேவை, விலை, சந்தையின் பங்களிப்பு அரசு காரணிகள் ஆகியவற்றை நிதிசாராத அளவைகள் எனப்படும். மேலும் நிதிசாராத அளவைகளில் மிக முக்கியமானது நிறுவனம் சார்ந்த மேலாண்மை கொண்டு அமைகின்றது.

**திட்டம் மதிப்பிடல் வடிவமைப்பு ஆய்வு**

திட்டம் மதிப்பிடல் வடிவமைப்பு என்பது முதலீடுகள் சார்ந்த திட்டங்களை தேர்ந்தெடுத்து அதில் முதலீடுகள் செய்வது மிக முக்கியமான ஒன்றாகும். திட்டம் வடிவமைப்பில் முதலீடுகள் செய்து முடிவெடுத்த பின்பு அதனை வடிவமைக்க வேண்டும் அல்லது முதலீடுகள் செய்ய வேண்டும். பிறகு அதில் பெறும் இலாபத்தினை கணக்கிட்டு முதலீடுகளுடன் ஒப்பிடுகின்றது.

**நிதி சார்ந்த ஆய்வு முறைகள்**

- விகித பகுப்பாய்வு முறை
- ரொக்க சட்டமுறை
- நிதி சார்ந்த சட்டமுறை
- ஒப்பிட்டு அணுகுமுறை
- இருப்பு நிலை குறிப்பு அணுகுமுறை

# அலகு – 9



## நிதி நிறுவனங்கள்

9.1 நிதி நிறுவனங்களும் தொழில் நிறுவனங்களும்

9.2 தொழில் முனைவோருக்கு கடன் வழங்கும் வணிக வங்கிகள்

9.3 இந்திய தொழில் வளர்ச்சி வங்கி ( IDBI )

9.4 மாநில தொழில் வளர்ச்சி வங்கி ( SIDBI )

9.5 இந்திய நிதி கழகம் ( IFC )

9.6 மாநில நிதி கழகம் ( SFC )

9.7 மறுசீரமை வங்கி ( IRCI )

9.8 ஆயுள் காப்பீட்டு கழகம் ( LIC )

9.9 தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் ( TIIC )

9.10 இந்திய தொழில் கடன் முதலீட்டு கழகம் ( ICICI )

## நிதி நிறுவனங்கள்

தொழிற் நிறுவனங்களுக்கு மிக முக்கியமான தேவை ஒன்று நிதி தேவைகள் ஆகும். இதில் குறுகிய கால நிதி என்பது நடைமுறை மூலதனம் எனப்படும். அடுத்து நீண்டகால நிதி என்பது நிரந்தர மூலதனம் எனப்படும். மேலும் பல நிதி நிறுவனங்கள் தொழில் நிறுவனங்களுக்கு நீண்ட கால கடன்கள், குறுகிய கால கடன்கள் வழங்குகின்றன.

## 9.1 நிதி நிறுவனங்களும் தொழில் நிறுவனங்களும்

தொழில் நிறுவனத்தின் நீண்ட கால நிதியினை பெறுவதற்கு நிதி நிறுவனங்களை நம்பியிருக்கின்றது. மேலும் தொழில் நிறுவனம் ஆரம்பிக்கும் முன்பே நிதி நிறுவனங்களின் பணி துவங்குகின்றது.

அதன் படி தொழில் நிறுவனங்களுக்கு தகவல் அறிக்கை வெளியிடுவதில் முதல் பணியினை துவங்குகின்றது. நிதி நிறுவனங்களை இரண்டு வகையாக பிரிக்கலாம். அதில் வணிக வங்கியர், வியாபார வங்கியர் எனப்படும் பல வணிக வங்கிகள்,தொழில் நிதியினை கொடுத்து தொழில் முனைவோரை மேம்படுத்துவதற்காக அமைக்கப்ட்டு உள்ளது. இதில் பல தரப்பட்ட திட்டங்கள், பலதரப்பட்ட சலுகைகள் மற்றும் பல ஊக்கத்திட்டங்களை கொடுத்து கொண்டே உள்ளது. இவ்வகை நிதி நிறுவனங்கள் அரசு சார்ந்த நிதி நிறுவனங்கள், தனியார் நிதிநிறுவனங்கள் என பிரிக்கலாம்.

## 9.2 தொழில் முனைவோருக்கு கடன் வழங்கும் வணிக வங்கிகள்

1. இந்திய தொழில் வளர்ச்சி வங்கி ( IDBI )
2. மாநில தொழில் வளர்ச்சி வங்கி ( SIDBI )
3. இந்திய நிதி கழகம் ( IFC )
4. மாநில நிதி கழகம் ( SFC )
5. மறுசீரமை வங்கி ( IRCI )
6. ஆயுள் காப்பீட்டு கழகம் ( LIC )
7. தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் ( TIIC )
8. இந்திய தொழில் கடன் முதலீட்டு கழகம் ( ICICI )

## 9.3 (IDBI) இந்திய தொழில் வளர்ச்சி வங்கி

இந்த வங்கி முழுவதும் தொழில் வளர்ச்சிக்கு என ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட வருடம் 1964 1 ஜுலை ஆகும். 1976 ஆம் ஆண்மு முழு உரிமையும் இந்திய அரசிற்கு மாற்றப்பட்டது.

குறிப்பு

## நிதி மூலங்கள்

- அரசுக்கு கடன் வழங்குதல்
- சுடீஜ யிடம் நிதியினை பெறுதல்
- உள்ளூர் சந்தையில் வணிக பத்திரங்களை கொள்முதல் செய்கின்றது.
- அந்நிய செலவாணி சந்தையில் அந்நிய செலவாணி நிதியினை பெறுதல்

## IDBI யும் தொழில் முனைவோர் திட்டங்களும்

- ❖ அந்நிய செலவாணி நிதி பெறுதல்
- ❖ தொழிற்சாலையினை நவீனமயமாக்குதல்
- ❖ துணியாலைகளை மேம்படுத்தல்
- ❖ துணிகர முதலீடுகள் செய்தல்
- ❖ கருவிகளுக்கு நிதி வழங்குதல்
- ❖ மறைமுக நிதியளிப்புகள்
    1. சிறு குறு நிதி நிறுவனங்களும்
    2. உண்டியல் மறு கழிவு செய்தல்
    3. மறுசீரமை நிதியளித்தல்
    4. விதை முதல் அளித்தல்

## IDBI யின் பணிகள்

1. நேரடி நிதி
2. பத்திரங்களுக்கு ஒப்புறுதியளித்தல்
3. மென்கடன் திட்டம்
4. தொழில்நுட்ப கடன்
5. சாதாரண பங்குகள்
6. உண்டியல் கழிவு செய்தல்
7. சிறப்பு கடன் திட்டம்
8. புதிய தொழில் முனைவோருக்கு நிதி
9. தொழில்நுட்ப நிதி

## 9.4 .மாநில தொழில் முதலீட்டு கழகம் ( SIDBI )

குறிப்பு

மாநில தொழில் வளர்ச்சி வங்கியானது ஏப்ரல் 2, 1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த வ ங்கியானது சிறு தொழில் நடுத்தர தொழில் நீண்ட கால தொழில் ஆகியவற்றிக்கு கடன் வழங்கும் நிறுவனம் ( SIDBI ) ஆகும்.இந்த வங்கியின் நோக்கம் சமூகம், பொருளாதார மேம்பாட்டினை முன்னேற்றுவது ஆகும்.

**SIDBI- யின் இயல்புகள்**

- தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தல்
- நவீனமயமாக்களுக்கு உதவி செய்தல்
- வேலைவாய்ப்பினை பெறுக்குதல்
-

**SIDBI யின் மேம்பாட்டு பணிகள்**

1. சந்தையினை விரிவாக்கம் செய்தல்
2. கிராமபுற தொழில் மயமாக்கல்
3. சுய உதவி குழு மேம்பாடு
4. தொழில்முனைவோர் தொடர்பான நடவடிக்கை
5. நவீனமயமாக்கல்
6. தொழில் நுட்ப மேம்பாட்டினை புகுத்தல்
7. தர மேம்பாடு

## 9.5 IFCI - இந்திய நிதி கழகம்

முதவில் துவங்கப்பட்ட தொழில் மேம்பாட்டு பணிகளுக்காள வங்கியா் எனப்படும். இது 1948 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது பொது நிறுவனமாக 1956 நிறும சட்டத்தின் படி துவக்கப்பட்டது.

இதன் நிதி திரட்டுதல் என்பது பத்திரங்களை வெளியிடுவதன் மூலம் பெறப்படுகின்றது. நவீன நிதியினை அந்நிய கடன் கொடுக்கும் நிறுவனங்கள் மூலம் பெறுகின்றது.

**பணிகள் :**

1. நேரடி நிதி பணிகள்
2. உணவகங்களுக்கு கடன் வழங்குதல்
3. நவீனமயமாக்களுக்கான மென்கடன்
4. இணைப்பு கடன்
5. இணைந்த நிதிகள்

**வட்டி விகிதம்**

1. சாதாரணமாக 14% வட்டியில் கடனும்
2. மென் கடன் திட்டம் எனில் 12.55% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகின்றது.

மேம்பாட்டு பணிகள்

1. பிற்படுத்தப்பட்ட பகுதி வளர்ச்சி
2. பட்டியின பகுதிகள் வளர்ச்சி
3. மேலாண்மை திறனை மேம்படுத்தல்
4. செயல்ஊக்கம் அளித்தல்
5. சுய மேம்பாடு சுய வேலைவாய்ப்பு உருவாக்கம்

## 9.6 மாநில நிதி கழகம் (SFC)

பாராளுமன்றத்தில் மாநில நிதி கழக சட்டம் 1951 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. 1953 ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலம் முதல் நிதி கழகத்தினை ஆரம்பித்தது. தற்பொழுது 18 மாநில நிதிகழகம் ஆரம்பிக்கப்ட்டு உள்ளது.

**பணிகள் (SFC)**

1. வியாபார வங்கி சேவை
2. ஏற்றுமதி கடன் அளித்தல்
3. ஆலோசனை வழங்குதல்
4. குறுகிய, நடுத்தர நீண்ட கால தொழில்களுக்கு கடன் வழங்குதல்

5. உத்திரவாத கடன் அளித்தல்
6. ஒப்புறுதியளித்தல்
7. நிறுவனங்களிடம் கடனீட்டு பத்திரங்களை கொள்முதல் செய்தல்

## 9.7 IRCI - இந்திய மறுசீரமைப்பு வங்கி

இந்த வங்கியானது தொழில் மறுசீரமைப்பிற்கு என ஏற்படுத்தப்பட்ட வங்கியாகும். இது 1971 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இதன் முதல் பெயர் ஐசுஊஐ எனவும் பிறகு ஐசுடீஐ எனவும் மாற்றப்பட்டது. ஆரம்ப மூலதனம் 10 கோடியாகும். 1985 ஆம் ஆண்டு இது தேசியமயமாக்கப்பட்டது. இதன் மூலதனம் 200 கோடியாகும்.

**இதன் பணிகள்**

1. நொடிப்பு நிலை தொழில்களுக்கு உதவுதல்
2. மேலாண்மை மற்றும் தொழில்நுட்ப உதவியினை நொடிப்பு நிலை நிறுவனங்களுக்கு வழங்குகின்றது.
3. உத்திரவாக கடன் நிதியளித்தல்
4. வியாபார வங்கி சேவையை அளித்தல்
5. ஆலோசனை சேவையினை வழங்குகின்றது.
6. குத்தகை நிதியளிப்பு செய்தல்

## 9.8 இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் (LIC)

இந்திய ஆயுள் காப்பீட்டு கழகம் ஒரு ஆயுள் காப்பீட்டு நிறுவனம் ஆகும். பல வாடிக்கையாளரிடம் முன்பணமாக பெறப்பட்ட நிதியினை பங்குசந்தையில் முதலீடுகள் செய்கின்றது. மேலும் பரஸ்பர நிதியிலும் முதலீடு செய்கின்றது. பலவிதமாக முனைமம் வாடிக்கையாளரிடம் பெறுகின்றது. அதனை சந்தையில் முதலீடுகள் செய்து வருகின்றது. இதில் புதியதாக தொழில்

துவங்குபவா் தனது நிதி தேவைகளை பூர்த்தி செய்ய பங்கு சந்தையில் தகவல் அறிக்கையின் மூலம் பங்குகளை வெளியிடுகின்றது. இப்பங்குகளை முதலீடுகள் செய்பவையாக ஆயுள் காப்பீடு நிறுவனம் வழங்குகின்றது. இந்த நிறுவனத்தில் தொழில்முனைவோா் ஆர்வத்துடன் தொழில் முதலீடுகள் செய்ய டுஐஊயினை நாடுகின்றனா். இதன் மூலம் சமூக பொருளாதார வளர்ச்சியும் வேலை வாய்ப்பும் பெறுகின்றது.

## 9.9 (TIIC) தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம்

தமிழ் நாட்டில் தொழில் மேம்பாட்டிற்கு முதலீடுகள் செய்வதற்காக இந்த நிறுவனம் மார்ச் 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் பணியினை 1949 இல் செப்டம்பரில் துவக்கியது. இதன் தலைமையகம் சென்னையாகும். இது நான்கு மண்டலங்களை கொண்ட அமைப்பாகும். மற்றும் 24 கிளைகளை கொண்டது. ருபாய் 300 கோடி வரை கடன் வழங்குகின்றது.

**TIIC-** பணிகள்

1. நடுத்தர கால தொழில் துவக்கம்
2. சிறிய தொழில் துவக்கம்
3. மென்கடன் திட்டம், விதை முதல் வழங்குதல்
4. உணவகங்கள் துவங்குதல்
5. மறு உருவாக்கம்
6. மருத்துவ துறையினை பதிவு செய்தல்
7. போக்குவரத்து செயல்பாடுகள்
8. படகு போக்குவரத்து

**சிறப்பு பணிகள்**

1. தேசிய நிதி திட்டம்
2. தொழில் நுட்ப மேம்பாடு. நவீனமயமாக்கல்

குறிப்பு

3. மென்பொருள் ஆராய்ச்சி
4. துணி ஆலைகளை துவக்குதல்
5. மகிளா உதயம் நிதி
6. வாடகை கொள்முதல்
7. தாட்கோ திட்டம்

## 9.10 ICICI - இந்திய தொழில் முதலீடுகள் மற்றும் கடன் வழங்குதல்

இந்த வங்கியானது 1955 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இது பொது நிறுவனமாக செயல்பட்டு வருகின்றது. தனியார் துறை நிதி தேவையினை பூர்த்தி செய்ய இந்த வங்கி துவங்கப்பட்டது. நடுத்தர, நீண்டகால நிதியினை நடுத்தர, நீண்ட கால தொழில் நிறுவனங்களுக்கு வழங்குகின்றது. இவ்வங்கியானது UNIVERSAL BANK உடன் மார்ச் 2002 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டுள்ளது.

**நோக்கம்**

1. தனியார் தொழில் முதலீட்டாளருக்கு கடன் வழங்குதல்
2. புதிய தொழில் நிறுவனங்களை நவீனமயமாக்கல், விரிவு படுத்தல்
3. தொழில்நுட்பம், மேலாண்மை தொழில் நுட்பம் வழங்குதல்

**பணிகள்**

1. திட்டகால் நிதி வழங்குதல்
2. குத்தகை நிதியிடல்
3. ஆலோசனை பணிகள்
4. வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு கடன் வழங்குதல்
5. அந்நிய செலவாணி கடன் வழங்குதல்
6. பிற பணிகள்

# அலகு – 10

குறிப்பு

## சிறுதொழில் மேம்பாடு

10.1 சிறுதொழில் என்பதன் குணங்கள்
10.2 சிறு தொழில் வளர்ச்சியின் நோக்கம்
10.3 தொழில் வளர்ச்சியில் SSI - யின் பங்கு
10.4 சிறுதொழில் வளர்ச்சியில் உள்ள பிரச்சனைகள்
10.5 சிறு தொழில் வளர்ச்சியில் அரசின் பங்கு பணிகள்
10.6 அரசின் கொள்கை தீர்மானங்களும், சிறுதொழில் வளர்ச்சியும்
10.7 1977 கொள்கையின் சிறப்பு அம்சங்கள்
10.8 தொழிற்சாலை நலிவடைய செய்தல்
10.9 தொழிற்சாலை நொடிப்பு நிலைக்கு இயல்புகள்
10.10 தொழிற்சாலை நொடிப்பு நிலையின் காரணங்கள்
10.11 தொழில் நிறுவனங்கள் நொடிப்பு நிலையினால் ஏற்படும் விளைவுகள்
10.12 தொழிற்சாலை நலிவினை தவிர்க்கும் வழிமுறைகள்

### சிறுதொழில் மேம்பாடு

சிறுதொழில் என்பது மொத்த முதலீடுகள், இடம், கட்டிடம், இயந்திரம் இவற்றில் சொந்தமாகவோ வாடகைக்கு எடுத்தோ, குத்தகைக்கு எடுத்தோ தொழில் நடத்தும் நிறுவனம் சிறுதொழில் எனப்படும்.

துணை தொழில் : சிறு தொழில் நிறுவனத்தினை போன்றோ மொத்த முதலீடுகள் ஒரு கோடிக்கும் குறைவாக இருக்கும் தொழிலினை துணை தொழில் எனப்படும்.

## 10.1 சிறுதொழில் என்பதன் குணங்கள்

குறிப்பு

1. உரிமையாளர்
2. மேலாண்மை கட்டுபாடுகள்
3. இடவமைப்பு
4. தொழில்நுட்பம்
5. நெகிழ்வு தன்மை
6. வளங்கள்
7. பகுதியளிக்கும் பகுதிகள்

## 10.2 சிறு தொழில் வளர்ச்சியின் நோக்கம்

1. வேலைவாய்ப்பு உருவாக்கம்
2. பொருளாதார மேம்பாடு
3. பின்தங்கிய பகுதிகள்
4. வளங்களை பகிர்ந்தளித்தல்
5. வாழ்க்கை தர மேம்பாடு
6. சமமான வளர்ச்சி

## 10.3 தொழில் வளர்ச்சியில் SSI - யின் பங்கு

1. பெரிய அளவில் வேலைவாய்ப்பினை உருவாக்குகின்றது.
2. பேரளவு உற்பத்தியினை செய்கின்றது.
3. பேரளவு ஏற்மதிக்கான வாய்ப்பு
4. உள்நாட்டு வளங்களை பயன்படுத்தல்
5. சமூக நலனை மேம்படுத்தல்

**1.பேரளவு உற்பத்தி**

சிறுதொழில் வளர்ச்சியின் மிக முக்கியமான குணம் யாதெனின் பெரிய அளவில் உற்பத்தியினை செய்கின்றது.

இதன்மூலம் உற்பத்தி மேம்பாடு சமூக மேம்பாடு ஆகியவற்றை சிறு தொழில் வளர்ச்சியின் மூலம் நிலைநாட்டப்படுகின்றது.



**2 வேலை வாய்ப்பு உருவாக்கம்**

வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் பங்குகள் அதிகமாகும். அதிகமாக தொழில் துவக்குவதன் மூலம் பலர் வேலைவாய்ப்பினை பெறுகின்றனர். இதனால் படித்த, படிக்காத இளைஞர்கள் அதிகமாக வேலைவாய்ப்பினை பெறுகின்றனர்.

**3.பேரளவு ஏற்றுமதி**

நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஏற்றுமதியினை சார்ந்ததாக அமைகின்றது. அதிக உற்பத்தி ஏற்றுமதி நடவடிக்கையினை ஊக்குவிக்கிறது. பல சிறு தொழில்கள் ஒன்று சேர்ந்து ஒரு கப்பலை வாடகைக்கு எடுத்து ஏற்றுமதி செய்கின்றது.

**4.வளங்கள் பயன்பாடு**

உள்நாட்டு வளங்களை பயன்படுத்தி உற்பத்தியினை மேம்படுத்தலாம். இதனை அடுத்து வேலைவாய்ப்பு பெருக்கமும்,பொருளாதார வளர்ச்சி, சமூக மேம்பாட்டிற்கும் சிறு தொழில் வளர்ச்சியானது துணை செய்கின்றது.

## 10.4 சிறுதொழில் வளர்ச்சியில் உள்ள பிரச்சனைகள்

1. போதுமான நிதி வசதியின்மை
2. சந்தை தொடர்பான பிரச்சனைகள்
3. மூலப்பொருட்கள் பற்றாக்குறை
4. தொழில்நுட்ப அறிவு குறைவு
5. போட்டிகள்
6. இடப்பற்றாக்குறை

7. வசதிகள் குறைவு
8. குறைவான பயன்பாடு
9. குறைவான திட்டத்தின் வளர்ச்சி
10. திறன்னற்றவர்கள்

## 10.5 சிறு தொழில் வளர்ச்சியில் அரசின் பங்கு பணிகள்

இந்தியாவில் சிறுதொழில் வளர்ச்சியின் பங்கு 40மூ ஆகும். அரசானது பல கொள்கை திட்டங்களை வகுத்து சிறு தொழில் வளர்ச்சியினை மேம்படுத்துகின்றது.

## 10.6 அரசின் கொள்கை தீர்மானங்களும், சிறுதொழில் வளர்ச்சியும்

**1.தொழிற்சாலை கொள்கை தீர்மானம் 1948**

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் மேம்பாட்டிற்கான தொழில் கொள்கை வகுக்கப்பட்டது.

1. வேலைவாய்ப்பு பெருக்கம்
2. உள்ளுர் வளங்களை பயன்படுத்துதல்
3. 1948 ஆம் ஆண்டு கொள்கையின் நோக்கம் ( பாதுகாப்பு ஆகும்)
4. குடிசை தொழில் உள்ளுர் தொழிலினை மேம்பாடு அடைய செய்தல்
5. பொருளாதார பெருக்கம் அடைய செய்தல்

**2.தொழிற்சாலை கொள்கை IPR 1956**

பொருளாதார பெருக்கத்தினை மேம்பாடு அடைய செய்ய நீண்ட கால திட்டமிடுதலோடு ஆரம்பிக்கப்பட்டது. இக்கால கட்டத்தில் ஐந்தாண்டு திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த கால கட்டத்தில் சமூகம் பொருளாதார மேம்பாட்டினை முக்கியாக கவனம் செலுத்தப்பட்டது.

**தொழில் கொள்கை 1956 IRP மூன்று முக்கிய பகுதிகள்**

பட்டியல் A : அரசு தொழிற்சாலையினை துவங்குதல்

பட்டியல் B : தனியார் தொழிற்சாலை ஆரம்பித்தல்

பட்டியல் C : வருங்கால மேம்பாட்டு தொழிற்சாலை

**குறிப்பு**

1955 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கார்வே கமிட்டியின் பரிந்துரை

1. மூலப்பொருட்கள் மேலாண்மை
2. தொழிற்சாலை விரிவாக்கம்
3. சிறு தொழிற்சாலைக்கு சலுகை வழங்குதல்
4. கிராம தொழிற்சாலை மேம்பாடு

**3.தொழிற்சாலை கொள்கை (1977)**

நாட்டின் பிற்பட்ட தொழிற்சாலை இல்லாத பகுதிகளில் சிறு, குறு தொழிற்சாலைகள் மற்றும் குடிசை தொழிற்சாலைகளை ஏற்படுத்துதல் இந்த கொள்கையின் நோக்கம் ஆகும்.

**4.தொழிற்கொள்கை IPR 1980**

இக்கொள்கையின் நோக்கம் சிறிய தொழில் மேம்பாட்டிற்கு அடுத்ததாக உள்ள நடுத்தர கால தொழிற்சாலைகளை மேம்பாடு அடைய செய்தல் ஆகும்.

## 10.7 1977 கொள்கையின் சிறப்பு அம்சங்கள்

1. 504 பொருள்களை பாதுகாக்கப்ட்ட பொருட்களாக அறிவிக்கப்ட்து.
2. மாவட்ட தொழில் மையம உருவாக்குதல்
3. தொழில் நுட்பத்தினை மேம்பாடு அடைய செய்தல்
4. தர நிர்ணயம், சந்தை ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.

குறிப்பு

**இக்கொள்கையின் சிறப்பு அம்சங்கள்**

- குடிசை தொழிற்சாலையின் மூலதனம் 1 முதல் 2 இலட்சமாக உயர்த்தப்பட்டது.
- சிறு தொழிற்சாலையின் மூலதனம் 10 இலட்சத்தில் இருந்து 20 இலட்சமாக உயர்த்தப்பட்து
- துணை தொழிற்சாலையின் மூலதனம் 15 இலட்சத்தில் இருந்து 25 இலட்சமாக உயர்த்தப்பட்து
- நுண்ணிய திட்டங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது
- பொருளாதார மேம்பாடு, பிற்படுத்தப்பட்ட பகுதிகளின் தொழில் வளர்ச்சியும் இதன் நோக்கமாகும்.
- சந்தை வளர்ச்சியினை அடைய செய்தல்
- கடன் கட்டுபாடுகளை நீக்கச் செய்தல்
- விவசாயம் சார் பொருட்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.
- தொழிற்சாலை கொள்கை 1990

சிறு தொழிற்சாலைகளை மேம்பாட்டிற்கு என 1990 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இக்கொள்கையின் நோக்கமாக வேலைவாய்ப்பு உருவாக்கம் குடிசை தொழில் மேம்பாடு ஆகும்.

**இக்கொள்கையின் சிறப்புகள்**

1. சிறு தொழில் மூலதனம் 35 இலட்சத்திலிருந்து 60 இலட்சமாக உயர்த்தப்பட்டது
2. துணை தொழிற்சாலைகள் மூலதனம் 45 இலட்சத்திலிருந்து 75 இலட்சமாக உயர்த்தப்பட்டது
3. 836 பண்டங்களை காப்பு பண்டங்களாக அரசு நிர்ணயித்துள்ளது.
4. பிற்பட்ட பகுதி வளர்ச்சி, வேலைவாய்ப்பு பெருக்கமும் இதன் நோக்கமாகும்.
5. SIDC தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டன.
6. இக்கால கட்டத்தில் சிறு தொழில் மேம்பாட்டிற்கு என்று 1990 ஆம் ஆண்டு (SIDBI) உருவாக்கம் செய்யப்பட்டது.

7. மற்ற தொழிற்சாலை கொள்கை
    1. தொழிற்சாலை கொள்கை தீர்மானம் (1991) (அடிப்படை கட்டமைப்பு மேம்பாடு)
    2. தொழிற்சாலை கொள்கை தீர்மானம் (2000) (பிரதம மந்திரி வேலைவாய்ப்பு திட்டம் உருவாக்கப்ட்டது. )
    3. தொழிற்சாலை கொள்கை தீர்மானம் (2001-02) (கடன் கட்டுபாடுகளை நீக்குதல்)
    4. தொழிற்சாலை கொள்கை தீர்மானம் (2005-06) (கைவினை தொழிற்சாலை மேம்பாடு)
    5. நுண்ணிய சிறிய நடுத்தர தொழிற்சாலை மேம்பாடு 2006

இக்கொள்கையானது சிறிய தொழிற்சாலைகளை மேம்பாடு அடைய செய்ய பல துறை தொழில் நுட்ப வளர்ச்சியினை மேம்பாடு அடைய செய்தது.

## 10.8 தொழிற்சாலை நலிவடைய செய்தல்

தொழிற்சாலை நலிவு என்பது பல வருடங்களாக தொடர்ந்து தொழிற்சாலை நட்டத்தில் செயல்படுவது என்பதாகும். மேலும் தொழிற்சாலை நொடிப்பு என்பது கடனை திருப்பி செலுத்த இயலாமை நடைமுறை மூலதனத்தினை பெருக்க இயலாமை, கடன் கொடுத்தோர் தொகை தொடர்ந்து உயர்ந்து வருவது நிறுவனம் நொடிப்பு நிலைக்கு செல்கின்றது என்பது பொருளாகும்.

## 10.9 தொழிற்சாலை நொடிப்பு நிலைக்கு இயல்புகள்

1. சமூக பொருளாதார காரணிகள்
2. வெளியேறுதல் வேறுபாடுகள்
3. உலகளாவிய பிரச்சனைகள்
4. கண்ணுக்கு புவனாகும் அறிகுறிகள்

5. முன்பு பின்பற்றிய அணுகுமுறைகள்
6. கீழ் இறங்கும் இலாபம் கட்டங்கள்

குறிப்பு

## 10.10 தொழிற்சாலை நொடிப்பு நிலையின் காரணங்கள் (Causes of sickness of Enterprise)

1. உட்புற காரணிகள்
2. வெளிபுற காரணிகள்

**வெளிபுற காரணிகள்**

1. சந்தை தொடர்பான சிக்கல்
2. தேவை குறையும் பொழுது
3. போட்டி பண்டங்களின் நெருக்கடி
4. அளிப்பு குறைவு
5. அரசு கொள்கை
6. பிற காரணிகள்

**அகக் காரணிகள்**

1. திட்டமிட தவறுதல்
2. முழுமை பெறாத நிறுவனம்
3. மேலாண்மை தொடர்பான பிரச்சனை
4. நிதி பிரச்சனைகள்
5. தொழிலாளர் பிரச்சனைகள்

## 10.11 தொழில் நிறுவனங்கள் நொடிப்பு நிலையினால் ஏற்படும் விளைவுகள்

- நிதி நிறுவனங்கள், வங்கிகள் திவால் நிலை
- வேலைவாய்ப்பு இன்மை
- வளங்கள் வீணடிப்பு
- அரசின் வருவாய் இழப்பு

- எதிர்மறையான தொழில் பகுதிகள்
- தொழில் முனைவோர், முதலீட்டாளர் பாதிப்பு

குறிப்பு

## 10.12 தொழிற்சாலை நலிவினை தவிர்க்கும் வழிமுறைகள் (Remedial of sickness of Enterprise)

- ✓ மூலப்பொருட்கள் வளங்களை உறுதி செய்தல்
- ✓ தடை காரணிகளை நீக்குதல்
- ✓ தடையற்ற நடைமுறை முதல் கிடைக்க உறுதி செய்தல்
- ✓ அரசின் கொள்கை முடிவுகளில் சீர்திருத்தம்
- ✓ மின்சாரம், குடிநீர், எரிபொருள் வளர்ச்சியனை உறுதி செய்தல்
- ✓ சந்தை முன் கணிப்பு
- ✓ சூழ்நிலையினை கட்டுபடுத்துதல்
- ✓ போட்டியினை முன்திட்டமிடல்
- ✓ தொடர்ச்சியான அளிப்பு பொருட்களை உறுதி செய்தல்
- ✓ முன் கணிப்புடன் செயல்படல்

# அலகு – 11

குறிப்பு

11.1 தொழில் முனைவோருக்குஉதவும் அமைப்புகள்

11.2 ஊக்குவித்தல்

11.3 ஊக்கத்தின் குணங்கள்

11.4 ஊக்கத்தின் வகைகள்

11.5 ஊக்குவிப்பு செயல்முறைகள்

11.6 ஒரு நிறுவனத்தினை துவங்க தொழில் முனைவோருக்கு தூண்டுதலான காரணிகள் எவை

11.7 தொழில் முனைவோரின் தொழில் துவங்களுக்கான காரணிகள்

11.8 தொழில் முனைவோரின் ஊக்கத்தினை சோதித்தறிதல்

11.9 பெண் தொழில்முனைவோருக்கான முன்னேற்றும் அமைப்பகங்கள்

11.10 இந்திய பெண்கள் அறக்கட்ளை (WTI )

11.11 தொழில் முனைவோருக்கு என உருவாக்கப்பட்ட பாதைகள்Phase of Enterprenur Development programme

11.11.1 மாவட்டதொழில் மையம்

11.11.2 .சிறுதொழில் சேவைஅமைப்பு

11.11.3. தேசியசிறுதொழில் அமைப்பு

11.11.4. சிறுதொழில் மேம்பாட்டுஅமைப்பு

11.11.5 இளந் தொழில் முனைவோருக்கான இந்திய துணை அமைப்பு ( NAYE)

11.11.6 காதி கிராம தொழில் வாரியம் (KVIC)

11.11.7 தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில் நுட்பம் ஆலோசனை வழங்கும் அமைப்பு( ITCOT)

11.11.8 தொழில் முனைவோருக்குவழிகாட்டும் அமைப்பு (EGB)

11.11.9 தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் சலுகைகள், மானியங்கள

11.12 தொழில் முனைவோருக்கு ஏற்படும் பிரச்சனைகள

11.13 தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் சலுகைகள், மானியங்கள்

11.13.1 பெண் தொழில் முனைவோர் மற்றும் கிராம தொழில் முனைவோருக்கான மேம்பாட்டுதிட்டங்கள்

11.13.2 பெண் தொழில் முனைவோர் மற்றும் கிராமதொழில் முனைவோருக்கானதிட்டங்கள

11.14 . தொழில் முனைவோர் ஊக்குவிப்பு

குறிப்பு

## தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கு என ஏற்படுத்தப்பட்ட பொதுவான அமைப்புகள்

இந்தியாவில் தொழில்முனைவோர்க்கு உதவிசெய்வதற்கு எனஅரசு சார்ந்த பலஅமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தஅமைப்புகள் தொழில் முனைவோருக்கான பல சிறப்பு செயல்திட்டங்களை வகுத்து பல சலுகைகள் மற்றும் உதவிகள் செய்கின்றன. மேலும் இந்தஅமைப்புகள் மத்திய மற்றும் மாநிலஅரசுகளின் மூலம் நிதிசலுகைகளை பெற ஏதுவாக வழிவகை செய்கின்றன. தொழில் முனைவோருக்கு அவர்களின் அறிவு, மனப்பான்மை மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு பயிற்சி மற்றும் மேம்பாட்டை வழங்குவதற்காக நமது நாடு பல்வேறு கீழ்கண்ட மையங்கள் அல்லது நிறுவனங்களை அல்லது நிறுவனங்களை அமைத்துள்ளது.

### தொழில் முனைவோருக்குஉதவும் அமைப்புகள்

- மாவட்டதொழில் மையம் ( DIC)
- சிறுதொழில் மேம்பாட்டுஅமைப்பு( SIDCO)
- தேசியசிறுதொழில் வளர்ச்சிஅமைப்பு( NSIC)

**குறிப்பு**

- ○ சிறுதொழில்கள் சேவைஅமைப்பு( SISI)
- ○ இளந் தொழில் முனைவோருக்கான இந்தியதுணைஅமைப்பு
- ○ ( NAYE)
- ○ காதிகிராமதொழில் வாரியம் ( KVIC)
- ○ தமிழ்நாடுதொழில் மற்றும் தொழில் நுட்பம் ஆலோசனைவழங்கும் அமைப்பு( ITCOT)
- ○ தொழில் முனைவோருக்குவழிகாட்டும் அமைப்பு( EGB)

**ஊக்குவித்தல்**

- ஊக்கத்தின் குணங்கள்
- ஊக்கத்தின் வகைகள்
- ஊக்குவிப்பு செயல்முறைகள
- ஊக்க கோட்பாடுகள்
  - ➢ மெக்லிலேண்ட் கோட்பாடு
  - ➢ மாஸ்லோ கோட்பாடு
- தொழில் முனைவோரின் தொழில் துவங்களுக்கான காரணிகள்
- தொழில் முனைவோரின் ஊக்கத்தினை சோதித்தறிதல்
- பெண் தொழில்முனைவோருக்கான முன்னேற்றும் அமைப் பகங்கள்
- ➢ சுய உதவிக் குழுக்கள் ( SHG)
- ➢ இந்திய பெண்தொழில்முனைவோர் கூட்டமைப்பு ( FISW)
- ➢ இந்திய பெண்கள் அறக்கட்ளை ( WTI )
- ➢ சிறு தொழில் மேம்பாடு வங்கி ( SIDBI )
- ➢ SIDO சிறு தொழில் மேம்பாடு அமைப்பகம்
- ➢ CEWI ( இந்திய பெண் தொழில்முனைவோர் கூட்டமைப்பு)
- ➢ பெண்கள் சுய வேலைவாய்ப்பு முகமை ( SEWA)
- தொழில் முனைவோருக்கு என உருவாக்கப்பட்ட பாதைகள்
- மாவட்டதொழில் மையம்

குறிப்பு

- சிறுதொழில் சேவைஅமைப்பு
    - தேசியசிறுதொழில் அமைப்பு
    - சிறுதொழில் மேம்பாட்டுஅமைப்பு
    - இளந் தொழில் முனைவோருக்கான இந்தியதுணைஅமைப்பு
    - காதி கிராம தொழில் வாரியம் ( KVIC)
    - தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில் நுட்பம் ஆலோசனை வழங்கும்
    - அமைப்பு( ITCOT)
    - தொழில் முனைவோருக்குவழிகாட்டும் அமைப்பு(EGB)
- தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் சலுகைகள், மானியங்கள்
- தொழில் முனைவோருக்குஏற்படும் பிரச்சனைகள்
- பெண்தொழில் முனைவோர் மற்றும் கிராமதொழில் முனைவோருக்கான மேம்பாட்டுதிட்டங்கள்
- பெண் தொழில் முனைவோர் மற்றும் கிராமதொழில் முனைவோருக்கானதிட்டங்கள்
- தொழில் முனைவோர்கள் எங்கனம் ஊக்குவிப்புகள்

## 11.1 தொழில் முனைவோருக்குஉதவும் அமைப்புகள்

I. மாவட்டதொழில் மையம் ( DIC)

II. சிறுதொழில் மேம்பாட்டுஅமைப்பு( SIDCO)

III. தேசியசிறுதொழில் வளர்ச்சிஅமைப்பு( NSIC)

IV. சிறுதொழில்கள் சேவைஅமைப்பு( SISI)

V. இளந்தொழில்முனைவோருக்கான இந்தியதுணைஅமைப்பு ( NAYE)

VI. காதிகிராமதொழில் வாரியம் ( KVIC)

குறிப்பு

VII. தமிழ்நாடுதொழில் மற்றும் தொழில் நுட்பம் ஆலோசனைவழங்கும் அமைப்பு( ITCOT)

VIII. தொழில் முனைவோருக்குவழிகாட்டும் அமைப்பு( EGB)

## 11.2 ஊக்குவித்தல்

ஊக்குவித்தல் Motivation என்ற சொல் motive என்ற இலத்தின் சொல்லில் இருந்து சொல்லில் இருந்து பிறந்தது. இதன் பொருள் னசளைந என்ற உந்தம் என்ற சொல்லில் இருந்து வந்ததாகும்.

**ஊக்கம் (Motivation) என்ற சொல்லின் கூறுகள்**

1. உந்தம்
2. நடத்தை
3. இலட்சியம்

கூன்ஸ்டோனல் என்பவரின் கூற்றுப்படி ஊக்கம் என்பது உந்தம், விருப்பட், தேவை ஆகியவற்றை கொண்ட தொகுப்பாகும்

**மெக்லிலேண்ட்** : விருப்பம், உந்தம், அவாவு நிலை ஆகியவற்றை ஒரு நோக்கத்தினை குறிக்கோளாக வைத்து திருப்பி விடுதல் ஆகும்.

## 11.3 ஊக்கத்தின் குணங்கள்

1. ஊக்கம் என்பது ஒரு முழுமை பெற்ற தொகுப்பாகும். ஆனால் இது ஒரு தனிபிரிவு என கூற இயலாது.
2. ஊக்கம் என்பது ஒரு நிதிசார்புடையவை எனவும் நிதிசார்ப்பற்றவையாகவும் கருதலாம். அதவாது ஊக்கப்படுத்துவதில் பணம் சார்புடையவை என்பமு ஒருவரை அகசார்ந்து அவரின் மன எண்ணங்களை மேம்படுத்தும் வகையில் நற்சொல்லினை வழங்குதல் ஆகும். இது

குறிப்பு

அவரின் மனதினை மேம்படுத்தும் வகையில் இருத்துதல் அவசியமாகும்.

3. ஊக்கம் நேத்மறையாகவும் எதிர்மறையாகவும் இருக்கலாம். இதன்படி ஒரு பணியாளருக்கு போனஸ். ஊக்கத்தொகை வழங்குவது நேர்மறை ஊக்குவிப்பு எனப்படும். மேலும் தண்டனை பணிமாற்றம், சலுகை நிறுத்தி வைப்பு ஆகியவை எதிர்மறை ஊக்குவிப்பு எனப்படும்.
4. ஊக்கம் என்பது உளவியல் கருத்து மனப்பான்மை எண்ணங்கள், நாட்டம் விருப்பம் முயற்சிகள் ஆகியவை உளம் சார்ந்தது. இதனை தொட்டுணர முடியாது எனலாம். இதனை போல் ஊக்குவிப்பு என்பது ஒருவரின் உளவியல் சார்புடையவை எனலாம்.
5. ஊக்கம் என்பது ஒரு தொடர்செயல்முறையாகும். தொழில் முனைவோரை தொடர்ந்து ஊக்கப்படுத்துதல் வேண்டும். இதனை தொடர் செயல்முறை எனலாம். ஒரு நிலையில் ஊக்கம் முடிவுறுவது இல்லை.

## 11.4 ஊக்கத்தின் வகைகள்

1. **நிதி சார்ந்த ஊக்குவிப்புகள்**
    - பணம் சார்ந்தவை
    - பொருள் சார்ந்தவை
    - தொட்டுணரக்கூடியவை
2. **நிதி சார்புடையவை அல்லாத ஊக்குவிப்பு**
    - பணிபாதுகாப்பு
    - சவாலான பணிகள்
    - பணி அங்கீகாரம்
    - சரியான பணி கவுவரம்
    - வாய்ப்புகளை மேம்படுத்துதல்

**வெளிபுற ஊக்குவிப்புகள்**

- காப்பீட்டு பணி செய்தல்
- ஊதிய உயர்வு
- நன்மைகள் உயர்த்துதல்

**3. புற சார்புடையவை ஊக்குவிப்புகள்**

- முடிவெடுக்கவிடுதல்
- பணியின் வரம்பினை உயர்த்துதல்
- பொறுப்புமையாக்குதல்

**4. எதிர்மறை ஊக்குவிப்புகள்**

- பயத்தினை உருவாக்குதல்
- பணியிரக்கம்
- வேலையில் இருந்து நீக்குதல்
- ஊதியத்தினை பிடித்தல்
- தண்டனை வங்குதல்


**5. நேர்மறை ஊக்குவிப்பு**

- பணி உயர்வு
- ஊதிய உயர்வு

**ஊக்குவிப்பு செயல்முறைகள்**

ஊக்கம் என்பது தனிமனிதனின் ஆர்வத்தினை சார்ந்த ஒரு உந்தம் ஆகும்.

## 11.5 ஊக்குவிப்பு செயல்முறைகள்




1. **ஒருங்கிணைப்பு செய்தல்** : இது ஊக்கம் என்பது முதல் செயல்முறைகள். இதில் தனக்கு தேவையான ஒரு செயலினை தேர்ந்தெடுத்து அதில் தனது அனைத்து முயற்சிகளையும் ஒரு திசையில் நோக்கி திருப்பி விடுதல் என்பதாகும்.
2. **வழியினை உருவாக்குதல் :** ஒரு நோக்த்தினை அடைய ஒரு வழியினை தேர்ந்தெடுத்தல் அதனை கொண்டு தான் மேற்கொண்ட முயற்சியினை அடைதல் என்பதாகும்.
3. **நோக்கம் நிறைவடைதல் :** இதன்படி ஒரு முயற்சி அல்லது நோக்த்தினை தேர்ந்தெடுத்து அதனை அடையும் வழிமுறையினை தேர்ந்தெடுத்து பல செயல்முறைகளை கொண்டு நோக்கம் நிறைவடைய செய்தல் என்பதாகும்
4. **புதிய தேவையினை கண்டுபிடித்தல்** என்பது ஒரு நோக்கம் தேர்ந்தெடுத்தபிறகு அதனை ஆர்வத்துடன் முயற்சி மேற்கொண்டு நோக்கத்தினை நிறைவேற்றுதல் என்பதாகும். அதன்பிறகு அடுத்த நோக்கத்தினை கொண்டு அடுத்த முயற்சியினை தேடுதலும் அதன் பிறகு அடுத்த வழியினை கண்டுபிடித்தலாகும்.

**5. ஊக்க கோட்பாடுகள்**

- மெக்லிலேண்ட் கோட்பாடு
- மாஸ்லோ கோட்பாடு

மனிதனின் ஊக்கம் என்பதனை இரண்டு உளவியாளர்கள் இரு வேறுவிதமாக பிரிக்கின்றனர். இவர்கள் மனிதனின் நடத்தியினை அடிப்படையாக கொண்டு ஊக்கத்தினை பிரித்து அதன் செயல்முறையினை விளக்குகின்றனர்.

குறிப்பு




மெக்லிலேண்ட் கோட்பாட்டின் படி முதலில் மனிதன் மனதில் ஒரு உந்தம் ஏற்படுகின்றது. அது மேலும் உயர்வடைந்து நடத்தையாக மாறுகின்றது. பிறகு நடத்தை நோக்கமாகவும் மாறுகின்றது. உந்தம் என்பது ஒரு செயலினை நோக்கி முன்னேறி செய்ய முதவ் படியாகும். அடுத்து உந்தம் ஏற்பட்டவுடன் அதற்கான நடத்தை உருவாகின்றது. நடத்தை என்பது உந்தம் ஏற்பட்ட பிறகு செயலுக்கு தேவையான எண்ணங்களை உருவாக்குதல் ஆகும். பிறகு நடத்தையானது நோக்கத்தினை வழியாக பின்பற்றி முன்னேற்றம் அடைந்து வெற்றி பெறுகின்றது. மேக்லிலேண்ட் கோட்பாட்டின் படி ஊக்கம் என்பது சூழற்சியான செயல்முறையாகும்

**1 ஆபிரகாம் மாஸ்லோ ஊக்க கோட்பாடுகள் அல்லது ஊக்கத் தேவை கோட்பாடு**

ஒரு மனிதனுக்கு தேவையான அனைத்து வகையான உடல் சார்ந்த தேவைகள் முக்கியமான ஒன்றாகும். அதன்படி உயிர் வாழ தேவையான உணவு, நீர், காற்று, உறக்கம் ஆகியவை மனிதனின் அடிப்படையான தேவைகள் ஆகும். மேலும் இது நிறைவு பெற்ற பிறகு தான் அடுத்த தேவை உருவாகின்றது. மேலும் இதனை அடிப்படை தேவைகள் எனவும் அழைக்கலாம். இது மனிதன் உயிர்வாழ தேவைகளாக கருதப்படுகின்றது.

**2.பாதுகாப்பு தேவைகள் :**

தொழில் நிறுவனத்தில் முதலில் தேவையான உணவு நீர் காற்று ஆகிய அடிப்படை தேவை நிறைவு பெற்ற பிறகு பாதுகாப்பு தேவை தோன்றுகிறது. தொழில் நிறுவனத்தில் உரிய பாதுகாப்பு

விதிமுறைகளை பின்பற்றி தொழில் நடவடிக்கை மேற்கொண்டால் பாதுகாப்பு தேவை நிறைவேறுகின்றது. பாதுகாப்பு உணர்வு இல்லாத பொழுது மனிதனின் தேவை நிறைவு பெறாது எனலாம்.

குறிப்பு

**3.அன்பு தேவைகள் :**

மனிதனின் அன்பு தேவை என்பது பரிவு காதல் இன்பம் ஆகியவை அன்பு தேவையில் அடங்குகின்றது. இது மனிதனின் மூன்றாவது தேவையாக கருதப்படுகின்றது.

**4.தன்னிறைவு தேவைகள் :**

மனிதக் அடுத்த மனிதனுக்கு கொடுக்க கூடியதான தேவை சுய மதிப்பு தேவை எனப்படும். சுயமரியாதை, சுய மதிப்பு, உயர்நிலைகள் அங்கிகாரம், பலம், சுதந்திரம் ஆகியவை சுயமதிப்பு தேவைகளில் அடங்குகின்றது. மேலும் இது மனிதனின் நான்காவது தேவைகளாக கருதப்படுகின்றது.

**5.சுய சார்பு தேவைகள்:**

சுய சார்பு தேவை என்பது நன்னடத்தை, படைப்பாற்றல், ஏற்புடைய தன்மை, அனுபவம், நோக்கம், ஆர்வம், தகுதிகள் ஆகியவை சுயசார்பு தேவைகளில் அடங்குகின்றது. இது மாஸ்லோவின் இறுதி தேவையாக கருதப்படுகின்றது.

## 10.6 ஒரு நிறுவனத்தினை துவங்க தொழில் முனைவோருக்கு தூண்டுதலான காரணிகள் எவை

பல்வேறு ஆய்வுகளின் படி ஒரு தொழில் முனைவோருக்கு தூண்டுதல் தரும் காரணிகள் பற்றி காண்போம்.

**1. அகக்காரணிகள்**

- ✓ கல்வியியல் பின்புலம்
- ✓ புதுமையாக்கல்
- ✓ சுதந்திரம்

குறிப்பு

- ✓ குடும்ப பின்புலம்
- ✓ தொழில்நுட்ப அறிவு
- ✓ அனுபவம்
- ✓

**2.புறக்காரணிகள்**

- ✓ அரசு சார்பான உதவிகள்
- ✓ நிதி நிறுவனங்களின் நிதி உதவி
- ✓ தொழில் பேட்டைகளில் இடம்
- ✓ இயந்திரங்களை வாடகை கொள்முதல் செய்தல்
- ✓ மூலப்பொருட்களை கிடைப்பமை
- ✓ பெரிய அமைப்புகளை உருவாக்குதல்
- ✓ பொருட்களின் தேவை அதிகமாக்கல்

## 11.7 தொழில் முனைவோரின் தொழில் துவங்களுக்கான காரணிகள்

**1.இலட்சிய காரணிகள்**

- ✓ பணம் ஈட்டுதல்
- ✓ குடும்ப சார்ந்த தொழில்முறைகள்
- ✓ சுய வேலைவாய்ப்புகள்
- ✓ சமூக சுயமதிப்புகள்
- ✓ வேலைவாய்ப்பினை உருவாக்கம்

**2.கட்டாயக் காரணிகள்**

- ✓ வேலைவாய்ப்பு குறைதல்
- ✓ பணியில் மனநிறைவு இல்லாமல் புதிய மனநிறைவான பணியினை தேர்ந்தெடுத்தல்
- ✓ அதிகமான நிதிகுவியலை பயன்படுத்தல்
- ✓ புதிய தொழில்நுட்ப அறிவினை பயன்படுத்தல்

✓ பெரிய குடும்பத்தினை நிர்வாகிக்க ஒரு தொழிலினை துவங்குதல்

குறிப்பு

**3.நவீனப்படுத்தல் காரணிகள்**

✓ சாதனை தொழில்முனைவோரின் கதைகளை வரலாற்றினை படித்தல்

✓ சார்ந்த துறையில் பணி அனுபவம்

✓ ஆலோசனை ஏற்றல்

✓ வேலைவாய்ப்பில் முன் அனுபவம்

ஆகியவை தொழில்முனைவோரை தொழில் துவங்க வைக்கும் காரணிகள்

**காக்கி நாட பரிசோதனை**

ஆந்திர மாநிலம் காக்கிநாடாவில் 1964 ஆம் ஆண்டு ஒரு ஆய்வினை 52 நபர்களை கொண்டு தடைகளை தகர்ப்பதில் ஊக்கத்தின் பங்களிப்பு ஒரு ஆய்வு நடத்தப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் ஹைகராபாத்தினை தலைமையிடமாக கொண்ட ஒரு தொழில் கூடத்தில் 3 மாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் 52 நபர்களை 3 குழுக்களாக பிரித்து பயிற்சியினை அளித்தனர்.

**இப்பயிற்சியானது ஊக்கத்தினை உள் ஆர்வத்தினை வளர்ப்பதற்கான காரணிகளை பற்றி விளக்குகின்றது.**

✓ தனி மனிதனின் உந்தம் பற்றி தினமுத் பின்புலத்தினை அறிந்து கொள்ளப்பட்டது.

✓ கலந்து கொண்டவர்களை சாதனையாளர்களாக முன்மாதிரியாக உருவாக்கியது.

✓ கலந்து கொண்டவர்கள் அவருக்கான நோக்கம் திட்டங்களை அவர்களே உருவாக்கி கொண்டனர்.

✓ நேர்மறை எண்ணங்கள் அதிகமாக உருவாக்கப்பட்டது.

குறிப்பு

கலந்து கொண்டவர்களின் நடத்தியினை இரண்டு ஆண்டுகளாக கவனிக்கப்பட்டது. இதில் அவர்களின் திறமைகள் மேம்பாடு அடைந்துள்ளது என கண்டறிப்பட்டது இவர்களுக்கு திறமை மதிப்பிடல் சோதனை ( வுயுவு) நடத்தப்பட்டது. இச் சோதனைகளில் அவர்களுக்கு சில வினா பட்டியல் கொடுக்கப்பட்டு திறமையினை கணக்கிடப்பட்டது.

மெக்லிலண்ட் என்பவரின் ஆய்வு படி தொழில் முனைவோருக்கு பயிற்சி என்பது நேர்மறை எண்ணங்களை வளர்க்கின்றன என இச்சோதனை முடிவில் கண்டறியப்பட்டது. இச் சோதனையில் சாதனை ஊக்கம் இளைஞர்களிடம் வளர்க்கப்பட்டு உள்ளது என கண்டறியப்பட்டது .

## 11.8 தொழில் முனைவோரின் ஊக்கத்தினை சோதித்தறிதல்

1. ஒருவரின் சாதனை ஊக்கத்திற்கு எது காரணியாக அமைந்தது என அவர்கள் கூறியது
2. நான் முடிவெடுக்கின்றேன்
3. நான் பிரச்சனைகளை சந்திக்கின்றேன்
4. சமூக இடைவெளியினை விடைகாண்கின்றேன்.
5. நான் சாதனையாளராக உணர்கின்றேன்.
6. நான் முன், பின் பத்தாண்டுகளுக்கான திட்டங்களை உருவாக்கி உள்ளேன்.
7. அனைத்து சிக்கலையும் நான் சமாளிக்கின்றேன்
8. தொடர் பிரச்சனைகளை நான் சமாளிக்கின்றேன். திடமான முடிவினை எடுக்கின்றேன்.
9. நான் மற்றவரை சார்ந்து இருக்கவில்லை.
10. நான் தொழிலினை எவ்வாறு மேம்பாடு அடைய செய்வது என்று ஆலோசனை செய்கின்றேன்.

## 11.9 பெண் தொழில்முனைவோருக்கான முன்னேற்றும் அமைப்பகங்கள்



### 1.சுய உதவிக் குழுக்கள் ( SHG)

சுயஉதவிக்குழு என்பது ஊரக பகுதிகளில் வேலைக்கு செல்லும் அல்லது வருமனம் ஈட்டும் பெண்கள் தங்களுக்குள் ஒரு குழுவினை ஏற்படுத்திக்கொண்டு அதில் அதிகபட்சம் 12 நபர்களுடன் ஒரு அமைப்பாக செயல்படுவதாகும். இதில் சுயஉதவிக்குழுக்களில் வார சந்தா, மாத சந்தா தொகை வசூல் செய்யப்பட்டு அருகில் உள்ள தேசியமாக்கப்பட்ட வங்கிகள் அல்லது கூட்டுறவு வங்கிகளில் குழுக்களின் பெயரில் கணக்கு துவங்க பெற்று அக்கணக்கில் சந்தா தொகை சேமிக்கப்படுகின்றது. இந்த சந்தா தொகையினை குழுக்களில் உள்ள மகளிருக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகின்றமு. இதில் தேவைப்படும் தொழில்முனைவோர் பெண்கள் கடன் பெற்று தொழில் துவங்க பெற்று பயன்பெறுகின்றனர்.

**சுய உதவிகுழுக்களின் பங்களிப்புகள்**

- ❖ காளான் வளர்ப்பு
- ❖ தேனீ வளர்ப்பு
- ❖ விவசாயம் சார் தொழில் துவங்குதல்
- ❖ உணவு பதனீடுதல்
- ❖ மண்புழு உரம் தயாரித்தல்
- ❖ வீட்டு உபயோக பொருட்கள் தயாரித்தல்

### 2.இந்திய பெண்தொழில்முனைவோர் கூட்டமைப்பு ( FISW)

நான்காவது பன்னாட்டு பெண்தொழில்முனைவோர் கூட்டமைப்பு ஹைதராபாத்தினை தலைமையிடமாக கொண்டு 1993 இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பு பல தொழில்முனைவோர்களை ஒரு கூட்டமைப்பாக செயல்பட்டது.

குறிப்பு

**FIWE இன் பணிகள்**

1 பெண்தொழில்முனைவோர் கூட்டமைப்பாக உள் நாட்டு மற்றும் பன்னாட்டு அமைப்பாக செயல்படுகின்றது.
2 தனது அங்கத்தினர்களுக்கு பலவிதமான ஆலோசனைகளை வழங்குகின்றது. தரப்படுத்தல், தர மேம்பாடு, சந்தையிடல்,ஏற்றுமதி மேலாண்மை ஆகியவற்றை செய்கின்றது. இது தொடர்பாக பல பயிற்சிகளை தருகின்றது.
3 இந்த அமைப்பானது பலவிதமான கண்காட்சி, பொருட்காட்சி, மாநாடுகள் ஆகியவற்றை உள்நாட்டிலும் பன்னாட்டிலும் நடத்துகின்றது.
4 விரிவாக்கம் செய்ய தனது உறுப்பினர்களுக்கு உதவி செய்கின்றது.
5 பெண்தொழில்முனைவோருக்கு நவீன தொழில்நுட்பத்தினை கற்றுக்கொடுக்கின்றன.
6 புதிய தொழில் துவங்குவதற்கு நிதியியல் உதவியினை (FIEW) செய்கின்றன.

## 11.10 இந்திய பெண்கள் அறக்கட்டளை ( WTI )

இந்த அமைப்பினை 1968 ஆம் ஆண்டு கமலா தாபய்ஜீ என்பவர் தோற்றுவித்தார். இந்த அமைப்பு தோற்றுவித்ததக் முதன்மை நோக்கம் பெண்தொழில்முனைவோர்களுக்கு உதவி செய்தல் ஆகும். தொழில் பழக்கம் இல்லா பெண்தொழில்முனைவோருக்கு தையல் பயிற்சியினை இந்த அமைப்பு வழங்குகின்றது. பெண்கள் தினந்தோறும் வருமானம் ஈட்டுவதற்கு இந்த அமைப்பு வழிவகை செய்கின்றது. இதனால் அவர்களின் குடும்ப வாழ்க்கையும் பொருளாதார உயர்வும் ஏற்படுகின்றது. மும்பையில் பான் வெல் என்ற இடத்தில் 1983 ஆம்

குறிப்பு

ஆண்டு பெண்களுக்கு என்று ஒரு தங்கும் விடுதியினை ஏற்படுத்தியது.

பல்வேறு தொழில் திறனை மேம்பாடு அடைய செய்வதற்காக பயிற்சியினை அளிக்கின்றது. மும்பை மற்றும் பானுவெல் என்ற இடத்தில் வளர் இளம் பெண்களின் தொழில் துவங்குவதற்கு பல்வேறு ஆலோசனை மற்றும் பயிற்சியினை வழங்குகின்றது. றுஜவு யானது சில்லறை கடைகளை ஏற்படுத்தல் அதன் மூலம் பெண்தொழில்முனைவோருக்கு வேலைவாய்ப்பும் பயிற்சியும் அளிக்கின்றது. சமுதாயத்தில் தேவை மாற்றத்திற்கு ஏற்ப இந்த அமைப்பானது பல நடைமுறை செயல்திட்டங்களை வகுத்து பெண்தொழில்முனைவோருக்கு உதவி செய்து வருகின்றது. பொருளாதார பின்புலமற்ற பெண்தொழில்முனைவோருக்கு றுஜவு அமைப்பு பெருமளவு உதவி செய்கின்றனது.

**சிறு தொழில் மேம்பாடு வங்கி ( SIDBI )**

சிறு தொழில் மேம்பாடு வங்கியானது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட அமைப்பாக செயல்பட்டு வருகின்றது. இதன் நோக்கம் மாநில மற்றும் உள்நாட்டு அளவில் சிறு தொழிலினை மேம்படுத்துவதாகும். இது பெண் தொழில்முனைவோருக்காக இரண்டு நிதி திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

1. மகிளா உதயம் நிதி
2. மகிளா விகாஷ் நிதி

இந்த இரண்டு நிதி திட்டங்களும் பெண்களுக்கு தொழில் துவங்குவதற்கு உருவாக்கப்பட்ட சாதாரண நிதி திட்டங்கள் ஆகும். பெண் தொழில்முனைவோருக்கு என சிறப்பு திட்டங்களான நெய்தல், நூல் நூற்றல், தையல் செய்தல், வர்ண வேலைகள் செய்தல் அச்சு இடுதல் ஆகியவற்றிக்கு நிதி உதவியினை செய்கின்றன.

**கடன் திட்டங்கள்**

❖ நுண் கடன் திட்டம்

- ❖ சந்தை மேம்பாட்டு நிதி திட்டம்
- ❖ பெண் தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டங்கள்

குறிப்பு

**SIDO சிறு தொழில் மேம்பாடு அமைப்பகம்**

சிறு தொழில் மேம்பாட்டிற்கு என பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் இந்த அமைப்பானது பெண் தொழில் முனைவோருக்கு என பல்வேறு தொழில் துவங்க ஆலோசனைகளை வழங்குகின்றது.

**SIDO பணிகள்**

இதில் வழங்கப்படும் பெண்கள் தொழில் முனைவிற்கான பயிற்சிகள்

- ○ தொலைக்காட்சி பழுது பார்த்தல்
- ○ காலணிகள் தயாரித்தல்
- ○ நெசவு தொழில் வேலைபாடுகள்
- ○ மின்கல பெட்டிகள் தயாரித்தல் ( உசைஉரவை டிழயசன)

பெண் தொழில் முனைவோருக்கு ஒரு குழுவாக ஏற்படுத்தி ஒருங்கிணைப்பு செய்து உதவி செய்து வருகின்றன.

**CEWI ( இந்திய பெண் தொழில்முனைவோர் கூட்டமைப்பு)**

இந்த அமைப்பானது 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் பெண் தொழில் முனைவோர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தினை கற்று கொடுத்தல் ஆகும். தொழில்நுட்ப விரிவாக்கம், புதுமையாக செய்தல், பன்னாட்டு சந்தையுடன் தொடர்பு கொண்டு ஏற்றுமதி செய்தல், பன்னாட்டு ஏற்றுமதி இறக்குமதி சார்ந்த தொழில்முனைவோர்களை இணைக்கின்றன. பன்னாட்டு பெண்தொழில்முனைவோர் மேம்பாட்டு முகமையுடன் தொடர்பு கொண்டு உள்நாட்டு தரத்தினை மேம்படுத்துகின்றது.

**பெண்கள் சுய வேலைவாய்ப்பு முகமை ( SEWA)**

இது ஒரு பெண் தொழில்முனைவோருக்கு என உருவாக்கப்பட்ட பழமையான அமைப்பாகும். இந்த அமைப்பு இளைய பாட்டி என்ற அமைப்பின் மூலம் 1972 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இதில் ஆரம்ப கால உறுப்பினர்களின் எண்ணிக்கை 320 ஆகும். ஆனால் இது இப்போது 10 இலட்சத்திற்கும் மேல் கடந்து விட்டது. சேவா வங்கியின் மூலம் பெண் தொழில்முனைவோருக்கு நுண்ணிலை மற்றும் சிறு கடன்களை வழங்குகின்றது. 15 வயதினை கடந்த யாரும் பெண் தொழில்முனைவோராக உறுப்பினர் சேர்க்கையில் பெயர் இடம் பெறலாம். ஆண்டு உறுப்பினர் சந்தா கட்டணமாக ரு.3 வசூல் செய்யப்படுகின்றது. இது 10 ஆண்டுகளாக கட்டமைக்கப்பட்டு 20 ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றது.

**இதன் பணிகள்**

1. கூட்டுறவு மேம்பாடு
2. தொழிலாளர் மேம்பாடு
3. பெண்கள் மேம்பாடு

இந்த அமைப்பானது பன்னாட்டு பெண்கள் தொழில் முகமையுடன் தொடர்பு கொண்டுள்ளது. மேலும் சர்வதேச குழந்தைகள் நலநிதியம் ருஜேஊநுகு மற்றும் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ஐழுடு) ஆகியவற்றுடன் இணைந்து பணியாற்றுகின்றது. இதற்கான நிதியினை இந்திய அரசினால் வழங்கப்படுகின்றது. இல்ல தொழில் முனைவோருக்கு என ஒரு வலையமைப்பினை ஏற்படுத்தியுள்ளது.

## 11.11 தொழில் முனைவோருக்கு என உருவாக்கப்பட்ட பாதைகள்

## Phase of Enterprenur Development programme

குறிப்பு

- ○ முன்பயிற்சி பாதை
- ○ பயிற்சி பாதை
- ○ பயிற்சிக்கு பிந்தைய பாதை

**1. பயிற்சிக்கு முந்தைய பாதை**

- வாய்ப்பினை கண்டறிதல்
- திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- அடிப்படை தளவா வசதிகளை தயாரித்தல்
- ஆய்வு நடத்துதல்
- திட்டங்களை தயார் செய்தல்
- மின் சாதனங்களை பயன்படுத்துதல்
- ஒப்பங்களை உருவாக்குதல்
- ஊக்கப்டுத்துதல்
- நிதி திட்டங்களை உருவாக்குதல்
- பயிற்சி அளித்தல்
- தன்னார்வ அமைப்பினை பயன்படுத்துதல்
- முடிவெடுத்தல்
- மேலாண்மை செய்தல்
- பின் தொடர்ந்து செய்தல்

**2.பயிற்சி பாதை**

- முறையான பயிற்சி அளித்தல்
- திட்டங்களை மறுமதிப்பீடு செய்தல்
- தொலைபேசியின் மூலம் கண்காணித்தல்
- பயிற்சியாளர்களை சுயமாக கட்டுபாடு செய்தல்
- குழுவாக உரையாட செய்தல்
- பணியினை பின் தொடர்தல்

**3.பயிற்சிக்கு பிந்தைய பாதை**

- நன்முறையில் பயிற்சிக்கு பிறகு பாராட்டுதல்
- தொழில் முனைவோருக்கான பயிற்சி திட்டத்தினை வகுத்தல்

- தொழில் நுட்ப அறிவினை மேம்பாடு செய்தல்
- தொழில் முனைவோருக்கான சிறப்பு சலுகைகளை வழங்குதல்
- தொழில் முனைவோருக்கான நிதி சார்பு சலுகைகளை அளித்தல்
- திட்டங்களை மறுமதிப்பீடு செய்தல்

குறிப்பு

### 11.11.1 மாவட்டதொழில் மையம்

இது மாவட்டம் தோறும் அமைக்கப்பட்ட சிறு தொழில் முனைவோருக்கான அமைப்பு ஆகும். முதலில் மே 8 1978 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. மத்திய. மாநில அரசுடன் இணைந்து பல்வேறு தொழில் முனைவோருக்கான திட்டங்களை வகுக்க இது ஏற்படுத்தப்பட்டது. இதன் முதன்மைநோக்கம் சிறு, குறு,குடிசைதொழில் துவங்க ஏற்பாடு செய்ய ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். இதன் தலைமையிடம் மாநிலதலைமைநகரம் ஆகும்.

**இதன் பணிகள்**

- பொருளாதாரஆய்வு
- இயந்திரங்கள் கொள்முதல் செயல்
- கடன் வசதிஏற்படுத்தல்,தொழில் ஆய்வுசெய்தல்

**இதன் நோக்கம்**

- மாவட்டதொழில்கள் மேம்பாடு
- புதியதொழில் முனைவோரைஅடையாளம் காணல்
- பொருளாதாரசமன்பாடு,வேலைவாய்ப்புஉருவாக்கம்

### 11.11.2 . சிறுதொழில் சேவைஅமைப்பு

சிறுதொழில் சேவை அமைப்பானது பயிற்சி மற்றும் ஆலோசனைகளை தொழில் முனைவோருக்கு வழங்க ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும். இது 28 அமைப்பாகவும் மற்றும் 30 கிளைஅமைப்பாகவும் நாடுமுழுவதும் செயல்படுகின்றது.

குறிப்பு

**பணிகள்**

1. தொழில் நுட்பஆலோசனைவழங்குதல்
2. பொதுசேவைஅமைத்தல்
3. பயிற்சிஅளித்தல்,சோதனைசெய்தல்
4. சந்தைதொடர்பானஆலோசனை
5. பொருளாதாரம் தொடர்பானஆலோசனைவழங்குதல்

### 11.11.3. தேசியசிறுதொழில் அமைப்பு

இந்தஅமைப்பானதுமத்திய அரசால் 1995 ஆம் ஆண்டுதுவங்கப்பட்டது. இதன் தலைமையிடம் டெல்லியாகும். கிளைஅமைப்புமாநிலதலைநகரம் ஆகும்.

**பணிகள்**

- புரிந்துணர்வுஒப்பந்தத்தின் மூலம் கடன் வழங்கஏற்பாடுசெய்கின்றது.
- கடன் தரஅளவீட்டுபணியினைசெய்கின்றது.
- உண்டியல் கழிவுசெய்தல்
- சந்தைக்கானதகவல் வழங்குகின்றது.
- சிறு, குறு நடுத்தரதொழில்களுக்குஆலோசனைவழங்குகிறது.

### 11.11.4. சிறுதொழில் மேம்பாட்டுஅமைப்பு

ஒவ்வொருமாநிலத்திலும் மாநிலசிறுதொழில் அமைப்பு 1954 ஆம் ஆண்டுஏற்படுத்தப்பட்டது. இந்த அமைப்பானது ஒவ்வொருமாவட்டத்திலும் தொழில் பேட்டைகளை அமைக்க உதவி செய்கிறது.

**பணிகள்**

1. ஒருங்கிணைப்பு
2. சந்தைதொடர்பானஉதவி
3. துணைதொழில் வளர்ச்சி
4. ஆலோசனைவழங்குதல்

5. SII உடன் சேர்ந்து தொழில் முனைவோருக்கு உதவிசெய்கிறது.

குறிப்பு

**11.11.5 இளந் தொழில் முனைவோருக்கான இந்தியதுணைஅமைப்பு( NAYE)**

இந்தஅமைப்பின் துவக்கம் 1975

**பணிகள்**

- முதலீட்டுஆலோசனைவழங்குதல்
- மூலதனசந்தைக்கானஉதவிசெய்தல்
- பெண் தொழில் முனைவோருக்குஉதவிசெய்தல்
- கருத்தரங்கம் நடத்துதல்
- பொருளாதாரவாய்ப்புகளைஏற்படுத்துதல்

**11.11.6 காதி கிராம தொழில் வாரியம் ( KVIC)**

காதிகதர் தொழில் வாரியம்என்றஅமைப்பானது 1957 ஆம் ஆண்டுஏற்படுத்தப்பட்டது. இதன் முதன்மைநோக்கம் குடிசைதொழில் மேம்பாடுஆகும்.

**பணிகள்**

- அடையாளம் காணல்
- நிதிஉதவிசெய்தல்
- பயிற்சிஅளித்தல்
- சந்தைஆலோசனைவழங்குதல்
- முலப்பொருள் வழங்குதல்

**11.11.7 தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில் நுட்பம் ஆலோசனை வழங்கும் அமைப்பு( ITCOT)**

தொழில் மற்றும் தொழில் நுட்பம் வழங்குவதற்குஎன்றுஅமைக்கப்பட்ட இந்தநிறுவனம் 1979 ஆம் ஆண்டுதுவங்கப்பட்டது

**பணிகள்**

குறிப்பு

- திட்டஅறிக்கைதயாரித்தல்
- அடையாளம் காணல் ஆலோசனைவழங்குதல்
- முன்களப்பணிகள் செய்தல்
- கருத்தரங்கம் நடத்துதல்
- இணைப்புமற்றும் தத்தெடுப்புபணிகள் செய்கின்றது
- மறுசீரமைப்பிற்குஉதவுகின்றது

### 11.11.8 தொழில் முனைவோருக்குவழிகாட்டும் அமைப்பு(EGB)

இந்திய முதலீட்டு மைய அமைப்பானது இந்த தொழில் முனைவோருக்கான வழிகாட்டும் அமைப்பினை ஏற்படுத்தியது

**இதன் பணிகள்**

- தொழில் வாய்ப்புகளைகண்டறிதல்
- திட்டம் தேர்தெடுத்தல்
- நிதிஉதவிகள் செய்தல்
- தேவை,உற்பத்தி, மூலப்பொருளைவழங்குதல்
- கருவிகள் வழங்குதல்

### 11.11.9 தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் சலுகைகள், மானியங்கள்

மத்தியமாநிலஅரசுகள் மூலம் பலசலுகைகள், மானியங்களை பலவங்கிகள், நிதிநிறுவனங்கள் மூலம் தொடர்ந்து உதவி செய்கின்றது.

பொருளாதார கொள்கையின் படிதனியார் மயம், தாராளமயம், உலகமயத்தின் விளைவாக எல்லாவகையான தொழில்களையும் தொழில் முனைவோர்கள் செய்யபல செயல் திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வருகின்றது.

குறிப்பு

## 11.12 தொழில் முனைவோருக்கு ஏற்படும் பிரச்சனைகள்

1. தொழில் முனைவோருக்கு முதன்மையான சிக்கல் என்பது மூலதன பிரச்சனையாகும்.
2. சந்தைவாய்ப்புகள், மற்றும் சந்தை ஆராய்ச்சி தொடர்பான சிக்கல்கள் ஆகும்.
3. அதிகமான வரிவிதிப்பு
4. ஏற்றுமதி தொடர்பான பிரச்சனைகள்
5. சுற்று சூழல் தொடர்பானபிரச்சனைகள்
6. நடைமுறை முதல் திரட்டுதல், விதை நெல் திரட்டுதல் தொடர்பான பிரச்சனைகள்
7. அரசுகட்டுபாடுகள்

## 11.13 தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் சலுகைகள், மானியங்கள்

1. இந்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் மூலம் பலவகையான தீட்டங்கள் தீட்டி பலவிதமான சலுகைகளை தொழில் முனைவோருக்கு வழங்குகின்றது.
2. தொழில் முனைவோருக்கு நிதிசம்பந்தமாக ஏற்படும் பிரச்சனைகளுக்கு உத்திரவாத கடன் திட்டத்தின் முலம் கடன் வழங்குகின்றது.
3. முன்பணம், விதைநெல் போன்றவற்றை வங்கிகள் முலம் வழங்குவதற்காக கடன் திட்டங்களைஅரசுவகுக்கின்றது.
4. வட்டி மானியம் அளிக்கின்றது.
5. சுய உதவிகுழுக்களுக்கு கடன் வழங்கி புதியதொழில்களை உருவாக்குகின்றது
6. பெரியதொழில் திட்டங்களுக்கு IDBI, IFCI மூலம் கடன் வழங்கப்படுகின்றது.
7. DIC, KVICயின் மூலம் சிறு, குறு, குடிசை தொழில்கள் மூலம் இலாபம் பெறுவதற்குபயிற்சிஅளிக்கின்றது

குறிப்பு

8. சந்தை தொடர்பான தகவல்களை வழங்குகின்றது.
9. SEZ மற்றும் EPC மூலம் தொழில் முனைவோர்களுக்கு இடம் முதல் மற்றும் ஏற்றுமதிக்கு தேவையான தகவலை வழங்குகின்றது.
10. EXIM BANK மூலம் வெளிநாட்டில் வாணிபம் செய்வதற்கு ஏற்றுமதி இறக்குமதிகடன் கடிதம் மூலம் வசதிசெய்கின்றது.

### 11.13.1 பெண் தொழில் முனைவோர் மற்றும் கிராம தொழில் முனைவோருக்கான மேம்பாட்டுதிட்டங்கள்

பெண் தொழில் முனைவோர் என்பவர் மொத்தமுதலீட்டில் 50%மேல் பங்களிப்பு கொண்ட ஒரு பெண்ணை பெண் தொழில் முனைவோர் என்றுஅழைக்கலாம். மேலும் கிராமதொழில் முனைவோர் என்பவர் கிராமங்களில் வசதி குறைவான, பிற்படுத்தப்பட்ட மற்றும் பட்டியல் இன மக்களுக்கு பொருளாதார மேம்பாட்டிற்கு எனஅந்த பகுதியிலேயே அங்கு உள்ளவர்களை பயன்படுத்திதொழில் துவங்கவைப்பது கிராமதொழில் முனைவோர் எனப்படுவர்.

### 11.13.2 பெண் தொழில் முனைவோர் மற்றும் கிராமதொழில் முனைவோருக்கானதிட்டங்கள்

1. தேனிவளர்ப்புதிட்டங்கள் : இதில் மொத்தகடனில் பெண்களுக்கு50 மூமானியம் வழங்கப்படுகின்றது
2. பட்டுவளர்ப்பு,காளான் வளர்ப்புபோன்று சுய தொழில் திட்டங்களுக்கும் கடன் திட்டங்கள் உள்ளன.
3. கூட்டுறவுசங்கங்களின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குகடன் மானியம் வழங்கப்படுகின்றது.
4. பழங்குடியினர் பகுதியில் உள்ள பெண்களுக்கு விவசாயம் சார்ந்த பண்ணை தொழில் முனைவுக்கு ஏற்பவும், நவினமயமாக்கப்பட்ட பொருட்களை விற்பதற்கும் கடன் வழங்கப்படுகின்றது.

5. மூலிகைசோப்புகள், ஆடை தயாரிப்பு, காலனி தயாரிப்பிற்கு எனவும் முஏஜஊ யின் மூலம் கடன் திட்டங்கள் உள்ளன.
6. தாட்கோ மூலம் பட்டியல் இனத்தவருக்கு தொழில் துவங்குவதற்கு கடன் வழங்கவும் அதற்கான மானியம் வழங்கப்படுகின்றது. மேலும் தொழில் துவங்கிய பிறகு ஏற்படும் சந்தை வாய்ப்புகளை பற்றிய ஆராய்ச்சி தகவல்களை வழங்குகின்றது.
7. குடிசை தொழிலுக்கு என சிறு வணிக கடன்களை வழங்குகின்றது. இதில் அப்பளம், ஊறுகாய் ஊதுபத்தி தயாரிப்பதற்கு என கடன் வழங்கப்படுகின்றது.

## 11.14 . தொழில் முனைவோர் ஊக்குவிப்பு

தொழில் முனைவோருக்கு என்று அகம் மற்றும் புறத்தின் வாயிலாக ஊக்கம் வழங்குவதை சுய தொழில்முனைவோர் ஊக்குவிப்புகள் எனப்படும்.

**தொழில் முனைவோர்கள் எங்கனம் ஊக்குவிப்பு செய்யப்படுகின்றனர்**

1. **நிதிசார்ந்தஊக்குவிப்புகள்**

- வட்டிமானியம் வழங்குதல்
- சந்தை வாய்ப்பினை பற்றிய தகவல்களை வழங்கப்படுகின்றது.
- சிறப்பு திட்டத்தின் மூலம் மூலப்பொருட்களை வழங்கி ஊக்குவிப்பு செய்யப்படுகின்றது.
- தொழில் மறு சீரமைப்பிற்கு என தனியாக ஒரு அமைப்பு ஏற்படுத்தி அதன் மூலம் நலிந்த தொழில்களை மீட்டு எடுக்கின்றது.

குறிப்பு

- சமூக மற்றும் பொருளாதார திட்டத்தின் மூலம் ஏற்படும் இடர்களுக்கு தீர்வு காண காப்பீட்டு திட்டங்களை வகுத்து உதவி செய்கின்றது.
- வரி மானியம்,வட்டிசலுகைகளை வழங்குதல்
- விற்பனை வரிசலுகை, வருமானவரி சலுகைகளை வழங்குகின்றது.

**2. நிதிசாரா ஊக்குவிப்பு**

சிறப்பாக செயல்படும் தொழில் முனைவோருக்கு மத்திய மாநிலஅரசு விருதுகளை வழங்கி ஊக்குவிப்பு செய்கின்றது. சிறந்த தொழில் முனைவோர்களை தேர்ந்தெடுத்து புதிய தொழில் முனைவோருக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்படுகின்றது. புதிய தொழில் முனைவோர்களுக்கு கருத்தரங்கம், மாநாடுகள் நடத்தி புதிய முயற்சிகளை ஊக்குவிப்பு செய்கின்றன.

# அலகு – 12

குறிப்பு

**தொழில் முனைவோரும் வெகுமதியினை அறுவடை செய்தலும்**

12.1 அறுவடை வெகுமதிகள் வெளியேறும் உத்திகள்

12.2 அறுவடை வெகுமதிகள் வெளியேறும் படிவங்கள்

## தொழில் முனைவோரும் வெகுமதியினை அறுவடை செய்தலும்

தொழில் முனைவோர்கள் தொழிலினை நடத்துவதில் ஆர்வமாக உள்ளனர். ஒரு விவேகமான உத்தியின் மூலம் தொழில்களை நடத்தி அதற்கான பரிசுகளை பெறுகின்றனர். சேவைதொழில், வியாபாரதொழில்கள் மூலம் பண வெகுமதிகளை பெறுகின்றனர். புதிய கண்டுபிடிப்புகள் மூலம் புதிய தொழில்களை துவக்கி அதற்கு பிறகுஅதற்கான வெகுமதிகளை அறுவடை செய்கின்றனர்.

ஒருதொழில் முனைவோர் என்பவர் ஒருதொழில்களை துவக்கி பல கட்டங்களை தாண்டி உச்சநிலையினை அடைந்து வீழ்ச்சி நிலையினை காணும் பொழுது தொழிலை விட்டு விலகி விடுகின்றனர்.

தொழில் முனைவோர்கள் வெகுமதியாக சந்தையில் அதிகமான இடத்தினை பிடித்து அதிகமான இலாபத்தினை பெறுகின்ற பிறகு புதிய தொழில் போட்டியால் சந்தையில் இடம் குறைந்து இலாபம் வீழ்ச்சியடைய துவங்குகின்றது. அதன் பிறகு தொழில் முனைவோர் சந்தையை விட்டு விலகி விடுகின்றனர்.

ஒருதொழில் முனைவோர் பல நுட்பங்களை பயன்படுத்தி அதிகமான இலாபத்தினை பெறுகின்றனர். பிறகுதொழில் சிக்கல் சூழ்நிலையினை சந்திக்கும் பொழுது புத்திசாலிதனமாக இலாபத்துடன் வெளியெறிவிட வேண்டும்.

## 12.1 அறுவடை வெகுமதிகள் வெளியேறும் உத்திகள்

குறிப்பு

ஒருதொழில் முனைவோர் சரியான இலாபத்துடன் வெளியேறு உத்திகளை தெரிந்து கொள்ள வேண்டும்.

1. புதிய யோசனைகள் செய்தல்
2. தெளிவான முன்னறிவு
3. நற் பெயரை உருவாக்குதல்
4. வணிக வங்கியர் சேவையினை பயன்படுத்தல்
5. ஆலோசனை பெறுதல்

## 12.2 அறுவடை வெகுமதிகள் வெளியேறும் படிவங்கள்

1. பொதுவில் செல்வது
2. இணைத்தல் மற்றும் கையகப்படுத்துதல்

# அலகு- 13

குறிப்பு

## தொழில் முனைவோருக்கான திட்டங்கள்

13.1 TRYSEME (இளையோருக்கு சுய வேலைவாய்பிற்கான பயிற்சி)

13.2 SEEUY (கிராமபுற இளையோர்க்கான தொழில் முனைவோருக்கான கல்வி)

13.3 திட்டத்தின் நோக்கங்கள்

13.4 தொழில் பேட்டைகள் அமைத்தல்

13.5 தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டங்கள்

13.6 விதை முதல் (seed capital)

13.7 பிற்படுத்தப்பட்ட பகுதிகளின் வளர்ச்சி

13.8 மின்சார சலுகை

13.9 தற்போதைய நிலை

### தொழில் முனைவோருக்கான திட்டங்கள்

நமது நாட்டில் பல்வேறு தொழில் முனைவோருக்கான திட்டங்கள் உள்ளன. அவற்றை பயன்படுத்தி புதியதாக தொழில் முனைவு செய்வோர் புதிய தொழிவினை துவங்கலாம். பல அரசால் ஏற்படுத்திய பிரத்தியேக பயிற்சி அமைப்புகள், வணிக வங்கிகள் பல்வேறு வகையில் தொழில் முனைவோரை ஊக்குவிக்கின்றன.

### 13.1 TRYSEME (இளையோருக்கு சுய வேலைவாய்பிற்கான பயிற்சி)

இதில் மாவட்ட தொழில் மையம் முக்கியமான பங்கு வகிக்கின்றது. பல தொழிலினை துவங்கும் முன்பு அது தொடர்பான பயிற்சியினை மாவட்ட தொழில் மையம் கொடுகின்றது.

**குறிப்பு**

இதன்படி நன்றாக நடக்கின்ற பல்வேறு தொழில் நிறுவனங்களை தேர்ந்தெடுக்கின்றன. அதில் புதிய தொழில் தொடர்பான பயிற்சியினை அளிக்கின்றது. பயிற்சியின் பிறகு அது தொடர்பான அறிவினை பெற்ற தொழில் முனைவோர் தொழில் தொடங்குகின்றனர்.

## 13.2 SEEUY (கிராமபுற இளையோர்க்கான தொழில் முனைவோருக்கான கல்வி )

இத்திட்டத்தின் படி கிராமபுற தொழில் செய்ய இளையோர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் கிராம வறுமையினை போக்குகின்றது.

## 13.3 திட்டத்தின் நோக்கங்கள்

1. புதிய தொழில் முனைவோரை அடையாளம் காணுதல்
2. அடையாளம் காணப்பட்ட தொழில் முனைவோருக்கு பயிற்சி அளித்தல்
3. திட்டம் தொடர்பான ஆய்வு முடிவுகளை அளித்தல்
4. தொழில் துவங்க விதை முதலியன அளித்தல்
5. வணிக வங்கிகளுடன் ஒப்பந்தம் செய்தல்
6. தளவாட வசதி, இடவசதி, கருவிகளை கொள்முதல் செய்ய உதவி செய்தல்
7. சந்தை வாய்ப்புகளை பற்றி தகவல் அளித்தல்
8. தொழில் விரிவாக்கத்திற்கு உதவி செய்தல்
9. தொழில் துவங்க இடர்பாடுகளை அகற்றுதல்
10. தொழில் போட்டியினை சமாளித்தல் , வெளிநாட்டு சந்தை பங்களிப்பிற்கு உதவி செய்தல்
11. அரசு மானியங்கள், சலுகைகளை பெற உதவி செய்தல்
12. வறுமையை அகற்றுதல்
13. பொருளாதார மேம்பாடு

14. மறுசீரமைப்பிற்கு உதவி செய்தல்

15. இணைத்தல், ஒன்று சேர்ந்தலுக்கு உதவுதல்

SEPUP (நகர்புற இளையோர்களுக்கான சுய வேலாவாய்ப்பு திட்டங்கள்)

கிராமபுற இளையோர்களை பயன்படுத்தி தொழில் முனைவோரை உருவாக்குதல் போன்று நகர்புற இளையோர்களுக்கு பலவிதமான பயிற்சிகளை அளித்து வணிக வங்கிகள் மூலம் கடன் உத்திரவாதம் அளித்து புதிய தொழில்களை இத்திட்டத்தின் மூலம் துவங்க ஏற்பாடு செய்யப்படுகின்றது.

இத்திட்டத்தின் படி பயிற்சி அளித்தல், கடன் ஏற்பாடு, நிதியுதவி, சந்தை தகவல் அளித்தல் மூலம் புதிய தொழில் திட்டங்கள் துவங்கப்படுகின்றன.

## 13.4 தொழில் பேட்டைகள் அமைத்தல்

மாவட்ட சிறு தொழில் வளர்ச்சி கழகத்தின் மூலம் இந்த தொழில் பேட்டைகள் உருவாக்கப்படுகின்றன. இதன் படி தனி தொழில், தொடர் தொழில் என்ற இரு வகையில் இந்த தொழில் பேட்டைகள் உருவாக்கப்படுகின்றன. தனி தொழில் என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஒன்றுக்கொன்று தொடர்பாகவும், பல தொகுதிகளை தொகுப்பு எனப்படும். தொடர் தொழில் எனப்படுபவை ஒரு தொழில் உடன் மற்றோர் தொழில் மூலப்பொருள் இருக்குமாயின் அது தொடர் தொழில் எனப்படும். ( எ.கா. பருத்தியாலை, நூல் தொழில், துணி சாயமிடல், ஆயத்த ஆடை தயாரித்தல்)

## 13.5 தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டங்கள்

1. சொர்ண ஜெயந்தி சுய வேலைவாய்ப்பு திட்டம்.
2. பிரதம மந்திரி கிராம சுய வேலைவாய்ப்பு திட்டம்
3. தாட்கோ நிதி உதவி திட்டங்கள்

4. சுய உதவி குழு கடன் திட்டம்
5. காதி கிராம தொழில் திட்டம்

குறிப்பு

## 13.6 விதை முதல் (seed capital)

தொழில் துவங்க ஆரம்பிக்க தொழில் உரிமையாளரால் இடப்படும் முதல் விதை முதல் எனப்படும். விதை முதலினை பல வங்கிகள் கடனாக அளிக்கின்றன. அதன்படி ஐனுடீஐஇ ஐகுஊஐஇ ஐஊஐஊஐஇ ர்னுகுஊஇ ளுஐனுடீஐஇ னுஐஊ யின் மூலம் விதைப்பணம் கடனாக வழங்கப்படுகின்றன.

1. 25 வருடங்களுக்கு திருப்பி செலுத்துகின்ற வகையில் ஐகுஊஐ கடன் வழங்குகிறது.
2. கடனீட்டு பத்திரங்களுக்கு ரனெநசறசவைவைபெ என்ற ஒப்புறுதி வழங்குகிறது.
3. குத்தகையிடுதல், கருவிகளை வாங்குதல், காலம் தவறிய கடன் இவற்றிக்கு IFCI உதவி செய்கின்றது.
4. தொழில் முனைவோருக்கு இடர்மூலதனம் 1975 ஆம் ஆண்டு முதல் வழங்குகின்றது.
5. மகளிர் தொழில் முனைவோருக்கு வட்டி உதவி திட்டங்களை வழங்குகின்றது IFCI
6. மூலதன சொத்து வாங்க, விரிவாக்கம் செய்ய நவீனமயமாக்க சீரமைக்க IDBI கடன் உதவிகளை வழங்குகின்றது.
7. IDBI யின் மூலம் கடன் உத்திரவாதம் அளிக்கின்றது.
8. 3 மற்றும் 10 ஆண்டுகளில் திருப்பி செலுத்துகின்ற வகையில் கடன் வழங்குகின்றது ஐனுடீஐ
9. IDBI யானது சிறப்பு நிதி உதவி திட்டம் மூலம் கடன் வழங்குகிறது.
10. ஏற்றுமதியாளருக்கு மறுநிதியாக்கம் மூலம் கடன் வழங்குகின்றது.

11. மென் கடன் திட்டத்தின் மூலம் னைடிை யானது சணல், சர்க்கரை, சிமெண்ட் தொழிற்சாலைக்கு கடன் வழங்குகின்றது.
12. 1984 நவீன மென்கடன் திட்டத்தினை IDBI வழங்குகின்றது.
13. நாணயக் கடன், ஒப்புறுதி அளித்தல் துணிகர மூதலீடுகள் மூலம் கடன் வழங்குகிறது.

விதை முதலினை நீண்ட காலம், குறுகிய காலம், மத்திய கால கடனை வழங்குகிறது வங்கிகள். முதலில் தொழில் முனைவோருக்கு முதலாவதாக வரும் சிக்கல் யாதெனில் தொழில் துவங்குவதற்கு கடன் பெறுவதாகும். இதில் பல வணிக வங்கிகள் தொழில் நிறுவனங்கள் ஆரம்பம் செய்து அதில் தகவல் அறிக்கை வெளியிட்டு நிதி திரட்ட பல வணிக வங்கிகள் கடன் உதவி செய்கின்றன.

மூலதன மானியம் என்பது வழங்கப்பட்ட கடனில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் மானியமாக வழங்கப்படுகின்றது. அதன்படி கடனை குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பி செலுத்தும் தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் மானியம் மூலதன மானியம் எனப்படும்.

கீழ்கண்ட தொழில்கள் மூலதன மானியம் பெற தகுதியான தொழில்கள்

1. மின்னணு பொருள் உற்பத்தி செய்யும் நிறுவனம்
2. தோல் தயாரிப்பு தொழிற்சாலைகள்
3. மருந்து மற்றும் அழகு சாதன பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை
4. காற்றாலை மின்சாரம் தயாரித்தல்
5. தங்கம், வைரம் ஏற்றுமதி நிறுவனங்கள்
6. மாசு கட்டுபாட்டு கருவிகள் தயாரிப்பு
7. விளையாட்டு பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள்
8. கட்டிட பொருள் தயாரிப்பு நிறுவனங்கள்
9. ஆயத்த ஆடை தயாரிப்புகள்

**குறிப்பு**

10. உணவு பதப்படுத்துதல்
11. நெகிழி பொருள் தயாரிப்பு
12. ரப்பர் தயாரிப்பு

தமிழ் நாட்டில் மேற்கண்ட தொழில்சாலைகள் மட்டுமே மூலதன மானியம் பெறமுடியும். மேற்கண்ட நிறுவனங்கள் தங்கள் தொழிற் சாலை விரிவாக்கம், மேம்படுத்தலுக்கும் கடன் வழங்குகின்றது. மொத்த முதலீட்டு மதிப்பில் 25% மூலதன மானியமாக வழங்கப்படுகின்றது. மற்றும் ஆண்டு மொத்த வரவு செலவு அல்லது உற்பத்தியில் 25%மானியமாக வழங்கப்படுகின்றது.

1. மூலதன மானியம் பெறுவதற்கு அனைத்து நுண் உற்பத்தியாளருக்கும் தகுதி உண்டு. எந்த மாநிலத்தில் தொழில் துவங்கினாலும் இந்த மூலதன மானியம் பெற தகுதி உண்டு.
2. 25மூ வட்டாரங்களில் இச்சலுகையினை பயன்படுத்தி சிறிய நடுத்தர தொழில் சாலைகள் உருவாக்கப்பட்டன.
3. விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகள் 385 வட்டரங்களில் மூலதன மானியச்சலுகையினை பயன்படுத்தி உருவாக்கப்பட்டு உள்ளன.
4. சுரங்க தொழில், சர்க்கரை ஆலை தொழில், சிமெண்ட் தொழிற்சாலை, பட்டாசு தொழில், கோழிப்பண்ணை, நைலான் தயாரிப்பு போன்றவற்றிக்கு மூலதன மானிய சலுகைகள் பெற தகுதி இல்லை.
5. மூலதன மானிய சலுகை என்பது ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலைக்கு மட்டுமே வழங்கப்படுகின்றது. ஏனெனில் அத் தொழில்சாலைகள் அதிக மாசு ஏற்படுத்தாமலும், அதிகமான பொருளாதார வருமானத்தினை ஈட்டுவதாலும் இச்சலுகை வழங்கப்படுகின்றது.

## 13.7 பிற்படுத்தப்பட்ட பகுதிகளின் வளர்ச்சி

குறிப்பு

பிற்படுத்தப்பட்ட பகுதிகளின் வளர்ச்சி என்பது ஒரு மாநிலத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட தொழிற்சாலை இல்லாத மாவட்டங்களில் வளம் குறைந்த பகுதிகளில் தொழிற்சாலைகள் அமைப்பதே பிற்படுத்தப்பட்ட பகுதிகளின் வளர்ச்சியாகும்.

### SIPCOT தமிழ்நாடு சிறுதொழில் மேம்பாட்டு கழகம்

இத்திட்டத்தின் மூலம் ஒரு மாவட்டத்திற்கு ஒரு ஸிவை தொழிற்சாலைகள் உருவாக்கிட தமிழ்நாடு அரசு திட்டம் வகுத்து செயல்படுத்தி வருகின்றது. அதன் ஒரு பகுதியாக சிறு தொழிற்சாலைகளை ஒரு குறிப்பிட்ட வளம் குறைந்த மனித வளம் அதிகமாக உள்ள பகுதியில் தொழிற்சாலை அமைக்கப்படுகின்றது. புதிய தொழில் முனைவோர் தொழில் துவங்கிட இங்கு அனைத்து வசதிகளும் செய்யப்படுகின்றது. அதன்படி தண்ணீர் வசதி, சாலைவசதி, இட வசதி, மின்சார வசதி, மாசு கட்டுபாடு தடையின்மை போன்ற சிறப்பு சலுகைகளை வழங்கி தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கின்றது.

### SIDCO (சிறு தொழில் மேம்பாடு கழகம்)

இந்நிறுவனம் அரசால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் பல தொழில் பேட்டைகள் பல்வேறு இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. சென்னையில் உள்ள அம்பத்தூர் தொழில் பேட்டை இதற்கு உதாரணம் ஆகும். சிட்கோ தொழில் பேட்டைகள் தொழில் முனைவோர்களையும் ஊக்கம் செய்து தொழிற்சாலைகளை ஆரம்பம் செய்ய ஏற்பாடு செய்கின்றன. இதன்மூலம் பிற்படுத்தப்பட்ட பகுதியில் பொருளாதார வளர்ச்சி கூடுகின்றது.

குறிப்பு

**விற்பனை வரி சலுகை**

விற்பனை வரி சலுகை என்பது பொருளினை உற்பத்தி செய்து சந்தையில் விற்கப்படும் பொருள்களுக்கு போடப்படும் வரி விற்பனை வரியாகும். இந்த வகை வரியானது தொழில்சாலையில் முடிவு பொருட்களுக்கு விதிக்கப்படுகிறது. இதனில் புதிய தொழில் முனைவோருக்கு பல்வேறு வகையான விற்பனை வரி சலுகைகள் வழங்கப்படுகின்றன.

1. சிறப்பு பொருளாதார மண்டலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருளுக்கு முழுவரிவிலக்கு 3 முதல் 5 ஆண்டுகளுக்கு அளிக்கப்படுகின்றது.
2. உள்ளூர் சந்தையில் விற்காமல் வெளிநாடு ஏற்றுமதி செய்யவும் அனுமதி வழங்கப்படுகின்றது.
3. விற்பனை வரி செலுத்தும் பொழுது அதனில் சிறப்பு சலுகைகள் மூலம் 10 முதல் 20மூ குறைவாக கணக்கிட்டு பெறப்படுகின்றன.
4. உணவு பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் பொருட்களில் விற்பனை வரி முழுவதும் நீக்கப்படுகின்றது.
5. விற்பனை வரி சலுகையினை மேலும் விரிவு படுத்தவும் விற்பனை வரியினை தொழில்முனைவோருக்கு குறைக்கவும் திட்டம் வகுத்து செயல்படுத்தி வருகின்றது.

## 13.8 மின்சார சலுகை

மத்திய, மாநில அரசுகள் தொமில் முனைவோருக்கு மின்சார சலுகைகள் வழங்குகின்றன. அதன்படி மொத்த மின்நுகர்வில் 50% சலுகையும் அல்லது ருபாய் 20000 சலுகையும் வழங்கப்படுகிறது. மேலும் 50000 ருபாய் அல்லது 75% சலுகையும் சில குறிப்பிட்ட தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன.

காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கப்பட்டு அதனை தொழில்முனைவோருக்கு வழங்கப்படுகிறது. பல தொழில் நிறுவனங்கள் காற்றாலை மின்சாரத்தை பயன்படுத்தி தொழில் செய்யவும் அதனை உபரியாக உள்ள மின்சாரத்தை அரசுக்கு விற்கவும் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. மேலும் அதிக மானியத்துடன் காற்றாலை மின்சாரத்தை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க அரசு ஊக்கப்படுத்துகின்றது.

## 13.9 தற்போதைய நிலை

அரசு மூலம் பல திட்டங்கள் செயல்படுத்தி தொழில் முனைவோரை ஊக்கப்படுத்துகின்றது. மாநில அரசு மற்றும் மத்திய அரசு, வணிக வங்கிகள், வியாபார வங்கிகள் தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தி செயல்பட்டு வருகின்றது. குறிப்பாக PMRY, SIDCO, DIC இவை மூன்றும் தொழில் முனைவோருக்கு பெரிய அளவில் ஊக்குவிக்கும் நிறுவனங்கள் ஆகும்.

# அலகு – 14

குறிப்பு

## தொழில் முனைவோர் கலாச்சாரம்

14.1 கலாச்சாரம்
14.2 தொழில் முனைவோர் கலாச்சாரம்
14.3 கலாச்சாரத்தின் வகைகள்
14.4 கலாச்சாரத்தின் கூறுகள்
14.5 கலாச்சாரத்தின் பண்புகள்
14.6 தொழில் முனைவோர் சமுதாயம்
14.7 தொழில் முனைவோர் சமுதாயத்தின் பண்புகள்
14.8 அகத்தொழில்முனைவோர் முக்கியத்துவமும் தேவையும் மற்றும் எல்லைகள்

**தொழில் முனைவோர் கலாச்சாரம்**

## 14.1 கலாச்சாரம்

கலாச்சாரம் என்பது ஒரு குறிப்பிட்ட பழக்க வழக்கம் வழி வழியாக பின்பற்றி வருவது கலாச்சாரம் எனப்படும்.

## 14.2 தொழில் முனைவோர் கலாச்சாரம்

ஒரு தொழில் முனைவோர் பழக்கம், யோசனைகள் மற்றும் அணுகு முறைகள் ஆகியவை ஒரு தலைமுறையில் இருந்து மற்றோர் தலைமுறைக்கு பரவுதலை தொழில் முனைவோர் கலாச்சாரம் எனப்படும்.

## 14.3 கலாச்சாரத்தின் வகைகள்

1. பொருள்சார் கலாச்சாரம்
2. பொருள்சாரா கலாச்சாரம்

மெக்லிலேண்ட் கூற்றுபடி மனித நடவடிக்கை சமூகரிதியாகவும், மரபணுக்கள் ரீதியாகவும் பரவுகின்றது.



## 14.4 கலாச்சாரத்தின் கூறுகள்

1. இது ஒட்டு மொத்தமானது.
2. தலைமுறை விட்டு தலைமுறை பரவுகின்றது.
3. தனிமனிதன் பண்புகள் சார்ந்தது கலாச்சாரம்.
4. இது அறிவு, நம்பிக்கை, பழக்க வழக்கம், சட்டம் ஆகியவற்றை சார்ந்தது.
5. கலாச்சாரம் ஆளுமையினை தீர்மானிக்கும் காரணியாகவும் விளங்குகின்றது.
6. தொழில் முனைவோர் கலாச்சாரம் உறுதியான மனித நடவடிக்கையினை சார்ந்ததாகும்.
7. மனிதனால் உருவாக்கப்படும் பொருட்களில் கலாச்சாரம் பிரதிபலிக்கிறது.
8. தொழில் முனைவோர் கலாச்சாரம் மற்ற துணை கலாச்சார நடவடிக்கைகளை உள்ளடக்கியது.
9. தொழில் தர்மம், வணிக கலாச்சாரம், வணிக நெறிமுறைகள் ஆகியவை இவற்றுள் அடங்குகின்றது.

## 14.5 கலாச்சாரத்தின் பண்புகள்

1. அபராதம் குறைத்தல், சிக்கல் தீர்த்தல், சட்டத்தினை மீறுதலை தவிர்ப்பதற்காக கலாச்சாரம் பயன்படுகின்றது.
2. செயல் மீறலை சரி செய்ய உதவுகின்றது.
3. தலைவர்களை தேர்ந்தெடுத்தல், சரியான முடிவெடுத்தலுக்கு கலாச்சாரம் உதவுகின்றது.
4. வணிக மதிப்புகளை அடையாளம் காண கலாச்சாரம் உதவுகின்றது.

குறிப்பு

5. வணிக நெறிமுறைகள் நிறுவனத்தின் கலாச்சாரத்தினை மேம்படுத்துகின்றது.
6. கலாச்சாரம் நம்பிக்கை மற்றும் அனுமானங்கள் அடிப்படையிலானது.
7. கலாச்சாரம் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கின்றது.

## 14.6 தொழில் முனைவோர் சமுதாயம்

தொழில் முனைவோர் சமுதாயம் என்பது தொழில் முனைவோர்கள் சேர்நத ஒரு அமைப்பினை குறிக்கின்றது.

பொதுவாக சமுதாயம் என்பது என்று அல்லது அதற்கு மேம்பட்ட மக்களின் குழுவின் தொகுப்பினை குறிக்கின்றது.

## 14.7 தொழில் முனைவோர் சமுதாயத்தின் பண்புகள்

1. ஒன்று போன்ற பல தொழில் முனைவோர்கள் தங்களுக்குள் ஏற்பட்ட சிக்கலை போக்குவதற்காக ஒரு தொகுதியாக இணைகின்றனர்.
2. தொழில் முனைவோர்கள் சமுதாயத்தின் மூலம் வரவிருக்கும் அபாயங்கள் போக்கபடுகின்றனது.
3. ஒரே வகையான பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில் முனைவோர்கள் போட்டியினை தவிர்க்க இச்சமுதாயம் உதவுகின்றது.
4. தொழில் நிறுவனங்கள் தங்களுக்குள் உதவி செய்து கொள்ள இது உதவுகின்றது.
5. புதிய துணைப்பிரிவினை தயாரிக்க இது உதவுகின்றது.
6. நிறுவனத்தின் நீண்ட கால வளர்ச்சியினை ஊக்குவிக்க இச்சமுதாயம் உதவுகின்றது.
7. இலாபம் ஈட்டுவதை உதவி செய்கின்றது.

## 14.8 அகத் தொழில் முனைவோர்

குறிப்பு

தொழில் முனைவோர்களை இரு வகையாக பிரிக்கலாம்.

1. அகத்தொழில் முனைவோர்
2. புறத்தொழில் முனைவோர்

**புறத் தொழில் முனைவோர்:**

தனது சொந்தமான நிலம், உழைப்பு, மூலதனம், அறிவு உடைமையினை பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக தொழிலினை வழிநடத்தி செல்வதும், அதில் ஏற்பட்ட இலாபம், நட்டம் இவற்றிக்கும் இந்த புறத்தொழில் முனைவோரே பொறுப்பு ஏற்கின்றனர்.

**அகத்தொழில் முனைவோர் :**

இவர் புறத்தொழில் முனைவோருக்கு என தனது அறிவினை பயன்படுத்தி உழைப்பவர் அகத்தொழில் முனைவோர் எனப்படுவர். இவருக்கு நிறுவனத்தின் இலாபம் நட்டம் இவற்றை இவர் ஏற்பது இல்லை. மேலும் ஊதியம் மட்டுமே இவர் பெறுகின்றனர்.

அகத்தொழில் முனைவோர் நிலம், மூலதனம் ஆகியவற்றை தொழிலில் ஈடுபடுத்துவது இல்லை. புதுமையான செயல்கள், சிந்தனைகளை ஆகியவற்றை தொழிலில் உட்புகுத்துகின்றனர். இவர் ஒரு முதலாளிக்கு கீழ் வேலை செய்யும் ஒரு தொழிலாளியாக விளங்குகின்றனர்.

தொழிலில் ஏற்படும் அனைத்து இடர்கள் இவரை சாராது. புதிய கருத்துகள், செயல்கள் இவற்றை இவர் உருவாக்குகின்றனர்.

**அகத்தொழில்முனைவோர் முக்கியத்துவமும் தேவையும் மற்றும் எல்லைகள் பற்றிய விளக்கம்.**

1. அகத்தொழில்முனைவோர் என்பவர் புதுமை புனைபவர் ஆவார்.

குறிப்பு

2. அகத்தொழில்முனைவோர் ஒவ்வொரு தொழில் நிறுவனத்திலும் பணியாற்றுகின்றனர்.
3. அகத்தொழில்முனைவோர் பிறரை சார்ந்து பணியாற்றுபவராக விளங்குகின்றனர்.
4. அகத்தொழில் முனைவோர் நிதி முதலீட்டு பணிகளில் ஈடுபடுவது இல்லை.
5. புதுமையான செயல்கள் மூலம் தன்னை அறிமுகப்படுத்துவர்.
6. எல்லா தொழில் முனைவோரும் தன்னுடைய அறிவினையும், பிறர் அறிவினையும் பயன்படுத்தி தொழில் செய்யலாம்.
7. இடர் ஏற்பு என்பது குறைவாக இருக்கும்.
8. வணிகத்தின் உண்மையான உரிமையாளர் இல்லை.
9. இவர் உட்புறத்தில் இருந்து பணியாற்றுகின்றனர்.
10. தொழிலில் புதுமையினை புகுத்துவதே இவரின் வேலையாகும்.
11. தொழில் முனைவோரின் அறிவு, திறமையினை இங்கு பிரதிபலிக்கின்றது.